Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24

ரூபா 30.00

ஜூன் 18 - 24, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1123

## நல்லாட்சியை உலுப்பும் 20ஆவது திருத்தம்





## ஏ → மாற்றும் தலைமைகளும் → மாறும் மக்களும்

## கோடையெனும் கொடுமை

## எட்டு வருடங்களும் விடியாத கிழக்கும்



## ௐ கோவில் பிரசாதத்தை எப்படி சாப்பிட வேண்டும்

ஆலயங்களில் பண்டிகைகளை முன்னிட்டு பிரசாதங்கள் கொடுப்பது வழக்கம். எண்ணற்ற விசேஷங்களுக்கு பிரசாதம் வழங்குவர்.

சர்க்கரைப் பொங்கல் போன்ற பிரசாதங்களை வாங்கும்பொழுது தன் கைகளில் உள்ள பிரசாதத்தை வாயினால் சாப்பிடுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். அது சரியானது அல்ல. விலங்குகள் தான் வாயினால் கவ்விச் சாப்பிடக் கூடியவை. ஏனென்றால் அவைகளுக்கு கைகளால் எடுத்து வாய்க்குள் வைத்துக் கொள்ள தெரியாது. ஆனால் நமக்கு இறைவன் இரண்டு கைகளைக் கொடுத்திருக்கிறான். அந்த இரண்டு கைகளால் இறைவனை நாம் வணங்கியதற்காக வழங்கப்படுகிற பிரசாதத்தை இடது கையில் வைத்துக்கொண்டு, வலது கையால் கொஞ்சம், கொஞ்சமாக எடுத்து சாப்பிடவேண்டும். அங்ஙனம் செய்யாதவர்கள் அடுத்த பிறவியில் விலங்காகப் பிறப்பார்கள் என்று புராணங்கள் சொல்கின்றன.

அதுமட்டுமல்லாமல் தீர்த்தம் வழங்கும் போதும் வரிசையில் நின்று, இடது கைக்கு மேல் வலது கையை வைத்து, உள்ளங்கையில் தீர்த்தத்தை விடச் சொல்லி வாங்கிப் பருக வேண்டும். உள்ளங்கையில் அத்தனை தெய்வங்களும் குடியிருப்பதாக ஐதீகம். அதனால்தான் எழுந்தவுடன் நாம் உள்ளங்கையைப் பார்க்கவேண்டுமென்று நம் முன்னோர்கள் சொல்லிவைத்திருக்கிறார்கள்.

ஆன்மீகம்

## பணிந்த வாழ்வு

இன்று நாம் புனித சூசையப்பரின் விழாவைக் கொண்டாடுகிறோம். நற்செய்தி நூல்கள் 'அவரைப் பேசுகின்ற மனிதராகச் சித்தரிக்காமல், செயல்வீரராகக் காட்டுகின்றன. எப்பொழுதெல்லாம் இறைவனிடமிருந்து அவர் செய்திகள் பெறுகின்றாரோ, அப்போதெல்லாம் அவர் அவற்றை விரைந்து நிறைவேற்றினார். இவ்வாறு, அவர் இறைத் திருவுளத்தை நன்றாய் நிறைவேற்றினார்.

ஆண்டவர் இயேசு நாசரேத்திற்குச்சென்று "அவர்களுக்குப் பணிந்து நடந்தார்" என்று இன்றைய வாசகம் நிறைவு பெறுகிறது. புனித சூசையப்பரின் பணிவை, தாழ்ச்சியை, கீழ்ப்படிதலை குழந்தை இயேசுவும் கற்றுக்கொண்டார்.

எனவேதான், அவரிடமும் இந்தப் பணிவு இருந்தது. இறுதி வரையில், அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்தி, கீழ்ப்படிந்தார் (பிலி 2:8) என்று பவுலடியார் கூறுகிறார். எனவே, நாமும் இந்தப் பணிவை கற்றுக்கொள்வோம். பணிந்த உள்ளத்தினராய் வாழ்வோம்.

## நோன்பு

வல்லோன் அல்லாஹ் வையக மக்களுக்கு கடமையாக்கிய ரமழான் நோன்பு ஓர் தனித்துவமான இபாதத் ஆகும். இது எமக்கு இன்மை, மறுமை இரண்டிலும் நற்பயன் தரவல்லது.

ரமழான் நோன்பு முற்பிரிவுகளைக் கொண்டது. இதன் முதற்பிரிவு அல்லாஹ்வுடைய ரஹ்மத்தாகவும் நடுப்பகுதி பாவமன்னிப்பாகவும், இறுதிப் பகுதி நரக நெருப்பை விட்டும் விடுதலை பெறுவதாகவும் உள்ளது. இந்த ரமழான் நோன்பை நோற்போர் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

01.முஸ்லிமாயிருந்தல். 02.பருவமெய்தியிருத்தல், சிறுவர்கள் பயிற்சி பெறுவதற்காக நோன்பு நோற்கலாம். 03.பைத்தியமற்றவராக இருத்தல். 04.நோன்பு நோற்கச் சக்தியுள்ளவராயிருத்தல். 05.பெண்கள் மாதவிலக்கு, பிரசவருது என்பவற்றிலிருந்து நீங்கியிருத்தல்.

இவ்விதிமுறைகளை நாம் பேணி எம்மை வந்தடைந்துள்ள ரமழான் நோன்பை பக்குவமாக நோற்று இதன் மூலம் அல்லாஹ்வின் அதிகமான நன்மைகளை பெற்றுக் கொள்ளவேண்டும்.

**எம்.சி.கலீல், கல்முனை - 05**

---

## கவிதைப்போட்டி 1120



● பாராட்டுக்குரியது ●

### வழிகாட்டி

வண்டியில் செல்லும்
குருடனுக்கு வழிகாட்டி
ஒரு நன்றியுள்ள நாய்
நாட்டைக் கொள்ளையடிக்கும்
கோஷ்டிக்கு வழிகாட்டி
ஒரு சுயநல அரசியற்
தலைமை.

அ.சந்தியாகோ,
கண்டி

### பணப் பயம்

மடியிலே கனமிருந்தால்
வழியிலே பயமிருக்கும்
காலூனமுற்றிருக்கும் இவரின்
காசு மடியிலிருப்பதால்
காவலுக்கு ஒரு நாய்
கட்டாயம் தேவைதான்.

எம்.சி.கலீல், கல்முனை – 05.




## கவிதைப் போட்டி இல 1123



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29. 06. 2015

**கவிதைப் போட்டி இல. 1123 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.**
**இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### ஆறடி நிலம்

அங்கத்திலே வலிமை–மனிதனை
ஆளும் வரையில்தான்
அனைவருமே பின்னால்
அணிவகுத்து வருவர் – ஆனால்
அங்கத்தை குறை என்பது
அணைத்துக் கொண்டால்
ஆறறிவில்லா ஜீவன்தான்
அவனது ஆறடி நிலம்வரை
அடி தொட்டு வரும் – என்பதை
அறிவுறுத்துகிறதோ நமக்கு இங்கே.

இளம்பிறை, அநுராதபுர வீதி.

### வாழ்ந்து காட்ட

பெற்றெடுத்த பிள்ளைகளும்
கட்டிய மனைவியும்
உடல் ஊனம் கண்டு ஒதுக்கிவிட
என் கையால் நான் வைத்த
ஒரு கவளம் சோற்றுக்காய்
என்னுடன்கூட வரும்
நன்றியுள்ள ஜீவனுடன்
நன்றிகெட்ட மனிதர்களைவிட்டு
புறப்பட்டுவிட்டேன்.
மன்வுறுதி உள்ளவனுக்கு
ஊனம்கூட ஒரு படிக்கல்லே
என்று வாழ்ந்து காட்ட....

விஜயகண்ணன், யாழ்ப்பாணம்.

### வழித்துணை

வறுமை நிறைந்த வாழ்விலே
வாழும்வரை வாழ்வதற்கு
வலிமையை இழந்துவிட்டால்
வழித்துணைக்கு வருவது - இந்த
வாய்பேசாத ஜீவன் ஒன்றே - என
வருந்துகிறதோ வயது முதிர்ந்த
வாழ்க்கையை வண்டியோடு சுற்றும்
வாய்பேசும் ஜீவனின் உள்ளம்.

யோகன், புத்தளம்.

### பிரியாத உறவு

இணை பிரியா
இரட்டையர்கள்போல்
செல்லும்
இவர்களை வாழ்வில்
யார் வாழ்வு முதல்
முடிந்தாலும் தனிக்கும்
உயிர் தவித்திடுமே
தரணியிலே!

எஸ்.சிஹாமினி, யாழ்ப்பாணம்.

## உங்கள் பக்கம்

### அக்கராயன் குளத்து நீர் வீணாவது ஏன்?

கிளிநொச்சி. அக்கராயன் குளத்தின் நீர் சிறுபோக செய்கையின் தேவைக்காக தற்போது திறந்துவிடப்பட்டுள்ள நிலையில் இடதுகரை வாய்க்கால் ஊடாக வயல் நிலங்களுக்குச் செல்லும் நீர் அக்கராயன் அணைக்கட்டு வீதியில் ஓரிடத்தில் வீதியை குறுக்கறுத்துப் பாய்வதன் காரணமாக குளத்தின் நீர் அக்கராயன் ஆற்றினைச் சென்றடைந்து வீண்விரயமாகிக் கொண்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழை இல்லாத காலத்தில் செய்யப்படும் நீரை அனைவருமே வீணாக்காமல் அதை பயன்படுத்துவது அவசியமாகிறது. நீர் வீணாகி வீதியில் நிற்பதால் போக்குவரத்து மேற்கொள்வதும் சிரமமாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் குளத்தின்கீழ் இவ்வாண்டு 2500 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. குளத்தின் நீர் நெற்பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது. அக்கராயன் அணைக்கட்டு வீதியில் அந்தோனியார் ஆலயத்துக்கு முன்பாக வீதியின் குறுக்கறுத்து வாய்க்கா லில் செல்லும் நீர் வீணாகப் பாய்வதன் காரணமாக நீர் விரயமாகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் அக்கராயன் குளத்துநீரை வீணக்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

**எஸ்.ரூபன், அக்கராயன்.**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:– 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :–0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com

## அமைதியின் சொற்கள்

நான் இன்று உயிரோடு இருப்பதால் நான் இடது பக்கம் திரும்ப ஆசைப்படலாம். நாளை வலது புறம் திரும்ப ஆசைப்படலாம். இவை முக்கியமல்ல. இது இடது புறத்தைப் பற்றியோ, வலது புறத்தைப் பற்றியோ இல்லை. நேராகச் செல்வதைப் பற்றி அல்ல. திருப்பம் எடுப்பதைப் பற்றி அல்ல. வாழ்க்கை அதையெல்லாம் பற்றியதல்ல. வாழ்க்கை, இந்த மூச்சு உங்களுள் வருவதைப்பற்றி.

இணையத்தளம்: www.wopg.org
– பிரேம் ராவத்

### கலக்கல்

முரசு விறுவிறுப்புடன் வெளிவந்த கொண்டிருக்கின்றது. அதன் சுவை என்றுமே மாறாது. அனைத்து பக்கங்களும் சுவை, சுவாரசியம் குறைவில்லை. நெல்சன் மண்டேலாவின் தொடர் அருமையாக உள்ளது. இக்பால் அவர்கள் இன்னும் சுவாரசியமாக எழுதவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

மற்றும் சினிமா பக்கம் கவரக்கூடியதாக உள்ளது. புதுப்படங்கள் உடனடியான சினி விசிட்டில் வந்த கலக்குகின்றது.

**எம்.சர்வேஸ்வரன், தெஹிவளை.**

## வாசகர்சாலை

### மாணவர்கள் படிக்கவேண்டியதே!

பல பல அருமையாக விடயங்கள். கட்டுரைகள் இடம்பெற்று வருகின்றது. சென்ற முரசில் வெளியான யாழ்.தீவுகள் என்ற கட்டுரை யாழ்ப்பாணத்தில் தீவுகள் உருவானதை சிறப்பாக அக்கட்டுரை எடுத்தியம்புகிறது. மாணவர்களுக்கு இக்கட்டுரை பெரும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். மாணவர்கள் இதை படித்துப் பயன்பெற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். நானும் ஒரு மாணவன் என்றரீதியில் இக்கட்டுரை எல்லோருக்கும் பிரயோசனப்படக் கூடியதாக இருக்கும்.

**என்.கானன், யாழ்ப்பாணம்**

### அறியாததை அறிய...

வாரமலரிலே வாடா மலராக மணம் பரப்பி மங்கையர் மனங்களை கொள்ளை கொள்ள வைக்கும் ஆக்கங்களை தந்தும் மழலைகளும் சிறுவர்களும் மகிழும் வண்ணம் எண்ணங்களை விரிய வைத்தும் அதிரடி அரசியல்களை சுவைபடத் தந்தும் நேயர்களை நின்பால் ஈர்த்துள்ளார்.

விஷேடமாக தேன் கிண்ணம் எனும் கவிப்பகுதி காலத்துக்கேற்றால் போலும் அமைவதும் என்னைக் கவர்ந்ததுமாகும். அத்தோடு நிலமெல்லாம் இரத்தம், விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா, இடி அமீன் போன்ற கதை, கட்டுரைகள்மூலம் பல அறிவியல்களை அறியக்கூடியதாக வுள்ளதால் அதை தொகுப்பவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்! தொடரட்டும் உன் பணி...!

**ஜம்சியா அரபாத், நீர்கொழும்பு.**

# வாக்குறுதிகளை நம்பிய சம்பூர் மக்களுக்கு ஏமாற்றம்



**சம்பூர் மக்களின் காணிகளை மீளக் கையளிப்பது தொடர்பான ஜனாதிபதி பிறப்பித்திருந்த உத்தரவுக்கு உயர்நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத்தடை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதிவரை உயர்நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சம்பூர் மக்களின் காணிகளை மீளக் கையளிக்கும் நோக்கில், முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்கு வழங்கப்பட்டிருந்த காணியை மீளப்பெறுவது தொடர்பான ஜனாதிபதியின் உத்தரவு வர்த்தமானியில் பிரசுரமானது. ஜனாதிபதியின் குறித்த உத்தரவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், சம்பூர் காணிகளை மீளக் கையளிக்கும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.**

சம்பூர் காணி விடுவிப்பு குறித்த வழக்கு, கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த இடைக் காலத்தடையை நீடித்து உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

சம்பூர் மக்கள் சுமார் 9 ஆண்டுகளாக தங்களது சொந்த மண்ணில் குடியேறமுடியாமல் தவித்து வரும்நிலையில், கடந்த மஹிந்த அரசாங்கத்தில் சம்பூர் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள காணியொன்றை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு தொழிற்சாலை அமைப்பதற்காக வழங்கிய இருந்தது.

இத்தீர்மானத்தை தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் இரத்து செய்திருந்தார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2012ஆம் ஆண்டு தங்களுக்கு இந்த காணியில் தொழிற்சாலை அமைப்பதற்கான அனுமதியை வழங்கியது. இந்நிலையில், தொழிற்சாலை அமைக்கும் பணிகளுக்காக சுமார் 4 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய வர்த்தமானி அறிவித்தல் காரணமாக தமக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் குறித்த தனியார் நிறுவனம் மனு தாக்கல் செய்தது. இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத குடியேற்றவாசிகளை அவர்கள் விரும்பாத நாட்டுக்கு அனுப்பவேண்டாம்

மத்தியதரைக் கடலூடாக ஒவ்வொரு வருடமும் ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்ட விரோதமாக நுழையும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குடியேற்றவாசிகள் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை. ஐரோப்பிய ஒன்றிய உள்நாட்டு அமைச்சர்கள் சந்தித்து, பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

லக்ஷம்பேர்க்கில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தஞ்சக்கோரிக்கையாளர்கள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதேவேளை இவ்வாறு சட்டவிரோத பயணம் மேற்கொள்ளும் குடியேற்றவாசிகளால் இத்தாலி, கிரேக்கம் மற்றும் மால்டி ஆகிய நாடுகளின் வளங்கள் சூறையாடப்படுவதாகவும் பொதுவான குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டவிரோதமாக குடியேற முயலும் குடியேற்றவாசிகளை மீண்டும் அவர்கள் வாழ விரும்பாத நாட்டுக்கு பலவந்தப்படுத்தி அனுப்பவேண்டாம் எனக் கிழக்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய நாட்டு பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் இந்த வருடத்தில் மட்டுமே, மத்திய தரைக்கடலூடாக பாதுகாப்பற்ற படகுகளில் சட்டவிரோதமாக பயணம் மேற்கொண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 1800 இற்கு மேல் என்பது குறிப்பிடத்தக்கது.

## 685 கிலோ கஞ்சா பறிமுதல்

தனுஷ் கோடி அருகே 685 கிலோ கஞ்சா பொதி ஒன்று கேட்பாரற்ற நிலையில் கிடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை இந்திய கடலோரக் பாதுகாப்பு படை அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை பறிமுதல் செய்துள்ளனர். தனுஷ்கோடி அருகே மூன்றாம் மணல் தீடையில் இலங்கைக்கு கடத்துவதற்காகக்கொண்டு செல்லப்பட்டு விட்டுச் செல்லப்பட்ட 685 கிலோ கஞ்சா பொதியை மண்டபம் கடலோரப் பாதுகாப்பு படையினர் கைப்பற்றி விசாரணை நடத்திவருகின்றனர்.

மண்டபம் கடலோர பாதுகாப்பு படையினர் தனுஷ் கோடி கடலோரப் பகுதியில் ரோந்து சென்ற போது மூன்றாம் மணல் தீடைப் பகுதியில் அநாதையாக கிடந்த சுமார் 600 கிலோ கொண்ட கஞ்சா பொதியை கைப்பற்றினர். அதை கப்பல்மூலம் மண்டபம் கடலோர பாதுகாப்பு படை அலுவலகத்துக்கு இரவே கொண்டுசென்றுள்ளனர். இது குறித்து கடலோர பாதுகாப்பு படையினர் வழக்குப் பதிவுசெய்து தற்போது மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## சுமார் 50 மில்லியன் டொலர்கள் மேகி நூடுல்ஸ் அழிப்பு

இந்திய உணவு தரக்கட்டுப்பாட்டு அமையத்தினால் மேகி நூடுல்ஸ் பைக்கெட்டுக்களுக்கு தடை விதிக்கப்பட்டதையடுத்து, நெஸ்லே நிறுவனம் சுமார் 50 மில்லியன் டொலர்கள் பெறுமதியான மேகி நூடுல்ஸ் பைக்கெட்டுகளை அழிக்க முடிவு செய்துள்ளது.


மேகி நூடுல்ஸ் பாதுகாப்பற்றது எனவும், உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது எனவும் நிரூபிக்கப்பட்டதையடுத்தே இந்தியாவில் மேகி நூடுல்ஸ்ற்கு தடை விதிக்கப்பட்டது. எனினும், இதனை உற்பத்தி செய்யும் நெஸ்லே நிறுவனமானது, மேகி நூடுல்ஸ் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளது.

மேலும், நெஸ்லே நிறுவனம் மும்பை உயர் நீதிமன்றில் மேகி நூடுல்ஸ் இல் MSG (monosodium glutamate) எனப்படும் இரசாயனப் பொருள் கலக்கப்பட்டுள்ளது என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




நெஸ்லே நிறுவனமானது இந்தியாவின் உடனடி நூடில்ஸ்களிற்கான சந்தையில் சுமார் 80 சதவீதத்தைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எளிதாகவும், உடனடியாகவும் தயாரிக்கக்கூடிய இந்த நூடுல்ஸ், இந்தியாவில் 1983 ஆம் ஆண்டு தொடக்கம் பாவனையில் உள்ளமை சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

# புகையிலை எனும் போதை



புகையிலையைப் பயன்படுத்துவதால் உலகெங்கிலும் மரணமடைபவர்கள் ஆண்டுக்கு 60 இலட்சம் பேர் எனும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. இவர்களில், 6 இலட்சம் பேர் புகைப்பிடிக்கும் பழக்கமுள்ளவர்கள் அல்லர். எனினும் மற்றவர்கள் புகைப் பிடிக்கும்போது அருகில் இருந்து அதை சுவாசிப்பதால் பாதிக்கப்பட்டு இறப்பவர்கள் எனும் தகவலும் உள்ளது.

பீடி, சிகரெட் பிடிப்பதற்கும் இருதய நோய்களுக்கும் இடையே உள்ள உறவு பற்றி எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசரம் உருவாகியுள்ளது.

சிகரெட்டில் அடங்கியுள்ள அம்சங்கள் என்ன? தார் எனும் பழுப்பு நிற பசை சிகரெட் புகையில் அதிகம் உண்டு. சிகரெட் புகையை மூச்சுடன் உள் இழுத்து நுரையீரலுக்குள் செலுத்துகிறார் புகைப்பிடிக்கும் நபர். நுரையீரலில் குளிர்ச்சியைப் பெற்ற சிகரெட் புகை அங்கேயே படிந்து விடுகிறது. ஒரு சிகரெட்டில் சுமார் 4,000 வகையான இரசாயனங்கள் உள்ளன என்பது பெரும் பாலானோருக்குத் தெரியாது.

அவற்றில் அசெட்டோன் எனப்படும் ஒன்று, நாம் நக பூச்சைக் கழுவி எடுக்கப் பயன் படுத்தும் கொடூரத் தன்மைகொண்ட இரசாயனப் பொருள். சயனைட் எனப்படும் விஷம், பூடேன் எனப்படும் எரிபொருள், ரொக்கெட்டுகளை வானத்துக்குள் உந்தித் தள்ள வெடிபொருளாக பயன்படுத்தப்படும் மெத்தனால் ஆகியவற்றுடன் நே.ஃ.ப்தனால், ரேடோன் எனப்படும் கதிரியக்க வாயுக்களும் சிகரெட் புகையிலையில் உண்டு.

மேலும், நம் வீட்டில் தரையையும், கழிப்பறைகளையும் மிகவும் சுத்தமாகக் கழுவ பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருளான அமோனியா, பயிர்களில் உட்காரும் பூச்சிகளைக் கொல்லப் பயன்படுத்தப்படும் டி.டி.ட்டி. எனும் இரசாயனப் பொருள், போலோனியம் 210, சல்ஃபூரிக் அமிலம், ஆர்சனிக் எனும் விஷம், கார் பேட்டரியில் உள்ள கேட்மியம் எனும் அமிலம், நிக்கோடின் எனும் போதைப்பொருள் ஆகியனவும் சிகரெட்டில் உண்டு. 40 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு நிச்சயமாக இருதய நோய் உருவாகக் காரணம் சிகரெட் புகைக்கும் பழக்கமே. இருதய நோயால் பாதிக்கப்படுபவர்களில் 4 பேரில் ஒருவர் புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவரே.

குறிப்பாக, ஒருவருக்கு இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் எனப்படும் கொழுப்புச் சத்து, நீரிழிவு நோய் ஆகியவை ஏற்கெனவே இருந்தால் புகைப்பிடிக்கும் பழக்கம் அவருக்கு இருதய நோய் வருவதைத் தடுக்கவே முடியாத சூழ்நிலைக்குக் கொண்டு சென்றுவிடும்.

நம் நாட்டின் கிராமப்புறங்களில் இது போன்ற நோய்களை மருத்துவச் சோதனைகள் செய்து கண்டுபிடிக்கும் பழக்கம் யாருக்குமே கிடையாது என்பதால் நிறையப் பேர் இதுபோன்ற நோய்கள் தங்களுக்கு இருப்பது தெரியாமலேயே பீடிகளை புகைப்பார்கள். தொலைக் காட்சித் தொடர்களிலும், திரைப்படங்களிலும் கதாநாயகனும், வில்லனும் சர்வசாதாரணமாக சிகரெட் பிடிப்பது ஆண்மையின் அடையாளமாகத் தெரியும் நிலை நாட்டில் உள்ளது.

புகைபிடிக்கும்போது, புகையிலையில் உள்ள நிக்கோடின் எனும் பொருள் நம்மை புகை பிடிக்கும் நாட்டமுடையவர்களாகச் செய்கிறது. கோப்பி அருந்துபவர்கள் புகைப் பிடித்தால், தினமும் கோப்பி அருந்தும்போதே புகையிலையை மனம் நாடும். இதுதான் நிக்கோடின் செய்யும் அழுத்தம்.

ஆக, தனிமனிதனின் உறுதியான மனச்சக்தியுடன் தான் அவன் இதுபோன்ற ஒரு உயிர்க் கொல்லி பழக்கமான புகைப் பழக்கத்தைக் கைவிட முடியும் என்பதை நாம் சந்திக்கும் புகைபிடிப்பவர்களுக்கு உணர்த்துவது அவசியமாகிறது. ●

## விநோத போராட்டம்

ஹெர்மான் முல்லர் என்பவர் ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் விபச்சார விடுதிகள் நடத்துகிறார். ஆஸ்திரியாவில் உள்ள விபச்சார விடுதிக்கு அபராத வரி விதிக்கப்பட்டது. இதைக் கண்டித்து அவர் நூதன போராட்டத்தில் இறங்கினார். அதாவது தனது விபச்சார விடுதிக்கு வரும் ஆண்களுக்கு இலவச செக்ஸ் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

விபச்சார விடுதி முன்வைக்கப்பட்ட அறிவிப்பு பலகையில், "நாங்கள் இனி மேல் வரி செலுத்தப் போவதில்லை. எனவே அனைவருக்கும் இலவச செக்ஸ் வழங்கப்படும். இலவச அனுமதியுடன் இலவச குளிர்பானமும் இங்கே கிடைக்கும்" என்று எழுதப்பட்டு இருந்தது.

இதனை அறிந்த ஏராளமானவர்கள் அவரது விபசார விடுதி முன்வரிசையில் நிற்கத் தொடங்கிவிட்டனர். இது குறித்து முல்லர் கூறும்போது, "எனக்கு விதித்த அபராத வரியை கண்டித்து இவ்வாறு செய்கிறேன். இதனால் இங்குள்ள பெண்களுக்கு மாதம் ரூ.7 இலட்சம் இழப்பு ஏற்படும். அதை நான் எனது சொந்தப் பணத்தில் இருந்து கொடுத்துவிடுவேன்" என்றார்.

தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## என்ன நடக்கின்றது?

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான புறச்சூழலை உருவாக்குவதில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அதற்கு சில கூட்டமைப்பின் தலைவர்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றார்கள் என்று கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியிருக்கின்றார்.

அவர் சில தலைவர்கள் என்று குறிப்பிட்டது அரசோடு நெருக்கமாக செயற்படும் சம்மந்தன், சுமந்திரன் ஆகி-யோரைத் தான் என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்வதில் சிரமமிருக்காது.

அவர்களை அரசு பயன்படுத்துகின்றது என்று சுரேஸ் கூறியிருப்பதுதான் தமிழ் மக்களின் சந்தேகத்தை அதிகரிக்கின்றது. சம்மந்தன் மூத்த அரசியல் தலைவர். அவரின் மிகுந்த நம்பிக்கைக்குரியவர் சுமந்திரன் அவரும் சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர்.

இவர்களை யாரும் பயன்படுத்த முடியாது. இவர்களை அரசு பயன்படுத்துகின்றது என்று கூறுவதன் ஊடாக அவர்கள் அரசுடன் அறியாமல் உறவில் இருக்கின்றார்கள் என்றா? அல்லது தமிழ் மக்களிடமிருந்து அவர்களை பாதுகாக்கின்ற விதமாகவா சுரேஸ் அவ்வாறு கூறியிருக்கின்றார் என்பதை அவரே தெளிவுபடுத்தவேண்டும்.

அதேபோல் ஜனாதிபதியும், வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அண்மையில் சந்தித்துக்கொண்டதன் பின்னர் முதலமைச்சர் தெரிவித்த கருத்துக்களும் சர்ச்சைக்குரியதாக அமைந்தது.

கூட்டமைப்பிலுள்ள சிலர் தனித்தனியாக அரசாங்கத்தை அணுகி பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக் கொண்டிருப்பதாக கூறியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டதை முதலில் கண்டித்துக் கருத்துக் கூறியவர் இதே சுரேஸ்தான்.

கூட்டமைப்பிலுள்ளோரின் நாளாந்த தகுடுதத்தங்களை தமிழ் மக்களால் பரிந்து கொள்ளமுடியவில்லை. உண்மையில் கூட்டமைப்பில் இருப்பவர்கள் முரண்பாடுகளுடன்தான் இருக்கின்றார்களா? அல்லது தமிழ் மக்களுக்கு ஒருவரைவிட ஒருவர் உத்தமர் என்று நிருபிக்க முயற்சிக்கின்றார்களா? என்பது தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தலையிடியாகவே மாறியிருக்கின்றது.

சர்வதேசம், மகிந்த ராஜபக்ச ஆட்சியில்லாத திருப்தியில் ஒதுங்கிக் கொண்டது. மனித உரிமைப் பேரவையில் போர்க்குற்ற விசாரணையும் சேடம் இழுக்கத் தொடங்கிவிட்டது. தமிழர்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளை பின் தள்ளி கூட்டமைப்பு புலம்பெயர் தமிழர்களின் பணத்தை எவ்வாறு கொண்டுவருவது என்று சிந்திக்கத் தொடங்கியிருப்பதோடு உரிமைக் கோரிக்கைகளையும் வலிமை இழக்கச் செய்துள்ளனர். புதிய தேர்தல் முறைமை தமிழ் மக்களின் அரசியல் பலத்தையும் பலவீனப்படுத்த முற்படுகின்றது.

கடுமையான யுத்த அழிவுகளுக்கு முகம்கொடுத்த வடக்கு மாகாணத்தில் பாலியல் வன்முறைகளும், போதைப் பொருள் பாவனையும் தலைவிரித்து ஆடுகின்றது. இவற்றுக்கு நடுவே தமிழ் மக்கள் எங்கே வழிநடத்தப்படுகின்றார்கள் சிந்திப்போம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

நாடாளுமன்றத்தை அதன் கண்ணியத்தோடும், மதிப்போடும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதுவே விமர்சகர்களின் நிறைவேற்றுவதில் ஜனாதிபதி மைத்திரிபால முழு ஆர்வமாக இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவையும் இழந்துள்ளார். ஆட்சியின் பங்காளிகளின் ஆதரவையும் இழந்துள்ளதோடு, எதிர்ப்பையும் சம்பாதித்துள்ளார்.

# நல்லாட்சியை உலுப்பும் 20ஆவது திருத்தம்

ஜனாதிபதி தலைமையிலான நல்லாட்சிக்கு புதிய தேர்தல் திருத்தச் சட்டமான 20ஆவது திருத்தச் சட்டம் சவாலாகவே அமைந்துவிட்டது. பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதைப்போல் இருபதாவது திருத்தச் சட்டத்தை அவ்வளவு இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

தற்போதுள்ள விருப்பு வாக்கு முறையை இலங்கையிலுள்ள அனைத்துக் கட்சிகளும் எதிர்க்கின்றன. இந்த முறைமை மாற்றப்பட வேண்டும் என்பதை எல்லோருமே ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆனால் புதிய திருத்தச் சட்டம் எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்பது தொடர்பில் கடந்த இரண்டு மாதங்களாக ஒரு பொதுவான இணக்கத்தை அனைத்துக் கட்சிகளால் ஏற்படுத்திக் கொள்ளமுடியவில்லை. தேசிய பெரிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் இரு அணிகளாக இருக்கின்ற அதே வேளை ஏனைய சிறிய கட்சிகள் அனைத்தும் ஓரணியாக திரண்டு தமக்கும் தொடர்ந்து விவாதிக்கின்றன.

இதுவரை மூன்று சுற்று விவாதங்களை நடத்தியுள்ள சிறிய கட்சிகள், ஜனாதிபதியிடம் தமது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளன. அதன்படி 'புதிய தேர்தல் திருத்தமானது, சிறிய கட்சிகளையோ, சிறுபான்மையினரையோ பாதிப்பதாகவோ, ஏற்கெனவே பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள மக்களின் அரசியல் வாய்ப்புக்களை பறிப்பதாகவோ இருக்கக்கூடாது என்பதை சுட்டிக்காட்டியுள்ளன.

ஆனால் புதிய தேர்தல் திருத்தச் சட்டம்தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவையானது, அதன்படி தொகுதிவாரியாக 125 பேரும், விகிதாசார அடிப்படையில் 75 பேரும், தேசியப் பட்டியல் மூலமாக 25பேரும் என மொத்தமாக 225 பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படுவார்கள் என்று பரிந்துரை செய்தது.

அமைச்சரவையின் இந்தப் பரிந்துரையை எதிர்க்கட்சியும், அரசாங்கத்திலுள்ள பங்காளிக் கட்சிகளும் எதிர்த்தனர். இந்தக் குழப்பத்தை தொடர்து ஜனாதிபதி தலைமையில் இரண்டாவது முறையாகவும்கூடிய அமைச்சரவை மேலுமொரு திருத்தத்தை செய்தனர். அதன்படி, தொகுதிவாரியாக 145 பேரும், விகிதாசார அடிப்படையில் 55பேரும், தேசியப் பட்டியல்மூலமாக 37 பேருமாக மொத்தம் 237 பேர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் பரிந்துரை செய்துள்ளது.

அமைச்சரவையில் இந்த யோசனையை முதலில் எதிர்த்திருப்பது ஐக்கிய தேசியக் கட்சி தான். ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை தற்போதுள்ள 225 பேர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுகின்ற அளவை அதிகரிக்கமுடியாது என்பதே தமது நிலைப்பாடு என்று கூறிவருகின்றனர். அதன் அடிப்படையில் முன்னைய அமைச்சரவையின் பரிந்துரையை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்கின்றது.

ஆனால் இரண்டு பரிந்துரைகளையும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் எதிர்க்கின்றன. இதற்கு காரணம். தொகுவாரியாக ஆசனங்கள் பிரிக்கப்படுகின்ற நடைமுறையில் பாதிப்புக்களை எதிர்கொள்கின்ற பகுதிகளாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகமும் இருப்பதுதான்.

உதாரணத்திற்கு: யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தொகுதிகள் என்று முன்னர் பதினொன்று இருந்தது. அது பின்னர் விகிதாசார முறையினால் ஒன்பதாக குறைக்கப்பட்டது. தற்போதைய தொகுதி பிரிப்பின் அடிப்படையில் ஆறாகக் குறைகின்றது. அதன்படி எதிர்காலத்தில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் பதினொரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலை இனிமேல் ஏழு என்று குறைவைச் சந்திக்கின்றது.

தேர்தல் செயலகத்தின் தொகுதி முறையில் ஒரு தொகுதியில் சுமாராக ஒரு இலட்சம் வாக்காளர்களாவது இருக்கவேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தில் தற்போதைய வாக்காளர் தொகையானது, ஆறரை இலட்சங்களாகும்.

யுத்தம்காரணமாக வடக்கு, கிழக்கில் சராசரியாக பெருகியிருக்கக்கூடிய மனிதப்பெருக்கம் இடம்பெறவில்லை. அதைவிடவும் ஆயிரக்கணக்கானவர்கள் இயற்கைக்கு மாறாக இறந்துபோயிருக்கின்றார்கள். சுமார் பதினைந்து இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் புலம்பெயர்ந்து உலக நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் வாக்காளர்களை மட்டும் கவனத்தில் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை குறைப்பதானது, அதன் ஊடாக அந்த மக்களுக்கும், அந்தந்த மாவட்டங்களுக்கும் கிடைக்கவேண்டிய சலுகைகள், ஒதுக்கீடுகள், வேலைவாய்ப்புக்கள், பல்கலை அனுமதிகள் ஆகியவற்றில் பெரும் வீழ்ச்சியையே ஏற்படுத்தும்.

1977 ஆண்டுகளில் 160பேர் நாடாளுமன்றத்திற்கு தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். ஆனால் புதிய தேர்தல் திருத்த முறையில் தொகுதி வாரியாக 125 என்பதோ, 145 என்பதோ பொருத்தமானதாக இருக்காது. தவிரவும் குறைப்புச் செய்யப்படும் எண்ணிக்கையானது சிறுபான்மை மக்களின் தொகுதியை சுருக்கிவிடுவதாகவே அமைந்துள்ளது.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தைப் போல் பெரும்பாதிப்பை எதிர்கொள்கின்றவர்களாக வடக்கு, கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். வடக்கு, கிழக்கிற்கு வெளியே சுமார் பதின் ஐந்து இலட்சம் தமிழர்கள் வாழக்கின்றார்கள். இவர்களுக்காக தொகுதிக்கு ஒன்று பார்த்தாலே பதினைந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால் அப்படியொரு ஏற்பாடு புதிய தேர்தல் திருத்தத்தில் அமையவில்லை என மலையகக் கட்சிகள் தமது அதிருப்தியை வெளிக்காட்டுகின்றன.

சிறுபான்மை கட்சிகளினதும், சிறிய கட்சிகளினதும் எதிர்ப்பையும் மீறி 20ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்படுமானால் அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்று முஸ்லிம் காங்கிரஸ் கூறியிருக்கின்றது.

237 பேராக நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதை வேறு காரணங்களுக்கு அப்பால் பொது அமைப்புக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தற்போது 225 பேர் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் 142 பேர் உயர்தரத்தையே கற்காதவர்கள் என்று கபே அமைப்பு விமர்சித்துள்ளது.

புதிய தேர்தல் திருத்தம் அவசியம். அது சிங்கள மக்களையோ, தமிழ், முஸ்லிம் மக்களையோ பாதிக்கக் கூடாது. தொகுதிகளை அதிகரிப்பதோ, விகிதாசாரத்தை அதிகரிப்பதோ, தேசியப்பட்டியலை அதிகரிப்பதோ எதுவாக இருந்தாலும் அது நாடாளுமன்றத்துக்குள் மேலும், ஆசனங்களை பொருத்துவதாக இருக்கக்கூடாது. இருக்கின்ற 225 உறுப்பினர்களுக்குள்ளேயே அது பகிரப்படவேண்டும்.

நாடாளுமன்றத்தை அதன் கண்ணியத்தோடும், மதிப்போடும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதுவே விமர்சகர்களின் கருத்தாக உள்ளது. இந்த நிலையில் இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி மைத்திரிபால முழு ஆர்வமாக இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவையும் இழந்துள்ளார். ஆட்சியின் பங்காளிகளின் ஆதரவையும் இழந்துள்ளதோடு, எதிர்ப்பையும் சம்பாதித்துள்ளார்.

இவ்வாறான குழப்பங்களை ஜனாதிபதி எவ்வாறு எதிர்கொண்டு சமாளிக்கப்போகின்றார்? இருபதாவது திருத்தத்தை எவ்வாறு நிறைவேற்றப் போகின்றார? என்பது பெரும் கேள்வியாக மாறியுள்ளது. இதுவரை நல்லாட்சியாக வர்ணிக்கப்பட்டுவந்த ஆட்சி தேர்தல் திருத்தச் சட்ட சர்ச்சைகளாலும், பலவீனமான ஆளுங்கட்சியும் பலமான எதிர்க்கட்சியும் முட்டிக்கொள்ளும் யுத்தங்களாலும் வலிமையிழந்து போய்க் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதியைத் தவிர அனைத்துக் கட்சியினருமே குழப்பங்களின் மையமாக மாறியுள்ள நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தல் ஒன்றை சந்திக்க வேண்டும் என்பதையே தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

புதிய தேர்தல் திருத்தச் சட்டத்தில் மேலும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய அவசியத்தை சிறிய மற்றும் ஆட்சிப்பங்காளிகள் வற்புறுத்துவதை ஜனாதிபதியால் தட்டிக்கழிக்க முடியாதிருக்கும். அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியினரையும் சமாளிக்க வேண்டியிருக்கும்.





# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

தொடர் 170

ஆனால் இலங்கையின் உள் நாட்டுப் போரில் இந்தியா ஒரு தவிர்க்கமுடியாத சக்தியாக மாறிய பின்னர், இந்தியா அனுப்பிய அமைதிகாக்கும் படை பின்னர் யுத்தம் செய்யும் படையாக மாறியது ஒரு துரதிஸ்டவசமான, விரும்பத்த காத, தவிர்த்திருக்கவேண்டிய செயலாகும். மூன்று வருடங்கள் புலிகளுடன் யுத்தம் செய்துவிட்டு, புலிகள் பிரேமதாசமூலம் இந்திய அமைதிப்படையை வெளியேற்றிய போது மறுபேச்சின்றி வெளியேறிச் சென்றவர்கள், முதலிலேயே அதைச் செய்திருக்கலாம் என்பதே எனது தனிப்பட்ட கருத்து. ஆனால் அது நடைமுறைச் சாத்தியமானதுதானா என்பது சற்றுத் தீவிரமாக ஆராயப் பட வேண்டிய ஒரு விடயம்.

இப்படியான ஒரு நிலையில் உதயன் என்பவனின் கேள்வியைத் தந்திரோபாய ரீதியில் எனக்குச் சாதகமாக்க நான் விரும்பினேன்.

எனவே நான் அவனுடன் அந்நியோந்நியமாக உரையாடுவது சில கேள்விகளைக் கேட்டேன். அதாவது "நீங்கள்தானே இந்தியா எமக்கு உதவும் என்ற அடிப்படையில் எமது மக்களுக்கு நம்பிக்கை ஊட்டினீர்கள், அப்பொழுது இந்தியாவுடன் மோதவேண்டிவரும் என நீங்கள் எதிர்பார்க்கவில்லையா?" என்ற சாரப்பட எனது கேள்வி அமைந்திருந்தது.

நான் இப்படியான ஒரு கேள்வி கேட்டதற்கு ஒரு காரணம் இருந்தது. அதையும் இங்கு சொன்னால்தான், பலர் இன்று மறந்துவிட்ட அன்றைய அரசியல் சூழ்நிலையை சற்று மீட்டுப் பார்க்க வைக்கமுடியும்.

### தவறான தீர்மானங்களையே மேதாவித்தனமாக எண்ணும் தலைமைகள்!

1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எடுத்த அமெரிக்க சார்பான நிலைப்பாடுதான், அன்றைய அமெரிக்க - சோவியத் பனிப்போர் காலத்தில் சோவியத் சார்பு நிலையை எடுத்திருந்த இந்திராகாந்தி தலைமையிலான இந்திய அரசாங்கம் ஜே.ஆரின் அரசுக்கெதிரான ஒரு தீவிரமான நிலைப்பாட்டை எடுக்கத் தூண்டியது என்பது இன்று அநேக மானோரால் ஏற்றுக்கொள்ளும் ஒரு உண்மையாகிவிட்டது.

ஆனால் அன்றைய நிலையில் ஜே.ஆர் ஒரு பக்கத்தில் அமெரிக்க சார்பு நிலையை எடுத்துக்கொண்டு, மறுபக்கத்தில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை யுத்தமாக மாற்றி தமிழின அழிப்பில் . ஈடுபட்டதால், அது இந்திராகாந்தி இலங்கையில் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி தலையீடு செய்வதற்கு வாய்ப்பாகப் போய் விட்டது. இந்த உண்மையையும் இன்று பலர் (புலிகளை ஆதரிப்பவர்கள் உட்பட) ஏற்றுக் கொள்கின்றனர்.

இன்று எடுத்ததெற்கெல்லாம் இந்திய விரோத கூச்சல் போடுபவர்கள், அன்றைய காலகட்டத்தில் இந்திராவின் அரசாங்கம் உள் நோக்கத்துடன் இலங்கைப் பிரச்சினையைப் பயன்படுத்தியதைப் பார்க்கத் தவறிவிட்டனர். பொதுவாக தமிழ் தலைமைகளும் சரி, அவர்களால் வழிநடாத்தப்படும் தமிழ் பெருங்குடி (மேட்டுக் குழாமினர்) மக்களும் சரி, வரலாற்று நிகழ்வுகளைப் புரிந்து தம்மைச் சுதாகரித்துக் கொள்வதற்கு சுமார் 30 வருடங்களைக்கூட எடுத்திருக்கின்றனர் என்பதை, இன்று வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது புரிந்து கொள்ளமுடிகிறது. அவர்கள் அதைப் புரிந்துகொள்வதற்குள் வரலாறு இன்னொரு காலகட்டத்திற்குள் பிரவேசித்துவிடும். இன்றும் அதுதான் நிகழ்ந்துவருகிறது.

இந்த இடத்தில் தமிழ் தலைமைகள் பற்றிய சுவாரசியமான விடயம் ஒன்றைக் கூறவிரும்புகிறேன்.

1947இல் அமைந்த சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம், அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் டி.எஸ்.சேனநாயக்க தலைமையில் அமைந்தது. அதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் மந்திரிப் பதவி ஏற்றார். (அப்பொழுது பின்னர் அதிலிருந்து பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் அவரது சகாக்களும் தமிழ் காங்கிரஸில் தான் இருந்தனர்) டி.எஸ்ஸின் அரசாங்கம் அந்தத் தேர்தலில் மலையக மக்கள் தமது பகுதிகளில் ஐ.தே.க.வுக்கு எதிரானவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெற வைத்து விட்டார்கள் என்பதற்காக, அவர்களைப் பழிவாங்கும் நோக்குடன் இந்திய வம்சாவழி மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியது.

ஐ.தே.க அரசின் இந்த நடவடிக்கையை அந்த மந்திரி சபையில் ஒரு உறுப்பினராக இருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆதரித்து வாக்களித்து, அந்த மக்களுக்குத் துரோமிழைத்ததின்மூலம், யாழ்ப்பாணத் தமிழ் தலைமை அழியாத வரலாற்றுக் கறையைப் பூசிக்கொண்டது. பொன்னம்பலத்தின் இந்தச் செய்கையை ஆட்சேபிப்பதாகக் கூறி, செல்வநாயகமும் அவரது சகாக்களும் தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை உருவாக்கினர்.

(தொடரும்...)

அதுதான் முதல் வகுப்பு பெட்டிகள் முன்னே இருக்கின்றன.

"நான் இரண்டாம் வகுப்பு டிக்கட் அல்லவா எடுத்திருக்கிறேன்"

"அது பரவாயில்லை. ஒரு போர்ட்டரை அனுப்பி, உங்களது டிக்கட்டை முதல் வகுப்பு டிக்கட்டாக மாற்ற ஏற்பாடு செய்யலாம். எனக்கு ரெயில்வேயில் நல்ல செல்வாக்கு உண்டு. வாருங்கள் போகலாம்" மன்னிக்கவும் ஹென்றி. நான் இரண்டாம் வகுப்பில் டிக்கெட் எடுத்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. எனது டாக்டரின் ஆலோசனை அது. ட்ரெயினில் பயணம் செய்யும்போது என்ஜினுக்கு அருகே பயணம்செய்தால் அதன் அதிர்வு எனது இருதயத்தைப் பாதிக்கும் என்று அவர் சொல்லியிருக்கிறார். அதுதான் எப்போதும் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்கிறேன்"

"டாக்டர் கூறினால் அதைத் தட்டக் கூடாது. அவர்களுக்குத்தான் எமது உடலைப்பற்றித் தெரியும்"

"பார்த்தீர்களா, நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் போய் முதல் வகுப்பில் பயணம் செய்யுங்கள். நானும் மிஸ் லோசனும் இரண்டாவது வகுப்பில் வருகிறோம்."

"நோ, நோ. அது எப்படி முடியும்? மிஸ் லோசன் சகோதரனைப் பிரிந்த சோகத்தில் இருக்கிறார். அவருக்குத் தேறுதல் கூறுவது எமது கடமையல்லவா. எட்வேர்ட்டுடன் இருக்கவேண்டியது அவசியமல்ல.

"இல்லை. அது நன்றாக இருக்காது. நீங்கள்தான் மிஸ் லோசனை முதலில் சந்தித்தீர்கள். இப்போது அவரை உங்களுடன் இருந்து பிரித்துச் செல்ல நான் விரும்பவில்லை. எல்லோருமே இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்டில் போகலாம்"

ஹென்றி முன்னே நடக்கத் தொடங்க, மற்றய இருவரும் வேறு வழியில்லாமல் பின்தொடர்ந்தார்கள். இரண்டாம் வகுப்புப் பெட்டிக்குள் ஏறிக்கொண்டார்கள்.

இதுவரை எல்லாத் தடைகளையும் தாண்டி வந்து திட்டப்படி கொள்ளையடிக்கப் போகும் தினத்தில் ஹென்றியின் உருவில் இதோ ஒரு இறுதித்தடை. இந்தத் தடையை எப்படி நீக்குவது.

எட்வேர்ட் தனது பொக்கட்டில் இருந்து கடிகாரத்தை எடுத்துப் பார்த்தார். ட்ரெயின் புறப்படுவதற்கு இன்னமும் ஆறு நிமிடங்களே இருந்தன. அதற்கு முன்னர் ஹென்றியைக் கழட்டிவிடவேண்டும். எப்படி?

ஆ! சூட்கேஸ்.

ஹென்றியின் சூட்கேஸ்கள் அவரது முதல் வகுப்பு பெட்டியில் அல்லவா உள்ளன? யாருமற்ற நிலையில் அங்கே சூட்கேஸ்கள் இருந்தால் யாராவது திருடிவிடுவார்கள் என்று சொல்லலாம்.



நானும் உங்களுடன் இரண்டாம் வகுப்பு பெட்டியிலேயே வருகிறேன்"

ஆகா. இந்த ஆள் விடாக்கண்டனாக இருக்கிறரே. இவரை எப்படிக் கழட்டுவது?

"ஆம். நீங்கள் சொன்ன பின்புதான் மிஸ் லோசன் சோகமான மனநிலையில் இருக்கும் விஷயம் எனக்கும் ஞாபகம் வருகிறது. இவ்வளவு சோகமாக உள்ள அவரை இரண்டாம் வகுப்பு கம்போர்ட்மெண்ட் போல வசதி குறைந்த இடத்தில் கொண்டுபோவது சரியில்லை"

"அதற்கு என்ன செய்யலாம்?"

"ஒரு வேலை செய்யுங்கள். நீங்கள் மிஸ் லோசனை உங்களுடன் முதல் வகுப்பு கம்பார்ட்மெண்ட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள். நான் இரண்டாம் வகுப்பில் தனியே வருகிறேன்" என்றார் எட்வேர்ட்.

இப்படிச் சொல்லும்போது எட்வேர்ட் தமது கண்களால், மிஸ் மரியத்தை ஹென்றியுடன் செல்லுமாறு சைகை காட்டியிருந்தார். உண்மையில் இந்த ரயில் கொள்ளைத் திட்டத்துக்கு மிஸ் மரியம் மறுபடியும் போர்ட்டர் பிடித்து அவரது சூட்கேஸ்களை 6 நிமிடங்களுக்குள் இரண்டாம் வகுப்பு பெட்டிக்குக் கொண்டுவருவது நடக்காது.

"ஹென்றி, ஒரு விஷயத்தை மறந்து விட்டோம் பார்த்தீர்களா? உங்களுடைய சூட்கேஸ்கள். அவை முதல் வகுப்பு பெட்டியில் அல்லவா இருக்கும்?"

"சூட்கேசா?" சிரித்தார் ஹென்றி. "ஓ எட்வேர்ட்... நான் இந்தப் பயணம் எதற்காக செய்கிறேன் என்று தெரியாதா? எங்கள் வங்கியின் தங்கப்பாளங்கள் இந்த ட்ரெயினின் கார்ட் வேகனில் பயணிக்கின்றன. அவற்றுடன் வங்கி அதிகாரி ஒருவர் அதே ட்ரெயினில் பயணம் செய்யவேண்டும் என்பது வங்கியின் நடைமுறை. அதற்காகத்தான் போகிறேன். சூட்கேஸ் ஏதுமில்லை"

மிஸ்மரியம் கவலையுடன் எட்வேர்ட்டின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். ஹென்றியை எட்வேர்ட் எப்படி இங்கிருந்து அனுப்பப்போகிறாரோ? அதிக நேரம் இல்லை.




(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம்

158

பா.ராகவன்

இரவு – பகல் பாராமல் நடந்தது. பிறவி எடுத்ததே பேரணி நடத்தத்தான் என்பதுபோல் திடீர் திடீரென்று நினைத்துக்கொண்டாற்போல் மக்கள் கூடிவிடுவார்கள். நூற்றுக்கணக்கான குழந்தைகளை முதலில் நடக்கவிட்டு, பின்னால் பெண்கள் அணிவகுப்பார்கள். அவர்களுக்குப் பின்னால் ஆண்கள். நடுவில் ஊடுபாவாகப் போராளி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இருக்கவே இருக்கிறது கல் வண்டிகள். பெற்றோல் அடைக்கப்பட்ட கண்ணாடி போத்தல்கள்.

பலஸ்தீனியப் போராளி இயக்கங்களின் நோக்கத்துக்கு, இந்த மக்கள் எழுச்சிப் பேரணிகள் மிகப்பெரிய உதவிகள் செய்ததை மறுக்கவே முடியாது. அதே



சமயம், இழப்புகளும் சாதாரணமாக இல்லை.

முதல் இண்டி:ஃபதா தொடங்கி பதின்மூன்று மாத காலத்தில் கிட்டத் தட்ட இரண்டாயிரம் முஸ்லிம்கள் இஸ்ரேலியக் காவல்துறையினரால் கொல்லப் பட்டிருக்கிறார்கள். அத்தனைபேரும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்கள். பதிலுக்கு அரேபியர்கள் நடத்திய தாக்குதலில் (அதே ஒரு வருட காலத்தில்) 160 இஸ்ரேலியக் காவல்துறையினர் இறந்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் கல்லடித் தாக்குதல் உத்தியைக் காட்டுமிராண்டித்தனமாக மீடியாவில் முன்னிறுத்த, இஸ்ரேல் அரசு மிகப்பெரிய முயற்சிகள் மேற்கொண்டது. உலகப்போர்களையும் உள்ளூர்ப் போர்களையும் பார்த்துவிட்ட பிறகு, துப்பாக்கிச் சூடு என்பது மிகச் சாதாரணமான விஷயமாக ஆகிவிட்ட நிலையில், இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கல்லால் அடித்துக் கொல்வது என்பது கண்டிப்பாகக் காட்டுமிராண்டித்தனமாகக் கருதப்பட வாய்ப்பிருக்கிறது என்று நம்பி, இஸ்ரேல் அரசு இண்டி:ஃபதாவின் வன்முறைப் பக்கங்களை குறிப்பாக அரேபியர்களின் கல்லடித் தாக்குதல் காட்சிகளை கவனமாகப் படம் பிடித்து மீடியாவுக்கு அளிக்க விசேஷ கவனங்கள் எடுத்துக்கொண்டது.

ஆனால், இந்த முயற்சி பலனளிக்க வில்லை. காரணம், இண்டி:ஃபதா ஊர்வலங்களைக் குழந்தைகளை முன்னிறுத்தி அரேபியர்கள் நடத்தியபடியால், முதல் பலி எப்படியானாலும் சிறுவர், சிறுமியராகவே இருந்ததால், அதுதான் பூதாகரமாக வெளியே தெரிந்தது. "குழந்தைகளைத் தாக்காதீர்கள்" என்று இராணுவ உயர் அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் கரடியாகக் கத்திக்கொண்டிருந்தாலும், இஸ்ரேலியப் படையினருக்கு அத்தனை பெரிய கூட்டங்களைச் சமாளிக்கத் தெரியவில்லை. குழந்தைகளை விலக்கிவிட்டு எப்படிக் கூட்டத்தின் உள்ளே புகுந்து பின்னால் அணி வகுக்கும் ஆண்களைக் குறி வைப்பது என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை.

ஊர்வலத்தை தூரத்தில் பார்க்கும்போதே அவர்கள் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசத் தொடங்கிவிடுவார்கள். எப்படியும் சில நூறு குழந்தைகளாவது உடனே மயக்கமடைந்து கீழே விழும். காத்திருந்தாற்போல் போராளி அமைப்பினர் அவற்றைப் புகைப்படமெடுத்து அனுப்பி விடுவார்கள். இஸ்ரேலியப் படையினர் ஊர்வலத்தை நெருங்கி, தாக்குதலை மெல்ல ஆரம்பித்து எல்லாம் முடிந்தபிறகு படமெடுக்கத் தொடங்குவதற்குள் அங்கே குழந்தைகள் விழுந்து கிடக்கும் படங்கள் பிரசுரமே ஆகியிருக்கும். நாடெங்கிலும் பெரிது பெரிதாக போஸ்டர் அடித்து ஒட்டிவிடுவார்கள். நம்மூர் பாணியில் சொல்லுவதென்றால் "அப்பாவிக் குழந்தைகள் அநியாய பலி! யூதர்களின் கொலை வெறியாட்டம்!!" என்கிற தலைப்புகளை நாள்தோறும் பார்க்கமுடிந்தது.

பலஸ்தீன் பற்றி எரிகிறது என்பது தெரிந்ததுமே உலகெங்கிலும் உள்ள பத்திரிகைகளும் தொலைக்காட்சி நிறுவனங்களும் தமது பிரதிநிதிகளை பலஸ்தீனுக்கு அனுப்ப ஆரம்பித்து விட்டார்கள். பெரும்பாலான சர்வதேச ஊடகங்களுக்கு அன்று பலஸ்தீனில் ஒரு நிரந்தர அலுவலகமே இருந்தது.

இந்த மேலை நாட்டு ஊடகச் செய்தியாளர்களிடம் ஒரு பிரச்சினை என்னவெனில், அவர்களுக்கு அரபு – யூத உறவு அல்லது உறவுச் சிக்கல் பற்றிய அடிப்படைகள் அவ்வளவாகத் தெரியாது. வரலாறு தெரியாது. ஆகவே, ஒவ்வொருவரும் தம் இஷ்டத்துக்கு ஒரு வரலாற்றை உற்பத்திசெய்து பக்கம் பக்கமாகக் கதை எழுத ஆரம்பித்து விட்டார்கள். குறிப்பாக ஐரோப்பிய தேசங்களிலிருந்து அன்றைக்கு பலஸ்தீனுக்கு வந்த பத்திரிகையாளர்கள் அடித்த கூத்து, நகைச்சுவை கலந்த சோகம்.

ஒரு நாளைக்கு ஒரு கதை சொல்லுவார்கள். **(தொடரும்)**

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

08




# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

அவனை எதிர்காலத்தில் ஒரு உன்னத நிலைக்கு கொண்டு வருவதுதான் காட்லாவுக்குச் செய்யும் நன்றிக்கடனாக எண்ணினார்.

மண்டேலா ஐந்தாம் வகுப்பை வெற்றிகரமாக முடித்ததைக் கொண்டாடும் வகையில் ஆடொன்று பலியிடப்பட்டது. அவ்விழாவை கோலாகலமாக ஜோங்கிந்தாபா அரசர் கொண்டாடினார். அதன் பின்னர் மண்டேலா தெம்பு பிரதேசத்தின் உயர்ந்த பள்ளியான "கிளார்க்பெரி இன்ஸ்டிட்யூட்" எனும் பள்ளியில் சேர்க்கப்பட்டான். ஜோங்கிந்தாபா ஹாரிஸ் பாதிரியார் மண்டேலாவை பார்த்து புன்னகை செய்தார். ஜோங்கிந்தாபா ஹாரிஸ் பாதிரியாரை பற்றி மண்டேலாவுக்கு ஏற்கனவே கூறி வைத்திருந்தார். ஹாரிஸ் பாதிரியார் என்ற வெள்ளைக்காரர் வெளிப்புறத்திற்கு வெள்ளையாக இருந்தாலும் மனதளவில் அவர் ஒரு ஆபிரிக்கர். தெம்பு மக்களை மிகவும் நேசிக்கும் ஒரு மனிதர். அவருக்கு நீ கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்று ஜோங்கிந்தாபா சொல்லி வைத்திருந்தபடியால் மண்டேலா சங்கடங்கள் எதுவுமின்றி ஹாரிஸ் பாதிரியாருடன் கைகுலுக்கினான். மண்டேலா முதன் முறையாக ஒரு வெள்ளைக்காரருடன் கை குலுக்கிய சந்தர்ப்பம் இதுவாகும்.



கிளார்க்பெரி இன்ஸ்டிடியூட் இயங்குமிடம் ஜோங்கிந்தாபா அரசரின் தந்தையால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இடம். இதையறிந்த மண்டேலா தனக்கு பள்ளியில் இராஜ மரியாதையும் சலுகைகளும் கிடைக்கும் தன்னை யாரும் அதட்டவோ, மிரட்டவோ கண்டிக்கவோமாட்டார்கள் என நினைத்து மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். ஒரு சில தினங்களிலேயே அவன் கனவு கலைந்துபோனது. மண்டேலாவிற்கும் மற்றவர்களுக்கும் எந்த வித்தியாசமும் அங்கில்லை. அனைவரும் ஒன்றுபோல் நடத்தப் பட்டனர். ஒரே தண்டனையே அனைவருக்கும் வழங்கப்பட்டது. அரசனே வந்து படித்தாலும் இதுதான் நிலைமை என்று மண்டேலா புரிந்துகொண்டான்.

அரசரும் அவர் மகனும் அங்கேதான் படித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இப்பள்ளியில் சேர்த்ததன்மூலம் ஜோங்கிந்தாபா அரசர் மண்டேலாவை தன் சொந்த பிள்ளையாகவே கருதி வளர்த்துவந்தார் என்பது நிதர்சனம்)

மண்டேலா படிக்கும் உயர்பள்ளியான கிளார்க்பெரி இன்ஸ்டிடியூடின் அதிபராக ஹாரிஸ் பாதிரியார் என்ற வெள்ளைக் காரரே பணியாற்றிக்கொண்டிருந்தார். ஜோங்கிந்தாபா மண்டேலாவை ஹாரிஸ் பாதிரியாரிடம் அறிமுகப்படுத்தினார். அதிபரே, "நீங்கள் இவனுக்கு அளிக்கப் போகும் கல்வியில்தான் இவனது எதிர் காலமே தங்கியுள்ளது. இவனது தந்தை காட்லாவை போல் இவனும் பிற்காலத்தில் அரசனுக்கு ஆலோசனை சொல்பவனாக மாறி தெம்பு மக்களுக்கு தலைவனாக வரவேண்டும். அதற்கு நீங்கள் கொடுக்கும் உயர்கல்வி கைகொடுக்கும் என்று நம்புகிறேன்" என ஜோங்கிந்தாபா கூற

தாங்கள் படித்துக்கொண்டிருப்பது இராணுவப் பள்ளியிலோ என்று மாணவர்கள் நினைக்கும் அளவிற்கு ஹாரிஸ் பாதிரியார் நிர்வாகத்தை எப்போதும் கட்டுக்கோப்பாக நடாத்தி வந்தார். அவரின் முகம் எப்போதுமே சிடுசிடுப்பாகவே இருக்கும். **(தொடரும்)**

ஏ.எச்.ஏ.ஹுஸைன்

# எட்டு வருடங்களும் விடியாத கிழக்கும்

**கிழக்கு** மாகாணம் மூவினங்களும் வாழ்கின்ற ஒரு பிரதேசம். அந்த மாகாணம் பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டு இப்பொழுது எட்டு வருடங்களை நிறைவு செய்திருக்கின்றது.

2007ஆம் ஆண்டு, ஜுன் 19 ஆம்திகதி கிழக்கு மாகாணம் முற்றாக பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் பிரகடனம் செய்தது.

கிழக்கு மாகாணத்தில் மாவிலாறு எனும் நீர்விநியோக மார்க்கம் புலிகளால் தடைப்படுத்தப்பட்டபோது அதனை விடுவிப்பதற்காக தொடங்கிய படை நகர்வு "போரைக் கொண்டு வருமா அல்லது நீரைக் கொண்டு வருமா" என்ற கேள்விக்கு மத்தியில் போரையும் நீரையும் கொண்டுவந்தது. கடைசியில் பயங்கர வாதத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டையும் விடுவித்தது.

பயங்கரவாதம் கோலோச்சியபோது ஏனைய பகுதிகளில் இருந்த நிலைமையைப்போல கிழக்கு மாகாணத்திலும் கிட்டத்தட்ட எல்லாமே சீரழிந்துதான் இருந்தது. மக்களின் இயல்பு வாழ்க்கையில் பயங்கரவாதம் ஏற்படுத்திய பாதிப்புக்கள் சொல்லுந்தரமன்று.

மக்களின் வாழ்வும் வாழ்விடங்களும், வாழ்வாதாரமும் என்று கிட்டத்தட்ட எல்லாமே அழிக்கப்பட்டு ஒரு நெருக்கடிக்குள் வாழ மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள். அன்றாடக் காய்ச்சிகளும், அரச உத்தியோகத்தர்களும், வியாபாரிகளும் என்று எல்லோருமே ஏதோ ஒருவகைப் பாதிப்புக்கு உள்ளாகித்தான் இருந்தார்கள்.

கடந்த 25 வருடங்களாக கிழக்கில் உள்ளூர் மக்களின் போக்குவரத்து என்பது முற்றாகவே முடக்கப்பட்டு விட்டது போன்ற நிலைமைதான் காணப்பட்டது. அந்தளவுக்கு அர்த்தமற்ற ஆயுத வன்முறைகள் அராஜகம் புரிந்திருந்தன.

ஆயுத வன்முறைகள் இடம்பெற்ற போது நகர்ப்புற மக்கள் ஓரளவுக்கு தமது போக்குவரத்தை மேற்கொண்டு இருந்தாலும் தொலைதூரத்திலுள்ள கிராம மக்களின் போக்குவரத்து என்பது உயிரைப் பணயம் வைத்த ஒன்றாகவே இருந்துவந்துள்ளது.

பயங்கரவாத வன்செயல்கள் பெரும்பாலும் வறிய மக்களின் வாழ்வையும் நடமாட்டத்தையும் அவர்களது போக்குவரத்து மார்க்கத்தையும் இலக்கு வைத்திருந்ததே இதற்குக் காரணமாகும். காட்டிலுள்ள ஒற்றையடிப் பாதைகளில் தொடங்கி காப்பெற் வீதிகள் வரையும் பயங்கரவாதத் தாக்குதல்களின் இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தன.

ஏழை விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகின்ற அவர்களது விளை பொருட்களை நகரப்பகுதிகளுக்கு எடுத்துவந்து விற்பனை செய்ய முடிந்திருக்கவில்லை. அவர்களது அப்பாவிப் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று படிக்கமுடியவில்லை, நோயாளிகள் வைத்திய வசதிகளை நாடி மருத்துவ மனைகளுக்குச் செல்ல போக்குவரத்து வசதிகள் இருந்திருக்கவில்லை. கர்ப்பிணிப் பெண்களால் வைத்தியசாலைகளுக்குச் செல்லமுடியவில்லை.

கண்ணிவெடிகளால் பதம் பார்க்கப்பட்ட கரடுமுரடான பாதைகளில் தான் மக்கள் காததூரம் நடக்கவேண்டி இருந்தது. பாலங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டதால் மக்கள் உயிர்ப் போராட்டத்தினூடே ஆறுகளையும் வாவிகளையும் கடந்து பயணம் செய்ய வேண்டியிருந்தது. கையில் குழந்தை, தலையில் நாளாந்த ஜீவனோபாயத்திற்காக ஏதோ உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் தேவையான உணவுப் பொருட்கள் இப்படி நகருக்கு வந்து பொருட்களை வாங்கிக் கொண்டு சுட்டெரிக்கும் வெயிலில் தாய்மார் கால் நடையாகவே செல்லும் காட்சி நெஞ்சை உருக்கும்.

இது கடந்த பயங்கரவாதம் கோலோச்சிய போது கிழக்கில் இருந்த நிலைமை.

ஆனால் இப்பொழுது இத்தகைய சிரமங்கள் எதுவுமில்லாது மக்கள் நிம்மதியாகப் பயணம் செய்ய முடிவதே ஆயுத வன்முறைகளால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகி இருக்கிறது.

இதனால் பயணக்களைப்பு, நேரவிரயம், அதிக செலவு என்பனவற்றையும் மக்கள் மீதப்படுத்த முடிந்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றார்கள். பல மணி நேரங்களை, சிலவேளை இரண்டு நாட்களைக்கூட அங்குள்ள ஏழைக் கிராம மக்கள் விரயம் செய்து பயணத்திற்காக சிரமப்படவேண்டியிருந்தது.

ஆனால் தற்பொழுது போக்குவரத்து நிலைமை என்பது கிழக்கில் முற்று முழுவதுமாக மாறியிருக்கின்றது. புல்மோட்டை தொடக்கம் அறுகம்பை வரை வீதி அபிவிருத்தியும் பாலங்களின் கட்டுமானங்களும் நடந்திருக்கின்றன.

சேறும் சகதியும் நிறைந்து பள்ளமும் படுகுழியுமாக இருந்த வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. கண்ணி வெடிகள் பொருத்தப்பட்டு உடைந்து விழுந்து தொங்கிக்கொண்டு இருந்த பாலங்கள் யாவும் சுமார் நூறு வருடங்கள் அதன் உறுதி இருக்கக்கூடியளவுக்கு நவீனமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

பாலங்களும் வீதிகளும் நவீனமயப் படுத்தப்பட்டதன்மூலம் அபிவிருத்தியின் பலாபலன் கிராமிய மக்களின் காலடிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பதை இப்பொழுது கண்கூடாகக் காணமுடிகின்றது.

கிழக்கு மாகாணத்தில் பாலங்கள் நிர்மாணிக்கப்பட்ட விடயத்தோடு ஒட்டியதாக சமூக சகவாழ்வும் பழைய காயங்களுக்கான ஒத்தடமிடுதலும் இடம்பெற்றிருப்பதைப் பார்க்கமுடிகின்றது. கிராம மக்கள் நகர வாசிகள் என்பதற்கு அப்பால் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களின் மனங்கள் பாலங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் ஒன்றிணைக்கப்பட்டு இருக்கின்றன.

இப்பொழுது கிழக்கின் எந்தவொரு பட்டி தொட்டிகளிலிருந்தும் பயணம் செய்வது பாலங்களும் வீதிகளும் நவீனமாக அபிவிருத்தி செய்யப்பட்டு இருப்பதன்மூலம் இலகுவாக்கப்பட்டு இருக்கின்றது. அத்துடன் பயணத்துக்காக நாட்கணக்கில் செலவிட்ட நேரத்தையும், பணத்தையும் மீதப்படுத்த முடிந்திருக்கின்றது.

கிராமப்புறத்தின் மூலைமுடுக்கெல்லாம் மக்களின் காலடிக்கு பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அபிவிருத்தியின் நன்மைகளை கிராம மக்களும் அனுபவிக்க வாய்ப்பேற்பட்டுள்ளது. பாலங்களும் பாதைகளும் உண்மையான சமூக மாற்றத்தின் ஒரு இணைப்புக்கான அடையாளமாகக் கொள்ளமுடியும்.

## அரசியல் இழிநிலை

கிழக்கு மாகாணத்தைப் போன்று இலங்கையின் மற்ற மாகாணங்களில் எல்லாம் மாகாண சபை விவகாரம் கொந்தளிப்பாக இருப்பதில்லை. அந்த மாகாணங்களில் முதலமைச்சர் எந்த இனமாக இருக்கப் போகின்றார் என்பதும் இனத்துவேச பார்வையில் நோக்கப்படுவது இல்லை.

கிழக்கு மாகாணத்தில் மட்டும்தான் இத்தகையதொரு இழிநிலை பீடித்து, நீடிக்கின்றது. இந்த நிலைமைக்கு முற்று முழுவதுமாக இனத்துவேசிகளான அரசியல்வாதிகளே காரணம் என்று படித்தவர் தொடக்கம் பாமரர் வரை பகிரங்கமாகக் கூறுகின்றார்கள். அது தான் உண்மையும்கூட.

கிழக்கு மாகாண சபையின் முதல் அமைச்சர் முஸ்லிமா அல்லது தமிழரா என்பதுதான் இங்குள்ள இழிநிலை அரசியல் வாதிகளால் எழுப்பப்படும் பிரச்சினை. அதைத்தான் கிழக்கு மாகாண சபையின் தேர்தல் விஞ்ஞாபனமாகக்கூட சில இனத்துவேச அரசியல்வாதிகள் கையில் எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

அதேவேளை, நடுநிலையில் நின்று, நிதானித்து உற்றுக் கவனிக்கும் ஒரு சிலரோ கிழக்கின் முதலமைச்சர் தமிழரா, முஸ்லிமா, சிங்களவரா? என்பதல்ல முக்கியம். முதலமைச்சர் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள், வேடுவர்கள் உள்ளிட்ட சகல தரப்பாரையும் அரவணைத்து ஆட்சி செய்யும் யோக்கியதையைக் கொண்டுள்ளாரா என்பதே கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்று வாதிடுகின்றனர்.

சகல சமூகங்களையும் நேசிப்பவர்களும் தூரநோக்கோடு சிந்திப்பவர்களும் பயங்கர்வாதத்தின் பிடியிலிருந்து மக்களை நிம்மதியாக வாழவைப்பதற்குப் பாடுபட்டவர்களும் இந்தக் கிழக்கு மாகாணத்தை ஆள்வதற்குச் சாலச்சிறந்தவர்கள்.

ஆனால், கிழக்கில் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக பயங்கரவாதம் நிலவிய சூழ்நிலையில் தொடங்கி தற்போதுள்ள நிலைமைவரை பயங்கரவாதப் பின்புலம் கொண்டோரும் இன ரீதியிலான அரசியல் பிழைப்பு நடத்துவோரும் கிழக்கில் இனமுறுகலை மறைமுகமாகவும் நேரடியாகவும் ஏற்படுத்தி வந்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படை.

இப்பொழுதும்கூட அரசியல்வாதிகளால் இத்தகைய கீழ்த்தரமான இனத்துவப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தமது வியூகங்களை மாற்றி மாற்றி அமைத்து மக்களை ஏமாற்றிவருகின்றனர்.


உண்மையில் ஒரு இணக்கப்பாட்டுடனான நல்லாட்சியை கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்துவதற்கு அரசியல்வாதிகளின் இத்தகைய கீழ்த்தரமான நடவடிக்கைகள் ஒரு சாபக்கேடாகவே அமைந்துள்ளது. இது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் குந்தகமாகவே அமைந்து விட்டிருக்கின்றது.


பயங்கரவாதத்தால் நிலைகுலைந்து வாழ்க்கை சீரழிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் வாழும் சகல இன மக்களுக்கும் நிம்மதியான வாழ்வும் நிலைபேறான அபிவிருத்தியும் கிடைக்கப்பெற வேண்டுமாக இருந்தால் அரசியல்வாதிகளிடம் இனத்துவேச சிந்தனை இருக்கக் கூடாது.

பயங்கரவாதப் பின்னணியைக் கொண்டவர்களும், பாமர மக்களை ஏமாற்றி இனத்துவேசத்தை வளர்த்து அதில் பிழைப்பு நடத்துவோரும் அவர்கள் எந்த சமூகத்தின் பின்னணியில் இருந்து வந்தாலும் அவர்களால் இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டையும் நல்லாட்சியையும் கொண்டு வர ஒருபோதும் அவர்களது மனப்பாங்குகள் இடமளிக்காது என்பதே கடந்தகால அனுபவமாகும்.

பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கப்பட்ட கிழக்கில் ஏற்கெனவே ஒரு தமிழ் முதலமைச்சர் அரசாண்டுவிட்டார். இப்பொழுது ஒரு முஸ்லிம் அரசாள்கிறார். கடந்த காலத்தில் இழந்தவை எல்லாம் ஒருபுறமிருக்க இனி நிம்மதியான வாழ்வாவது நமக்கு கிடைக்கவேண்டும் என்று மக்கள் ஏங்கிக் கொண்டி இருக்கின்றார்கள்.

மக்களின் இந்த ஏக்கத்தையும் எதிர்பார்ப்பையும் புரிந்துகொண்டுள்ள தமிழரோ, முஸ்லிமோ, சிங்களவரோ கிழக்கு மாகாணத்தை ஆள அருகதை உடையவர்கள் இதன் மூலமாகவே கிழக்கின் இன முறுகல் நீங்க வாய்ப்பேற்படும்.



கிழக்கு மாகாணத்தில் மாவிலாறு எனும் நீர்விநியோக மார்க்கம் புலிகளால் தடைப்படுத்தப் பட்டபோது அதனை விடுவிப்பதற்காக தொடங்கிய படை நகர்வு "போரைக் கொண்டு வருமா அல்லது நீரைக் கொண்டு வருமா" என்ற கேள்விக்கு மத்தியில் போரையும் நீரையும் கொண்டுவந்தது. கடைசியில் பயங்கரவாதத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டையும் விடுவித்தது.

# ஏமாற்றும் தலைமைகளும் ஏமாறும் தமிழர்களும்




**ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொரு வகையான தேர்தல் பரப்புரைகளைத் தொடங்கிவிட்டன. நிலைமை இவ்வாறிருக்கும்போது பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையற்ற தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 112 உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர். இன்னும் பலர் கையொப்பமிட உள்ளனர். இருந்தும் 112 உறுப்பினர்களுடன் இன்னுமொருவர் கையொப்பமிட்டாலேபோதும். பிரதமர் உடனடியாக பதவிதுறந்தே ஆகவேண்டும். ஆனாலும் இவ்விடயத்திலே என்ன் நடக்கும் என்பது தெளிவாக இல்லை. இக்கட்டுரை வெளியாகும்போது சிலவேளை பிரதமர் பதவியிலிருந்து விலகினாலும் ஆச்சரியத்துக்கு இடமிருக்கமுடியாது!**

வரப்போகின்றது நாடாளுமன்றத் தேர்தல். கட்சிகள் மும்மூரமாகி வருகின்றது. போட்டிகள் அதிகரித்து, ஒவ்வொரு கட்சிகளும் வெற்றி இலக்கினை நோக்கிச் செல்வதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

வெற்றியினை இலக்காகக் கொண்டு திரைமறைவுச் சதிவேலைகளும் நடைபெற்றுவருகின்றன. இத்தகைய சதி முயற்சி நடவடிக்கைகள் தென்னிலங்கையிலேயே அதிகமாக நடந்தேறிவந்தாலும், வடபகுதியிலும் இத்தொற்று நோயின் தாக்கம் தென்படுகின்றது.

தேர்தலில் யாரும் போட்டியிடலாம், கட்சிகளில் இடமில்லையென்றால் சுயேட்சையாகப் போட்டியிட எல்லோருக்குமே சுதந்திரம் உள்ளது! தனி ஒரு மனிதனுக்கு இருக்கக்கூடிய சுதந்திரத்தை யாருமே தடுத்துவிட முடியாது! இருந்தும் போட்டியாளர்களை வெல்லவைப்பது அப்பாவிப் பொதுமக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அந்தவகையிலே மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிக்கு வருவதற்கு முன்பு எந்தவிதமான வாக்குறுதிகளையும் அள்ளிவீசி மக்களை ஏமாற்றிப் பழகிப் போய்விட்டார்கள். தேர்தல் பிரசாரத்துக்காக ஏழை மக்களின் குடிசைகளுக்கெல்லாம் தேடிச் செல்வார்கள். கையெடுத்து கும்பிடுவார்கள். வீதி, மின்சாரம், கட்டடங்கள், வேலைவாய்ப்புகள், உதவிகள் எல்லாம் வழங்குவோம் என்று மேடை போட்டு முழங்குவார்கள். வெற்றியடைந்து பதவி, புகழ், மாலை மரியாதை, வாகனங்கள், பாதுகாப்பு, அளவுக்கு, மீறிய சலுகைகள், சம்பளங்கள் என்றெல்லாம் கைகளுக்கு வந்துசேர ஏழை, எளிய மக்களின் துன்பங்கள், துயரங்களை கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் மறந்துவிடுவார்கள். இது அரசியல்வாதிகளுடன்கூடப் பிறந்த நடவடிக்கையாகும்.

உதாரணத்துக்கு: (அண்மையில் ஒரு யுவதி, பிரதேச சபை தவிசாளரிடம் சென்று எங்கள் பகுதியில் பெண்கள் உட்படப் பலரும் போக்குவரத்துச் செய்யும் வீதியாக அமைந்துள்ளபடியால் அவர்களின் பாதுகாப்புக் கருதி வீதி விளக்கினை பொருத்தித் தருமாறு கோரிக்கை விடுத்தபோது, “உங்கள் ஊரில் மட்டும்தானா பெண்கள் இருக்கிறார்கள்” என்று கேலியாக பதிலளித்துள்ளார் அந்த அதிகாரி.) இவரும் கையெடுத்து கும்பிட்டு வாக்கு வங்கியை நிரப்பி அதிகாரியாக வந்தவர்தான்.

இவ்வாறு வாக்குப் பெற்று பதவிக்கு வந்தவர்களின் காலம்முடிந்து மீண்டும் தேர்தல் வரும்போது போனமுறை சொன்ன வாக்குறுதிகளையெல்லாம், மறந்து மீண்டுமொரு ஏமாற்று வித்தைகளை முன்னெடுப்பார்கள், இதனை நம்பி, நம்பி ஏமாறும் வாக்காளர்கள் இருக்கும் மட்டும் அரசியல்வாதிகள், இன்னும் உயர உயரப் போனவண்ணமே இருப்பார்கள். இப்படியான சங்கடங்களுடன் தான் மீண்டுமொரு பாராளுமன்றத் தேர்தலை நாடு சந்திக்கப்போகின்றது.

தமிழ், சிங்களம், முஸ்லிம்கள், என்று மூவினத்தவர்களும் தங்கள், தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யப் போகின்றார்கள். இத்தெரிவுகளுக்கு வாக்காளப் பெருமக்களின் தெரிவுகளே முடிவாகும்.

இந்தவகையிலே ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொரு வகையான தேர்தல் பரப்புரைகளைத் தொடங்கிவிட்டன. நிலைமை இவ்வாறிருக்கும்போது பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையற்ற தீர்மானம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. 112 உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர். இன்னும் பலர் கையொப்பமிட உள்ளனர். இருந்தும் 112 உறுப்பினர்களுடன் இன்னுமொருவர் கையொப்பமிட்டாலேபோதும் பிரதமர் உடனடியாக பதவிதுறந்தே ஆகவேண்டும். ஆனாலும் இவ்விடயத்திலே என்ன நடக்கும் என்பது தெளிவாக இல்லை. இக்கட்டுரை வெளியாகும்போது சில வேளை பிரதமர் பதவியிலிருந்து விலகினாலும் ஆச்சரியத்துக்கு இடமிருக்கமுடியாது!

சிலவேளை பதவியினை தக்க வைத்துக்கொள்ள கையொப்பமிட்டவர்களுடன் இரகசியமாக பேசி, விட்டுக் கொடுப்பனவுகள், அது, இது என்று கூறி நிலைமை தேர்தல்வரை நீடிக்கவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இப்படியான தர்மசங்கடமான நிலையிலே 20ஆம் சட்டமூலம் நிறைவேற்றிய பின்னரே பாராளுமன்றம் கலைக்கப் படலாம் என்ற ஊகங்களும் ஆளும் தரப்பின் முக்கியமானவர்கள் செய்தியிட்டும் வருகின்றனர்.

இப்படியான இழுபறிகளையெல்லாம் கடந்து தேர்தலுக்கு செல்வதற்கு எல்லோருமே அதிவேகமாக தயாராகி வருகின்றனர். முன்னைய தேதல்களின் போது கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றவில்லை. ஆனாலும் அடுத்த கட்ட நிகழ்ச்சி நிரலுக்குச் செல்வதற்கும் அரசியல்வாதிகள் தயாராகிவிட்டனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலே பல அரசியல் கட்சிகள் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபன அறிக்கைகளைக்கூட இன்னும் நிறைவேற்றவில்லை. தாங்கள் பதவிக்கு வந்தால் பத்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம் என்று கூறியவர்களும் இருக்கின்றனர். எப்படியோ அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றிப் பழகிப்போய்விட்டனர். மக்களும் ஏமாந்து பழகிவிட்டனர். இது நடைமுறையிலுள்ள விடயமாகியும் விட்டது.

வடக்குக்கும் கிழக்குப் பகுதிகளுக்கும் அரசு ஏதாவது நன்மை செய்ய முற்பட்டாலே போதும். விடயத்தினை திரிபுபடுத்தி அரசாங்கம் இந்த நாட்டினை தமிழர்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்கப் போகின்றது என்று சிங்கள மக்களுக்கு கூறுவார்கள். இது இனவாதம், மற்றும் வாக்குச் சேகரிப்பதற்கும் பதவிக்கு வருவதற்குமான குறுக்குவழி என்பதனை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

தேர்தல் காலம் நெருங்க நெருங்க இன்னும் பல சுவாரஸ்யமான மற்றும் கசப்பான செய்திகளும் வரவே செய்யும். ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி தோற்றுப்போனமைக்கு தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் உட்பட்ட சிறுபான்மையின மக்களே காரணம் என்று இன்றுவரை தெற்கின் மூலைமுடுக்கெல்லாம் பேசப்பட்டு வருகின்றது. இந்தச் செய்தியினால் சிங்கள மக்கள் மத்தியிலே அதாவது இப்போதும் மகிந்தவை நேசிக்கின்ற சிங்கள மக்கள், தமிழ், முஸ்லிம் மக்களை விரோதிகளாகப் பார்க்கின்ற நிலையே காணப்படுகின்றது.

தங்களின் தலைவர் தோற்றுப்போனது தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்கு கிடைக்காமை என்று அவர்கள் எண்ணுவதில் தவறு இருப்பதாக புலப்படவில்லை. ஏனென்றால் இப்போதைய மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் வெற்றியீட்டியது சிறுபான்மை இன மக்களின் வாக்குகளே உதவியது என்று பகிரங்கமாகப் பேசப்பட்டுவருகின்றது! உண்மையும் அதுதான். எனவே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் பரப்புரையிலே இவ்விடயம் முக்கிய பங்கினை வகிக்கப்போகின்றது. இதனால் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் மனங்களிலேயே கசப்புணர்வை வளர்க்கவும், பிரசாரம் செய்ப்வர்களுக்கு வாக்கும் கிடைக்கப்போகின்றது என்பது உண்மையாகும்.

எனவே எவராவது மக்களை உசுப்பேத்தாமல், சூடேற்றாமல், நீதி நியாயமான வழிமுறைகளிலே வாக்கினை சேகரிக்க வேண்டியது அரசியல்வாதிகளின் கடமை. ஏமாற்று அரசியலாளர்களில் வடக்கிலே உள்ளவர்களும் குறைந்தவர்கள் இல்லை என்பதனை அவர்களுடைய கடந்த கால சம்பவங்களில் பதிவாகியுள்ளது.

புலிகளின் மறைவுக்குப் பின்னால் அதிர்ஷ்டம்பெற்ற கட்சியாக தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளது. “அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி” என்று புலிகளின் நின்று அறிக்கைவிட்டு தேடிவந்த எத்தனையோ நன்மையான விடயங்களையெல்லாம் தட்டிக்கழித்து காலம் கடத்திய மன்னர்கள் கூட்டமைப்பினர்.

தனித் தமிழீழம் தவிர்ந்த எதனையும் ஏற்கமாட்டோம். இலங்கை-இந்திய உடன்படிக்கையிலே உருவம் பெற்ற 13ஆம் திருத்தச் சட்டமூலத்தை வெறும் ஆரம்பப் புள்ளியாகக்கூட ஏற்கமாட்டோம் என்று வீரவசனம் பேசி இணைந்திருந்த வடக்குக் கிழக்கு மாகாணத்தை தனித்தனியாகப் பிரிந்து போக வழிவிட்டுக்கொடுத்து 13ஆம் சரத்திலே உள்ள சில விடயங்கள் குறைக்கப்பட்டு, அம்மணமான மாகாண சபையினரை பொறுப்பேற்று வைத்திருக்கின்றனர்.

இந்த வடமாகாண சபை தேர்தலிலே நாங்கள் பதவிக்குவந்தால் படையினரை உடன் வெளியேற்றுவோம். இந்தத் தேர்தலை சர்வதேசம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருக்கின்றது. சரியான தீர்வை அவர்கள் பெற்றுத்தருவார்கள். வலி வடக்கு உட்பட இடம்பெயர்ந்தவர்களை உடன் மீளக் குடியேற்றுவோம், காணாமல் போனவர்கள் கைதானவர்களை மீட்டுத்தருவோம் என்றெல்லாம் வீர முழக்கமிட்டதை யாரும் மறந்துபோகவில்லை.

இப்போதைய மாண்புமிகு முதலமைச்சரோ இராணுவத்தை வெளியேற்றுவோம் என்றே பதவிக்கு வந்தவர் என்பதனையும் மறக்கமுடியாது.

இருந்தும் புதிய அரசு அமைந்தவுடன் 2015ஆம் வருட இறுதிக்குள் தீர்வு நிச்சயம் என்று சம்பந்தன் ஐயா சொன்னார். இப்போது அடுத்த நாடாளுமன்றம் அமைந்ததும் தீர்வு பற்றி யோசிக்கலாம் என்று அறிக்கை விடுகின்றார். இது நாடாளுமன்ற தேர்தலை மையமாக வைத்து பித்தலாட்டம் போடுகின்றார். அடுத்த நாடாளுமன்றத்தையும் தங்களுக்குச் சார்பான கட்சியினருக்கு வாக்களிக்க வைக்க இப்பவே ஏமாற்ற தொடங்கியுள்ளனர்.

**அளவெட்டி**
**ப.உதயகுமார்**

ஜனவரி முதலாம் நாள் முதல் அகிம்சைப் போர் வெடிக்கும் என்று வீரவசனம் பேசினார் மாவை சேனாதிராசா. எதுவுமே வெடிக்கவில்லை. இப்படிப் பேசிப் பேசிய காலம் கடத்தி வாக்குத் தேடுவது மக்களை ஏமாற்றும் செயலாகும்.

சர்வதேசம் உன்னிப்பாக இந்தத் தேர்தலை அவதானிக்குமாம். எந்த சர்வதேசம் அவதானிக்கின்றது! கொத்துக் குண்டுவீசி, ஆயிரக்கணக்கானோர் ஒரு சிறு நிலப்பரப்புக்குள்ளிருந்து நிமிசத்துக்கு நிமிசம் செத்து மடியும்போது கேட்காத, வராத, சர்வதேசம் இனியுமா? வரப்போகின்றது!

எனவே இந்த அரசு பிரச்சினையை தீர்க்கும் என்று நம்பமுடியாது! இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன? யாருமே தமிழர் பிரச்சினைத் தீர்வைத் தரப் போவதில்லை. எனவே இனிமேலாவது மக்களை யாருமே ஏமாற்றாதீர்கள். தொடர்ந்து ஏமாந்துகொண்டிருக்க மக்கள் முட்டாள்களுமில்லை.







# கோடையெனும் கொடுமை

**இந்தியாவின் கிராமங்களின் மண் சுவற்றின் மேல்வேயப்பட்ட பிய்ந்து போன ஓலைக் குடிசைகளை, நகர்ப் புறச்சேரிகள் மற்றும் புலம்பெயர்ந்த வட இந்திய கூலித்தொழிலாளிகளின் தகரக் கொட்டகைகளை 'வீடு' என்னும் வகைக்குள்ளேயே அடக்கமுடியுமா? ஆக, இன்னும் கணக்கில் வராத கோடிக்கணக்கான உழைக்கும் இந்திய மக்களுக்கு வெயிலிலிருந்து பாதுகாப்பளிக்கும் குறைந்தபட்ச குடிசைகூட இல்லை என்பதே நிதர்சனம்.**

இந்தியாவில் இந்த ஆண்டு இதுவரை கோடை வெயிலுக்கு 1400 பேருக்குமேல் பலி கொடுக்கப் பட்டிருகிறார்கள். அதிகபட்சமாக ஆந்திராவில் 1020 பேரும், தெலங்கானாவில் 350 பேரும் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் இக்கொலை களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் இருக்கிறது. எனினும், கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையை அரசு அதிகார பூர்வமாக வெளியிடவில்லை. வெளி யிடத் தயாரில்லை என்பதே உண்மை.

கொல்லப்பட்டவர்களில் பெரும் பாலானோர் வெப்பத்தாக்கு நோய் (sun stroke) அல்லது உடலில் நீர் வற்றிப்போதலினால் (dehydration) மரணமடைகின்றனர். உடலின் வெப்பச்சமனிலை குலையும்பொழுது அதாவது உடல் வெப்பம் 40 டிகிரி செல்சியஸை தாண்டும்பொழுது வெப்பத்தாக்கு நோய் ஏற்படட் அதிக பட்சமாக மரணத்தை விளைவிக்கிறது. ஆனால் இந்தியாவின் மத்திய பகுதி களில் இந்த ஆண்டு வெயிலோ, புற வெப்பநிலையை 48 டிகிரி செல்சியஸ் அளவுக்கு ஏற்றியிருக்கிறது.

இங்கு கொல்லப்பட்டவர்கள் யாரும் கடும் உழைப்பினால் முன்னேறியதாக சொல்லப்படும் அதானி, ரத்தன் டாடா, நாராயண மூர்த்தி வகையறாக்கள் அல்ல. யாருடைய கடும் உழைப்பினால் மேற்படி யார் குளுகுளு அறைகளில் காலத்தை கழிக்கிறார்களோ அந்த விவசாயக் கூலிகளும், கட்டுமானத் தொழிலாளர் களும் ஏனைய உழைக்கும் வர்க்கத்தை சார்ந்தவர்களுமே கொல்லப்படுகின்றனர்.

இந்தியாவிலேயே அதிகளவு பேர் உயிரிழந்த ஆந்திர மாநில அரசின் சுகாதாரத்துறை அதிகாரிகளின் துரித நடவடிக்கை என்னவெனில், விழிப்புணர்வு இயக்கம் என்னும் மலைப்பிரசங்கத்தை நடத்தி, மதியம் 1 மணிக்கும் 4 மணிக்கும் இடையே வீட்டுக்குள்ளேயே இருக்குமாறும், வெளியில் போகவேண்டி வந்தால் தலையை வெயில்படாமல் அகன்ற தொப்பிகளால் மூடிக்கொள்ளுமாறும், வெளிர்நிற பருத்தி உடை அணியு மாறும், குடை பயன்படுத்துமாறும், நிறைய தண்ணீர் குடிக்குமாறும் கோடைகால டிப்ஸ் அளிப்பதுதான். கூடுதலாக, நகரங்களின் என்.ஜி.ஓக் களிடம் கையேந்தி தண்ணீர் பந்தல், மோர் விநியோகத்துக்கு ஏற்பாடு செய்கின்றனர்.

ஆமாம், இந்த அறிவுரையை எல்லாம் கேட்காமல் கொளுத்தும் 48 டிகிரி செல்சியஸ் வெயிலில் வெளியே சுற்றுவானேன், செத்துப்போவானேன்? என்ற கேள்வி தோன்றலாம்.

தினம் 200ரூபா கூலிபெறும் கட்டிடத் தொழிலாளியான தெலுங்கானா மாநிலம் நிஸாமாபாத்தை சேர்ந்த மகாலெட்சுமி இதற்கு பதில் சொல்கிறார். "இந்த வெயிலுக்கு பயந்து நான் வேலைக்கு வராமல் வீட்டுக்குள் இருந்தால் என் குடும்பத்துக்கு யார் சோறு போடுவது?"

அரசின் அபார யோசனைப்படி வீட்டுக் குள்ளேயே இருந்தால் மட்டும் என்ன குலு மனாலி காற்றா வீசப்போகிறது? நாட்டில் மூன்றில் ஒரு பங்கு மக்களுக்கு மின்சாரமென்றால் புளிக்குமா, துவர்க்குமா எனக்கூட தெரியாதநிலையில், கொஞ்சம் வசதி படைத்த திரிசங்கு சொர்க்கத்தில் ஊசலாடும் நடுத்தர வர்க்கத்தின் மின் விசிறி, ஏர் கூலர்களின் தலையில் கணக்கு வழக்கற்ற மின்வெட்டை சுமத்தி மங்களம் பாடியிருக்கிறது ஆந்திர அரசு.

2005இல் ஐ.நா.வின் கணக்குப்படியே 7 கோடியே 80 இலட்சம் வீடற்றவர்களை கொண்ட இந்தியாவில், சாலையோரத்தி லும், பாலத்தின் அடியிலும், சாக்கடை யோரத்திலும் வசிக்கும் மக்களை இவர்கள் எந்த வீட்டுக்கு போகச் சொல் கிறார்கள்? ஐ.நா வீடற்றவர்கள் என குறிப்பிடுவது தலைக்கு மேல் கூரைகூட இல்லாமல் தெருவில் உறங்குபவர்களை.

ஆனால், இந்தியாவின் கிராமங்களின் மண் சுவற்றின் மேல் வேயப்பட்ட பிய்ந்துபோன ஓலைக் குடிசைகளை, நகர் புறச்சேரிகள் மற்றும் புலம்பெயர்ந்த வடஇந்திய கூலித்தொழிலாளிகளின் தகரக் கொட்டகைகளை வீடு என்னும் வகைக்குள்ளேயே அடக்கமுடியுமா? ஆக, இன்னும் கணக்கில் வராத கோடிக்கணக்கான உழைக்கும் இந்திய மக்களுக்கு வெயிலிலிருந்து பாதுகாப்பளிக்கும் குறைந்தபட்ச குடிசை கூட இல்லை என்பதே நிதர்சனம்.

மேலும், கோடை கால வெப்பநிலை கடந்த 15 வருட சராசரியைவிட 2 லிருந்து 5 டிகிரிவரை அதிகரித்துள்ளது எனவும் பருவ மழை சரியான நேரத்திற்கு வராமல் போனதும் இந்த வெப்பநிலை தொடர்ந்து நீடிப்பதற்கு காரணமெனவும் இந்திய வளிமண்டலவியல் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

முதலாளிகள் குளு குளு அறையில் காலத்தை கழிக்க வெயிலில் உருகும் தொழிலாளிகள் காரணத்தை ஆராயாமல் பருவமழைமீது பழியை போடுகிறார்கள் அறிஞர் பெருமக்கள். வெப்பநிலை அதிகரிப்பதற்கும், பருவமழை முறைதவறுவதற்கும் காரணமான இயற்கை அழிவுகளை நிகழ்த்துவதும் முதலாளி வர்க்கம்தான் என்பது அந்த அறிஞர்கள் அறியாத ஒன்றல்ல.

• தன் சொகுசுக்காய் ஏசி அறையில் அமர்ந்து கொண்டே பசுமை இல்ல வாயுக் களால் ஓசோனை கிழித்துப்போடுவது.

• தாதுவளத்திற்காக தண்டகாரண்ய காடுகளை மொட்டையடித்து, நியமகிரி மலையை கபளீகரம் செய்வது.

• நீலமலை, கொடைக்கானல் மலைப் பகுதிகளை சுற்றுலா பெயரில் கபளீ கரமாக்கி சராசரி மழை அளவைக் குறைத்து, காடுகள், புல்வெளிகளை அழித்து மழைநீரை விரயமாக்குவது.

• நிலத்தடி நன்னீர் வளத்தையும், தாமிரபரணி, பாலாறு போன்ற ஆறுகளையும், ஏரிகளையும் ஆக்கிரமித்து ரியல் எஸ்டேட் ஆக்கிக் கொழுப்பது என்று தமது லாபத்துக்காக இயற கையை அழிப்பவர்கள்தான் தான் இதற்கு பொறுப்பு. ஆனால், அதன் விலையை கொடுப்பவர்களோ உழைக்கும் மக்கள்.

கொல்லப்பட்டவர்களின் குடும்பங்க ளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் நிவா ரணத்தொகை என சந்திரபாபு அரசு விஷயத்தை கை கழுவிவிட்டு, அதை விட அதிமுக்கியமாக சந்திரசேகர ராவுடன் தெருவில் புரண்டும், மிகப்பெரிய கல்லறை தோட்டம் அமைக்குமளவு மாநிலமெங்கும் இழவு விழுந்து கிடக்கும் போது, புதிய தலைநகரத்துக்குச் செங்கல் நட்டும் ஊடக வெளிச்சத்தை தக்க வைத்துகொள்ளும் முயற்சியில் இருக்கிறது.

சாவு வீட்டிலும் ச.்பாரி போட்டு செல்பி எடுக்கும் மோடியின் கூட்டணிக் கட்சிக்காரர் என்பதை நிரூபிக்க வேண்டுமா இல்லையா?

• சண்டைல கிழியாத சட்ட எங்கையா இருக்கு வெய்யலடிச்சா சாவத்தான் செய்வான் என ஹதகனிவுள்ளத் தோடுஹ பேசும் நல்ல வாய்களும் அங்கே அதிகம் என்பதால் இன்னொரு விஷயத்தை யும் சொல்ல வேண்டியிருக்கிறது. இதைக்காட்டிலும் சுட்டெரிக்கும் வெப்பநிலையும், சுரண்டலையும் கொண்ட வளைகுடா நாடுகளில்கூட கடும் வெயில் நேரத்தில் கட்டுமான வேலையை நிறுத்தி சில மணி நேரம் ஓய்வுகொடுக்கும் நடைமுறை இருக்கிறது.

ஆனால், இங்கு அதைப் பற்றிய எந்த வழிகாட்டுதலோ அல்லது சட்டமோ இல்லை, இருக்கின்ற போராடிப்பெற்ற தொழிலாளர் உரிமைகளையே ஊத்தி மூடிக்கொண்டிருக்கும் பாசிஸ்ட்டுகளின் கூடாரமோ, இதுவரை மக்களுக்காக இயங்குவதாக வாய்ச்சவடால் அடித்துக்கொண்டிருக்கின்ற ஏனைய ஓட்டுப் பொறுக்கும் கட்சிகளோ இதைப் பற்றியெல்லாம் மூச்சுக்கூட விடவில்லை.

கொளுத்தும் வெயிலிலும் விவ சாய மற்றும் கட்டுமானப்பணியில் கூலித்தொழிலாளர்கள்மீது சாட்டை சொடுக்குகின்றது முதலாளி வர்க்கம்.

முறைசார்ந்த மற்றும் முறைசாரா தொழிலாளர்கள் நலன், வேலை நேரம், ஊதியம், மருத்துவ உதவி, பணியிடப் பாதுகாப்பு என எதைப்பற்றியும் கண்டுகொள்ளாமல் இருக்கின்ற தொழிலாளர் நலச் சட்டங்களையும் குழிக்குள் அனுப்பிவைக்கிறது ஆளும் வர்க்கம்.

ஆக, இந்த 1400 பேர் கொல்லப் பட்டிருப்பது இயற்கைப் பேரழிவு என்றுதான் ஆளும் வர்க்கம்கூறும்.

**தொகுப்பு: வேணு கிருஸ்னா**






பரமண்ணா

# "விளையும் பயிரின் முளை!"

சுயநினைவுக்குத் திரும்பிய சேகரன்... கையில் இருந்த 'விஞ்ஞானமும் வாழ்க்கையும்' என்னும் நூலை மிகச் சிரத்தையுடன் மேசையில் வைத்துவிட்டு தாயாரின் அழைப்புக்குச் செவிசாய்த்து குசினிக்குச் செல்கிறான்.

தயாரித்து வைத்திருந்த கோப்பியைக் கையில் கொடுத்ததும், பேச்சுமூச்சு இல்லாமல் ஒரே உறிஞ்சலில் வயிற்றுள் போட்டுக்கொண்டவன் அவசர அவசரமாகக் குசினியை விட்டு வெளியேறினான்.

"டேய் சேகரன்... விடிஞ்சாப் பொழுதுபடும் வரை புத்தகம் புத்தகமென்று எந்நேரமும் புத்தகமும் கையுமாக இருந்தால் போதுமா... பிள்ளைகளாக இருந்தா நேரத்துக்குச் சாப்பிட்டு நேரத்துக்கு படித்து அந்தந்த நேரங்களில் செய்யவேண்டிய கருமங்களை ஒழுங்காக கவிக்கவல்லவா வேண்டும்... அதைவிட்டுவிட்டு இப்படிச் சதா படிப்புப் படிப்பெண்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது... "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்..."

தாயாரின் மங்களம் அவனது காதுகளில் விழுந்திருக்கும், கேட்டது பாதி கேளாதது பாதியாக அவன் குசினியை விட்டு நழுவி வந்து விட்டான்.

வந்தவன் வேறெங்கும் போகாமல் தன்னுடைய அறையிலேயே வந்து அமர்ந்து கொண்டான். சேகரனுக்கு இப்போது பதினேழு வயதே இருக்கும். இதற்கிடையில் அவன் படித்து முடித்திருந்த விஞ்ஞான நூல்களோ எண்களில் கொண்டுவரக்கூடியன அல்ல.

அதற்குச் சான்றே அவனது அந்தச் சிறு அறை!

புதிதாக ஒருவர் அவனுடைய அறையுள் நுழைந்தால், அவளுடைய எண்ணத்தில் முதலில் அது நூல் நிலையமாகவே பரிண மிக்கும். அவ்வளவுக்கு அறை நிறைந்த காட்சியாக புத்தகங்கள் அடுக்கிவைக்கப்பட்டும் அங்குமிங்குமாகச் சிதறுண்டும் காட்சி கொடுக்கும்.

அத்தனை புத்தகங்களையும் இச்சிறிய வயதிலே சேகரன் படித்து முடித்துள்ளான் என்கின் அனைவரும் மூக்கின் மீதே விரல் வைப்பார்கள்.



(தொடரும்...)

## வாரம் ஒரு திருக்குறள்




கள்ளாமை

**உள்ளத்தால் உள்ளலும் தீதே**
**பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வேம் எனல்.**

குற்றமானதை உள்ளத்தால் எண்ணுவதும் குற்றமே, அதானால் பிறன் பொருளை அவன் அறியாதப் வகையால் வஞ்சித்துக்கொள்வோம் என்று எண்ணாதிருக்கவேண்டும்.

குறள் 282

# அச்சும் தாத்தா



காட்டுப்பக்கம் தாத்தாவுக்கு
காடு போல தாடியாம்
மாடி மேல நிக்கும்போது
தாடி மண்ணில் புரளுமாம்

ஆந்தை ரெண்டு கோழி மைனா
அண்டங்காக்கா குருவிகள்
பாந்தமாக தாடிக்குள்ளே
பதுங்கிக் கொண்டு நின்றன


உச்சி மேல நின்ற தாத்தா
உடல் குலுங்க தும்மினார்
அச்சும் அச்சும் என்றபோது
அவை அனைத்தும் பறந்தன.

# பிக்மி யானைகள்

சேர்க்கஸ்களில் குள்ள மனிதர்கள் செய்யும் சேட்டைகளைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்து மகிழ்ந்திருப்பீர்கள். மனிதர்களில் மட்டுமே குள்ளமானவர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்திருப்பீர்கள். விலங்குகளில்கூட இப்படி உண்டு. அதற்கு நல்ல உதாரணம் போர்னியா யானைகள் எனப்படும் குள்ள யானைகள். இவற்றை பிக்மி யானைகள் என்றும் அழைக்கிறார்கள்.


போர்னியோ என்பது ஒரு தீவு. இந்தோனேசியா, மலேசியா, புரூனே நாடுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள பெரிய தீவு. இந்தத் தீவில் சா:.பா என்ற ஒரு இடமிருக்கிறது. இங்குதான் இந்தக் குள்ள யானைகளைப் பார்க்கமுடியும். உலகில் வேறு எங்கும் இந்த யானைகள் கிடையாது. 18ஆம் நூற்றாண்டில் சூலு நாட்டின் சுல்தான் பரிசாகக் கப்பல்கள்மூலம் இந்த யானைகளை ஜாவா, சுமத்திரா தீவுகளுக்கு அனுப்பிவைத்ததாகச் சொல்லப்படுகிறது. பின்னர் இவை போர்னியோ தீவுகளில் விடப்பட்டிருக்கலாம் என்றும் கருத்துகள் உலாவருகின்றன.

இந்தக் குள்ள யானைகள் எந்த நாட்டில் தோன்றின எனச் சரியாக விளக்கம் ஏதும் இல்லை. ஆபிரிக்க யானைகளைவிட ஆசிய யானைகள் குள்ளமாக இருக்கும். ஆனால், இந்த போர்னியா யானைகள் ஆசிய யானைகளைவிட இன்னும் குள்ளம். அதிகபட்சம் 8 அடி உயரம் மட்டுமே வளரும். தொடக்கக் காலத்தில் இந்த யானைகள் மரபணுக் கோளாறு காரணமாகப் பாதிக்கப்பட்டவை என்று கருதினார்கள். ஆனால், இப்படி எந்தப் பாதிப்பும் இந்த யானைகளுக்கு இல்லை என்பது மரபணுச் சோதனைமூலம் தெரியவந்தது. இதனாலேயே பிக்மி யானைகள் என்ற தனி அந்தஸ்தை இந்த யானைகள் பெற்றன.



இந்த யானைகளுக்குக் கூச்ச சுபாவம் ரொம்ப அதிகம். ரொம்பவும் பயப்படும். புதருக்குள் மறைந்துகொள்வது இந்த யானையின் பழக்கம். அது மட்டுமல்ல, இந்த யானை அதிக தூரம் எங்கேயும் போகாது. இப்படி இந்த யானைகளைப் பற்றிப் பல சுவையான தகவல்கள் உண்டு. பொதுவாக எல்லா யானைகளும் விரும்பி சாப்பிடுவதைப்போல புல், இலை தழை, வாழை, பனையோலை, காய்கறிகளை இந்த யானைகள் விரும்பிச் சாப்பிடும். ஆனால், துரியன் பழம் என்றால் குள்ள யானைகளுக்கு உயிர்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 29.06.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1101**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 1101

என்.பிரோஸ்கான்,
மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா-03

பரிசுக்குரியவர்: 1099

பாராட்டுக்குரியவர்கள்

01. தொ.சர்மிகா, தெமட்டகொட.
02. என்.ஐஸ்மியா, புளியங்குளம், வவுனியா .
03. ம.நந்திதா, கடற்கரை வீதி, மன்னார்.
04. எம்.என்.அஸ்வர், பிரதான வீதி, நுவரெலியா.
05. நு.இஷாரா, வாகரை, மட்டக்களப்பு.
06. அ.வினிசான், க்ச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
07. மு.மந்தாரை, கொடிகாமம் வீதி, புலோலி.
08. கு.வர்சாந்த், உடுவில் தெற்கு, சுன்னாகம்.

## விசித்திர எண்!!

*142857 என்ற எண்ணை 2,3,4,5,6 என்ற எண்களால் தனித்தனியாகப் பெருக்கினால் மேலே குறிப்பிட்ட எண்களே மாறி மாறி வரும். குறிப்பாக 2 கொண்டு பெருக்கினால் 285714 என வரும். எண் 7ஐக் கொண்டு பெருக்கினால் ஒரு வித்தியாசமான எண் (99999) வரும். மாணவர்களுக்கான எண் சுவடியில் கண்டது.*

| | | | |
|---|---|---|---|
| 4 | 14 | 15 | 1 |
| 9 | 7 | 6 | 12 |
| 5 | 11 | 10 | 8 |
| 16 | 2 | 3 | 13 |

# உண்மைத் தொடர்

**அதிர் இடி 95**



> **பிற இனப்பெண்களை வேட்டையாடும் படை யினருக்கும், அதிகாரி களுக்கும் பதவி உயர்வும், சலுகைகளும் வழங்கப்படுகிறது. 'கக்வா' இனப் பெண் வேட்டையாடப்பட்டதும் அமீனுக்கு இரத்தம் கொதிக்கிறது. இனப்பாகுபாடான நீதிகண்டு 'கக்வா' இனம் தவிர்ந்த அனைத்து இனங்களும் பொருமின.**

# இடி அமீன்

தங்கள் மேஜரது செயல் பற்றி உடனடியாக அமீனுக்கு தகவல் எட்டச் செய்தார்கள். இந்த விசயம் வெளியே தெரிந்தால் 'கக்வா' இனத்தினர் மத்தியில் தனக்குள்ள ஆதரவும் தகர்ந்துபோகுமே என்று சினந்தான் அமீன்.

"அந்த வேசி மகனை என்ன செய்கிறேன் பார்!" கத்திக்கொண்டே, தன் மெய்க்காப்பாளர் பட்டாளத் துடன் நுபிய மேஜர் பொறுப்பாக இருந்த முகாமுக்குப் புறப்பட்டார்.

அமீனும் அவனது பட்டாளமும் முகாமுக்கு சென்றடைந்தபோது, 'கக்வா' இனச்சிப்பாய்கள் குழுமி நின்று மேஜரைப் பற்றி புகார்களை அடுக்கினார்கள்.

அந்த முகாமில் நுபிய இனச் சிப்பாய்களும் இருந்தனர். அவர் களுக்கு பெரும் தர்மசங்கடமாக இருந்தது.

அவர்களை தன்னருகே அழைத்த அமீன் "புகலிடம் தேடிவந்த உங்கள் இனத்துக்கு அடைக்கலம் தந்தர வர்கள் நாங்கள். உங்களை படை யில் சேர்த்ததோடு, பதவிகளும் தந்திருக்கிறேன். மேஜர் நன்றி மறந்து என் இனத்திலேயே கை வைத்துவிட்டான். அதனால் அவனுக்கு தண்டனை கொடுக்கப் போகிறேன்"! என்று கூறினான்.

எங்கே தங்களையும் துரத்தி விடுவானோ என்று பயந்து கொண்டிருந்த சிப்பாய்களுக்கு அமீன் தங்களிடம் பேசியதே பூரண திருப்தியாக இருந்தது.

இத்தனை சங்கதிகள் வெளியே நடந்துகொண்டிருக்க, அவை எதுவுமே தெரியாது கட்டிலில் அவளுக்கு மேலே பரவிக்கிடந்தான் மேஜர்.

மூர்ச்சையாகிக் கிடந்த அவள் மீது பிணத்தின்மீது கிடப்பது போல கிடந்து தூங்கிப்போனான்.

அறைக்கதவு தட்டப்பட்டதும் தூக்கக் கலக்கத்தோடு "எவனடா இந்த நேரத்தில் தொல்லை கொடுப்பது? முட்டாள்கள் முழு முட்டாள்கள்!" என்று திட்டியபடி எழுந்துவந்தான்.

கதவைத் திறந்ததும் எதிரே அமீனைக் கண்டதும் நம்ப முடியாமல் திகைப்பில் ஆழ்ந்தான்.

கண்களைக் கசக்கிக் கொண்டு மறுபடி உற்று பார்க்கும்போது, அவனது மார்பில் கைவைத்து பின்னாள் தள்ளிவிட்டு அறைக்குள் புகுந்தான் அமீன்.

கட்டிலில் வெற்றுடம்பாக மூர்ச் சையாகிக் கிடந்தாள் அந்தப் பெண்.

அமீன் உள்ளே நுழைந்து கட்டிலருகே சென்று பார்த்தபோது, மேஜருக்கு போதை சட்டென்று இறங்கியிருந்தது. அப்போதுதான் விபரீதம் மூளையில் உறுத்தியது.

என்ன செய்யலாம்? அமீனிடம் எப்படி மன்னிப்புக் கேட்கலாம் என்று அவன் முடிவு செய்வதற்குள், அமீ னின் மெய்க்காப்பாளர்களால் அவன் தரதரவென்று வெளியே இழுத்துச் செல்லப்பட்டான்.

முகாமின் பயிற்சி மைதானத்தில் நிர்வாணமாக மேஜரை நிறுத்தி வைத்தனர். பயிற்சி மைதான இரவு விளக்குகள் ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன. சிப்பாய்கள் சூழ நின்றார்கள்.

அமீனின் குரல் நிசப்தத்தைக் கிழித்து ஒலித்தது.

"இந்த மேஜரின் குற்றச்செயலை நான் கண்ணால் பார்த்திருப்பதால், இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு அவசியம் கிடையாது. அதனால் இப்போதே, இந்த நிமிடமே இவனை விடுதலை செய்கிறேன்!" என்று அமீன் கூறியதும் சிப்பாய்கள் முகங்களில் கலவரம்.

அமீன் அவர்களது கலவரத்தை ரசித்துச் சிரித்தான்.

"நான் விடுதலை கொடுப்பதாகக் கூறியது, இங்கிருந்தல்ல, இந்த உல கத்தில் இருந்து..." என்று சிரித்தான். சிரித்த மறுகணமே மேஜரின் உடலை துப்பாக்கிக் குண்டுகள் சல்லடை போட்டன.

அமீனின் மெய்காப்பாளர்கள் நான்கு பேரின் துப்பாக்கிகள் ஒரே நேரத்தில் குண்டுகளைக் கக்கியிருந்தன.

மேஜரின் தலையை வெட்டி நகரின் முக்கிய பகுதியில் போடுமாறும் அமீன் கட்டளை பிறப்பித்தான்.

'கக்வா' இனப் பெண்ணை பலாத்காரம் செய்த இராணுவ மேஜருக்கு மரண தண்டனை என்று செய்திகள் நாடெங்கும் பரவியது.

'கக்வா' இன மக்களிடம் அமீ னின் செல்வாக்கு இச்சம்பவத்தின் பின்னர் மேலும் ஒருபடி உயர்ந்தது.

அதேசமயம் உகண்டாவின் ஏனைய இனமக்களிடம் அதிருப்தி மேலோங்கியது.

பிற இனப் பெண்களை வேட்டையாடும் படையினருக்கும், அதிகாரிகளுக்கும் பதவி உயர்வும், சலுகைகளும் வழங்கப்படுகிறது.

'கக்வா' இனப் பெண் வேட்டையாடப்பட்டதும் அமீனுக்கு இரத்தம் கொதிக்கிறது.

இனப்பாகுபாடான நீதிகண்டு 'கக்வா' இனம் தவிர்ந்த அனைத்து இனங்களும் பொருமின. ஆனாலும் பயத்தினால் தங்கள் அதிருப்திகளை மனதுக்குள்ளேயே வைத்திருந்தனர்.

தமது இனத்தைச் சேர்ந்த மேஜர் கொல்லப்பட்டதால், உகண்டா இராணுவத்தில் இருந்த நுபிய இனச் சிப்பாய்கள் பலர் படையை விட்டு தப்பியோடினர்.

அமீனது நம்பிக்கைக்குரியவளாக மாறிவிட்ட பெண் மந்திரவாதி, அமீனது செயல்களைப் பாராட்டினாள்.

"உன் விரோதிகள்தான் ஓடி இருக்கிறார்கள். உனக்கு எடுத்த காரியம் யாவும் வெற்றிபெறும். நாடு முழுக்க உனக்கத்தான் பேராதரவு திரண்டு வருகிறது என்று ஆரூடங்களை அடுக்கினாள்.

அமீனுக்கு மனது குளிர்ந்து போய்விட்டது. தங்கக்கட்டிகளை தட்சணையாகக் கொடுத்தான்.

அவள் அமீனை, தன்னோடு சேர்த்து அணைத்தாள். அமீனது தலையை தனது பருத்த மார்புகளுக்கு நடுவே அழுத்தினாள்.

இவள் மந்திரவாதியாகவும் இருக்கிறாள். மயக்கும் மோகினி யாகவும் இருக்கிறாளே என்ற பிரமிப்புத்தான் இம்மாதிரியான தருணங்களில் அமீனிடம் எழுவதுண்டு.

அவளுடன் சம்போகம் அனுபவிக்கும் போதெல்லாம் புதிய அனுபவமாகவே எபபோதும் உணர்ந்தான்.

எந்தப் பெண்ணாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அமீனுக்கு திகட்டிவிடுவார்கள்.

(தொடரும்..)

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 630

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | | 21 | | | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 628 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ 1 | லு 2 | ப் 3 | பை 4 | ப் 5 | பூ 6 |
| ரா 7 | | கு 9 | | வ 11 | த 12 |
| ம 13 | க 14 | வ 15 | ம் 16 | து 17 | த் 18 |
| லி 19 | பி 20 | | கா 22 | ர் 23 | த 24 |
| ங் 25 | | ரி 27 | சி 28 | பு 29 | ம் 30 |
| க 31 | வ 32 | தி 33 | ப 34 | | பி 36 |

**இடமிருந்து வலம்**

01.அச்சம் ...... அகத்து அடக்கினால் பின்னை நிச்சயம் ஆம் ஈசன் நிலை. - ஔவையார்.

07.உலரவைத்த உணவு. (குழம்பியுள்ளது)

13.வேறாதல் ; பிரிதல். (குழம்பியுள்ளது)

25. "..... தூங்கிடிச்சு" ஒரு சினிமாப்பாடல் அடி. (குழம்பியுள்ளது)

34. "அடிசிற் கினியாளே அன்புடையமாதே" என்பது இவரைக் குறித்து நிற்கிறது.

**மேலிருந்து கீழ்**

01. திரவியக் குறைபாடு.
02. கள்வர்களாலும் கொள்ளையிட முடியாத செல்வம்.
03. புல்லாங்குழலின் தனித் தமிழ்ச் சொல். (குழம்பியுள்ளது)
04. ஓர் சுவை.
06. அச்சத்தை அகற்றி அனைத்திலும் விலையுயர்ந்த பொருளாகிய இதைக் காப்போமாக! என்றார் இராஜாஜி. (திரும்பியுள்ளது)
26. மரத்தினுட்பழுது.
28. இலங்கையில் ஒரு மாகாணம்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **29.06.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - **630**
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.628 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

உ.நிடர்சியா,
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. எம்.பாவனா, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
02. என்.செந்தூரி, கோவில் வீதி, வவுனியா.
03. செ.நாவிதன், பிரதான வீதி, கொழும்பு - 16.
04. எம்.என்.அஜ்மல், ரெட்பானா, விசுவமடு.
05. ம.ராணிமலர், புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
06. யோ.யோகராசா, தொட்டிலடி, சங்கானை.
07. கே. பாஸ்கரன், கழுவங்கேணி, மட்டக்களப்பு.
08. எஸ்.அரவிந்தன், முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான்.
09. க.வாணி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
10. ஆர். மனுவல்பிள்ளை, அராலி வடக்கு, அராலி.



அச்சம் என்பது மடமையடா



பாபநாசம்



சண்டி வீரன்

## நாளை முதல் குடிக்கமாட்டேன்

இயக்குனர் ஆர். பாண்டியராஜனின் திடபுள்ஸ் மற்றும் பல இயக்குனர்களின் திரைப்படங்களில் உதவி இயக்குனராக பணியாற்றிய கோ.செந்தில் ராஜா நாளை முதல் குடிக்கமாட்டேன் என்ற படத்தின் மூலமாக இயக்குனராக அறிமுகமாகிறார்.

மதுவிற்கு அடிமையான ஒருவன் தன் வாழ்க்கையில் எதையெல்லாம் இழக்கிறான், அதனால் அவனுக்கு ஏற்படும் பிரச்சினையில் இருந்தும் குடிப்பழக்கத்தில் இருந்தும் எப்படி மீண்டு வருகிறான்? என்பதை நகைச்சுவையுடன்கூடிய திரைக்கதையுடன் கூறும் படமாக இது உருவாகிவருகிறது.

இப்படத்தில் ராஜ், காந்தராஜ், சம்ர்தின், பனிமதி போன்ற புதுமுகங்கள் நடிக்க முதல்கட்ட படப்பிடிப்பு இதுவரை படப்பிடிப்பு நடக்காத கள்ளக்குறிச்சி மற்றும் சின்ன சேலம் அருகே உள்ள வாசுதேவனூர், ராயப்பனூர், எலித்தூர் போன்ற யதார்த்தம் மாறாத கிராமப்புறங்களில் நடந்துமுடிந்துள்ளது.

இப்படத்திற்கு ஒளிப்பதிவு புன்னகை வெங்கடேஷ், இசை ஆர்.சிவசுப்பிரமணியன், இப்படத்தின் தயாரிப்பு மேற்பார்வையை பி.தேவன் கவனிக்க, இணைத்தயாரிப்பு செய்கிறார் ஜி.இளவரசி. பனிமதி பிலிம்ஸ் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் சார்பாக எம்.ஜி.ராஜா இப்படத்தை தயாரிக்கிறார்.

## சூர்யா 24இல் மூன்று வேடம்

சூர்யா நடிப்பில் தற்போது வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் படம் மாசு. இப்படத்தை வெங்கட்பிரபு இயக்கியிருந்தார். இதில் சூர்யாவிற்கு ஜோடியாக நயன்தாரா மற்றும் ப்ரணிதா நடித்திருந்தார்கள். இப்படத்தையடுத்து தற்போது சூர்யா நடித்து வரும் படம் '24'. இதில் சூர்யாவிற்கு ஜோடியாக சமந்தா நடித்துவருகிறார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்து வரும் இப்படத்தை சூர்யா தனது சொந்த நிறுவனமான 2டி எண்டர்டெயின்மென்ட் சார்பாக தயாரித்துவருகிறார். தெலுங்கில் சூப்பர் ஹிட்டான மனம் படத்தின் இயக்குனர் விக்ரம் குமார் இப்படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதுவரை இரண்டு வேடங்களில் மட்டுமே நடித்துவந்த சூர்யா இப்படத்தில் மூன்று வேடத்தில் நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதாவது, தாத்தா, மகன், பேரன் என மூன்று வேடங்களில் நடிக்கிறாராம். இதற்காக தனது உடற்கட்டை மாற்றி அமைத்து வருகிறாராம் சூர்யா.



இன்று நேற்

## கமல் இயக்கி வில்லனாக நடி

அமர் ஹை என்ற இந்தித் திரைப்படத்தி கமல்ஹாசனும், பொலிவூட் நட்சத்திரம் சை.்.ப் உள்ளார்கள். கமல்ஹாசன் இயக்கவுள்ள இ நிகழ்கால அரசியல், பணபலம் மற்றும் நிழல் இருக்கும் என்று கூறப்படுகிறது. கமல் இத்தி நடிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படம் குறித்து தயாரிப்பாளர்கள் அர்ஜுன் என் கபூர் கூறுகையில், 'அமர் ஹை பலவிதங்களில் விசேஷமான படம். நீண்ட நா கழித்து கமல்ஹாசன் பொலிவூட்டுக்கு திரும்ப அதோடு நடிகர், இயக்குநர், கதாசிரியர் எனப் துறைகளில் அவர் பணியாற்றவுள்ளார். மேலு கடந்த 6 வருடங்களாக இந்தக் கதையை எழுதிவரும் கமல், ஆரம்பம் முதலே சை.்.ப் அலிகான்தான் நடிக்கவேண்டும் என்று நினைத்துள்ளார் என்றனர்.

மும்பையில் தொடங்கும் கதை பல்வேறு நாடுகளுக்கு பயணப்படுகிறது. கமலும், தயாரிப்பாளர்களும் மும்பை, புதுடெல்லி, லண்டன், துபாய், ஜோர்டான், அமெரிக்கா ஆகிய நகரங்களில் படப்பிடிப்பு நடத்த இடங்களை பார்த்து வருகின்றனர்.

தனது கதாபாத்திரம் தொடர்பாக பேசிய கமல், "எனது பாத்திரம் வழக்கமான எதிர்நாயகனாக இல்லாமல் புதிய கோணத்தைத் தரும்" என்றார்.



பத்மினியின் சிரிப்பு

## 100 கோடியை வேட்டையாடிய காஞ்சனா - 2

ராகவா லோரன்ஸ் இயக்கி நடித்த "காஞ்சனா 2" திரைப்படம் பொக்ஸ் ஓ.்.பிஸில் 100 கோடி ரூபாய் வசூலை அள்ளியுள்ளது. தற்போது 50 நாட்களைக் கடந்து ஓடிவரும் இத்திரைப்படம், இன்னமும் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடிவருவது குறிப்பிடத்தக்கது.

ராகவா லாரன்ஸ் இயக்கத்தில், காஞ்சனா முதல் பாகத்தைத் தொடர்ந்து, கடந்த ஏப்ரல் மாதம் காஞ்சனா 2-ம் பாகம் வெளியானது. லோரன்ஸ், நித்யா மேனன், தாப்ஸி, கோவை சரளா உள்ளிட்டோர் நடிப்பில் வெளியான காஞ்சனா 2, விமர்சகர்களிடமும், ரசிகர்களிடமும் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றது.

இது குறித்து பேசிய பொக்ஸ் ஓ.்.பிஸ் வல்லுநர் த்ரிநாத், "தமிழ் சினிமாவில் இந்த வருடம் முதல் ப்ளாக்பஸ்டர் படமாக காஞ்சனா 2 உருவாகியுள்ளது. டிக்கெட் விற்பனையில் மட்டும் இத்திரைப்படம் ரூ.108 கோடியை அள்ளியுள்ளது" என்றார்.

ரூ.17 கோடி பட்ஜெட்டில் உருவானதாக கூறப்படும் காஞ்சனா 2, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் இலாபகரமான படமாக அமைந்துள்ளது.



இன்று நேற்று நாளை



மாரி

## ... வில்லனாக நடிக்கும் அமர் ஹை

...ற இந்தித் திரைப்படத்தின் மூலம் நடிகர்
...ாலிவூட் நட்சத்திரம் சை.ஃப் அலி கானும் இணைய
...ஹாசன் இயக்கவுள்ள இந்தத் திரைப்படம்
..., பணபலம் மற்றும் நிழல் உலகத்தைப் பற்றியதாக
...றப்படுகிறது. கமல் இத்திரைப்படத்தில் வில்லனாக
...பது குறிப்பிடத்தக்கது.
...றித்து தயாரிப்பாளர்கள் வீரேந்திர கே அரோரா,
... கூறுகையில், 'அமர் ஹை' எங்களுக்கு
...சேஷமான படம். நீண்ட நாட்கள்
...ன் பொலிவூட்டுக்கு திரும்புகிறார்.
...யக்குநர், கதாசிரியர் எனப் பல
... பணியாற்றவுள்ளார். மேலும்,
...ளாக இந்தக் கதையை
... ஆரம்பம் முதலே சை.ஃப்
...க்கவேண்டும் என்று
...ன்றனர்.
...தாடங்கும் கதை
...க்கு பயணப்படுகிறது.
...ளர்களும் மும்பை,
...ன், துபாய்,
...க்கா ஆகிய
...பிடிப்பு நடத்த
...ர்த்து
...ர்.
... கதாபாத்திரம்
...பாக பேசிய
..., "எனது
...த்திரம் வழக்க
...ான எதிர்நாயக
...ாக இல்லாமல்
...திய கோணத்தைத்
...ரும்" என்றார்.

## சந்தானத்தின் வெளிவராத அவதாரம்

சின்னு மன்னு படத்தில் அப்பு கமல் கெட்டப்பில் சந்தானம் அலுவலகத்தில் எடுக்கப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு முன்னர் சின்னு மன்னு என்ற இந்தி படத்தில் காமெடியனாக நடித்திருக்கிறார் சந்தானம்.

முழுக்க பாங்கொங்கில் படமாக்கப்பட்ட இப்படத்தின் படப்பிடிப்பு 80வீதம் முடிவடைந்துவிட்டது. படப்பிடிப்பு நடந்துகொண்டிருக்கும்போது, தயாரிப்பாளர் மரணமடைந்துவிட்டார். தயாரிப்பாளர் மரணத்தால் அப்படம் அப்படியே கைவிடப்பட்டது. அப்படத்தில் நாயகனுடன் தென்னிந்தியராக, காமெடி வேடத்தில் நடித்தார் சந்தானம்.

அப்படத்தில் 10 விதமான கெட்டப்புகளில் நடித்திருக்கிறார் சந்தானம். தென்னிந்தியர் ஒருவர், வடஇந்தியாவில் போய் குடியேறும் ஒரு பாத்திரத்தில் நடித்திருக்கிறார். ஒரு வீட்டுக்குள் இருக்கும் பொருளை யாருக்கும் தெரியாமல் எடுக்கும் கதாபாத்திரத்தில், விதவிதமான கெட்டப்புகளில் தோன்றியுள்ளார். அபூர்வ சகோதர்கள் அப்பு கமல் உள்ளிட்ட பல்வேறு கெட்டப்புகள் இதில் அடங்கும். சந்தானம் நடித்த ஒரே இந்திப் படம் அது மட்டுமே. அதற்குப் பிறகு வந்த எந்தவொரு இந்திப் படவாய்ப்பையும் சந்தானம் ஏற்கவில்லை. மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் தலா ஒரு படத்தில் நடித்திருக்கிறார் சந்தானம்.



அதிபர்

## சிம்புதேவன் இயக்கும் புலி

...படத்திற்கு பிறகு விஜய் அட்லி இயக்கத்தில் நடிக்க இருப்பது நாம் ஏற்கெனவே அறிந்த விஷயம். இப்புதிய படத்தின் படப்பிடிப்பு ஜூன் 26ஆம் திகதி முதல் தொடங்க இருக்கிறதாம். சீனாவில் இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு தொடங்க இருந்தநிலையில், அங்குள்ள தட்பவெப்பநிலை இப்போது சாதகமாக இல்லையாம். படப்பிடிப்புக்காகப் பார்த்துவைத்திருக்கும் இடங்கள் இப்போது முற்றிலும் வேறு மாதிரி இருக்கின்றனவாம். இதனால் தற்போது படப்பிடிப்பு சென்னையில் தொடங்க இருக்கிறது. தொடங்கி ஏழு நாட்கள் நடக்கவிருக்கும் அந்தப் படப்பிடிப்புக்காக நாற்பது நாட்கள் வேலைசெய்து அரங்கம் போட்டுக் கொண்டிருக்கிறார்களாம். படத்தில் இடம்பெறும் மிக முக்கியமான காட்சிகளை இந்த செட்டில் படமாக்கவிருப்பதால் பெரியளவில் பொருட்செலவு செய்து அந்த அரங்கத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்களாம்.





...சிரிப்பு

## பேயாக நடிக்க சம்மதித்த சத்யராஜ்

கடவுள், பேய் ஆகியவற்றின்மீது நம்பிக்கை இல்லாதபோதும், திஜாக்சன் துரைண் கதையைக் கேட்டு நடிக்க சம்மதம் தெரிவித்திருக்கிறார் சத்யராஜ்.

சத்யராஜ், சிபிராஜ், பிந்து மாதவி உள்ளிட்ட பலர் நடிப்பில் தயாராகி வரும் படம் திஜாக்சன் துரைண். ஸ்ரீ கிரீன் தயாரிப்பு நிறுவனம் தயாரித்து வரும் இப்படத்தை திபர்மாண் இயக்குநர் தரணிதரன் இயக்கி வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடவுள், பேய் உள்ளிட்ட விஷயங்களில் நம்பிக்கை இல்லாத சத்யராஜ் எப்படி இக்கதையில் பேயாக நடிக்க சம்மதித்தார் என்று இயக்குநர் தரணிதரனிடம் கேள்வி எழுப்பிய போது, தூமுதலில் பேயாக நடிக்க வேண்டும் என்றவுடன் பேயாகவா என யோசித்தார். முதலில் கதையைக் கேளுங்கள் என்று கூறிவிட்டு முழுக்கதையையும் கூறினேன். நன்றாக இருக்கிறது கண்டிப்பாக நடிக்கிறேன் என்று சம்மதம் தெரிவித்தார் என்றார்.

பொலிஸ் அதிகாரியாக இருக்கும் சிபிராஜை, கிராமத்தில் நிலவும் பிரச்சினையை சமாளிக்க அனுப்பி வைக்கிறார்கள். அங்கு அமானுஷ்யமாக சில விஷயங்கள் நடக்கிறது. அப்பிரச்சினையை சிபிராஜ் எப்படி முடித்து வைத்தார் என்பதே திஜாக்சன் துரைண் படத்தின் கதை என்கிறது படக்குழு.

## சந்தானம், வடிவேலுவுடன் மோத விரும்பாத விவேக்


காமெடி நடிகர் விவேக் நான்தான் பாலா படத்தின்மூலம் மீண்டும் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அவதாரம் எடுத்தார். இப்படத்தை தொடர்ந்து தற்போது பாலக்காட்டு மாதவன் என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் இவருக்கு ஜோடியாக சோனியா அகர்வால் நடித்துள்ளார். இப்படத்தை சந்திரமோகன் என்பவர் இயக்கியுள்ளார்.

ஸ்ரீகாந்த் தேவா இசையில் அமைந்துள்ள இப்படத்தின் பாடல்கள் சமீபத்தில் வெளியாகியிருந்தது. இப்படத்திற்கு தணிக்கை குழுவினர் யு சான்றிதழ் கொடுத்துள்ளனர். குடும்ப பின்னணியில் நகைச்சுவை கலந்த படமாக இது உருவாகியிருக்கிறது. இப்படம் எப்போது வெளியாகும் என ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்த்து நிலவிவந்தது.

இந்நிலையில், இப்படத்தை வருகிற ஜூன் 26ஆம் திகதி வெளியிடப் போவதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர். இதற்கு முன்னதாக சந்தானம் நடிப்பில் உருவாகியுள்ள இனிமே இப்படித்தான் படம் நாளை வெளியாகவுள்ளது. இதையடுத்து அடுத்த வாரம் வடிவேலு நடிப்பில் எலி படம் வெளியாகவுள்ளது. இவ்விரு படங்கள் வெளியாவதால் இப்படங்களுக்குப் பிறகு விவேக் படம் வெளியாகிறது.

# தேன் கிண்ணம்

## ஒரு தேவதையின் பார்வையிலே...



பூவின் வருடலை
புன்னகைக்குள் செதுக்கியே
புலவன் அறியா புது நிலவொன்று
புது உலா சென்றதை
வீதியில் கண்டேன்.

நாகரிக உடையில்
நகர்ந்த பெண்களில்
என்மனம் தேடிய
தேவதையும் அவளே

பண்பாடும் பணியும்
மங்கையின் அழகு
கங்கையில் மூழ்கிய
புது அன்னத்தின் வரவு.

கன்னத்தில் பதிந்த
கார்மேகக் கூந்தல்
என் எண்ணத்தில் ஆடிய
கலிமழை ஊஞ்சல்

ஒரு நாளின் கணத்தில்
பெண் மனதின் அழகினைப் புரிந்தேன்
கவிதையைத் தொழுது
அரைநொடியில் கவிஞனாய்ப் பிறந்தேன்.

வன்னியூர் ராம்கி



## கண்ணீர்

விழித் தேக்கத்திலிருந்து
வழிந் தொழுகும்
நீர் வீழ்ச்சி!!!

சில சோக கதைகளுக்கு
சொல்லப்படுகின்ற
சிறப்புப்பாயிரம்!!!

அன்புக்கடலில்
மிதப்போரின்
ஆனந்த ஊற்று!!!

தோல்வியின் முடிவில்
அள்ளுண்டு வரும்
உப்புத் திரவம்!!!

காதலர்களின்
விழிகளால்
எழுதப்படும்
துயர மொழி!!!

கண்ணீர்
இது செல்வந்தர் முகத்தில்
இல்லாதது...
ஏழை முகத்தில் நின்றால்
அது பொல்லாதது!!!

கே.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.

## நீதி

அந்த அழகிய
வெண்புறா கூட்டத்தில்
ஒரு பெண் புறா
எதிர்காலக் கனவில்
நனவை நினைவாக்கி
நிமிர்ந்து செல்கிறது...!

நிஜங்களை தொலைக்க
நிழல்கள் தொடர்வதை
அறியாமலே...

கற்றவற்றை மீட்டு
வீடுநோக்கி வருகிறது!

வசந்தம் வீசும் வாழ்வில்
சுகந்தம் பொழிந்து
இன்பம் பொங்கும்
என்றே,
வந்த வழியும் சிரித்து
வரவேற்று சிலிர்த்தது!
அந்தோ...!
நாணம் அறியா
மனிதத்தின்
ஆசையில் விளைந்த
கோரத்தால்
அல்லல்பட்டு அவதிப்பட்டே
அடக்கமானது பரிதாபம்...!

சந்தோச வானில்
பறந்து திரிந்த வெண்புறாவே
பாவக்கரங்களால் பறிபட்டே
சிறகொடிந்தாய்
நின்தியாகம்
உன் இனத்துக்கு நீதி தருமா???



அப்ரார் ஏ.அஸீஸ்,
யாழ்ப்பாணம்.



## பசி

அவள் பரிமாறுகின்ற
உணவுகளுக்கு மட்டுமன்றி
அவள் ஞாபகங்களுக்கும்
தெரிந்திருக்கிறது
என் பசி தீர்க்க.

ஜெ.சிந்து,
வேலணை-02

## பிரிவுகள்

சந்திப்புக்கள்
தற்காலிகமானவை
பிரிவுகள்
தவிர்க்க முடியாதவை
உண்மைகள்
மறைக்க முடியாதவை
உறவுகள் பிரிக்க
முடியாதவை.



க.நவீனா,
மு/ஐயன்கன்குளம்
அ.த.க. பாடசாலை.

## போர் தந்த பரிசு!!

தலை இழந்த பனைகளும்
பிணந்திண்ணி கழுகுகளும்
சிந்திச் சிதறிய உதிரத் துளிகளும்
சிரசில்லா முண்டங்களும்
பெற்றோரை இழந்த பிள்ளைகளும்
பிள்ளைகளை இழந்த
பெற்றோர்களும்
மனநோய்க்கு ஆளான
மனிதர்களுமே தான்
போர் எமக்கு ஈந்த பரிசுகள்
என்றும் எமது சுவடுகளாய்
கல்லறை மட்டும் தொடர்கிறது!!



எம்.யூ.அல்சாத்,
ஓட்டமாவடி.

# நல்லதோர் வீணை



21ஆவது ஆசிய தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் சீனாவின் வுஹான் நகரில் நடைபெற்ற முடிவடைந்து உள்ளன. இலங்கை பெருமைப் படும் அளவில் 800 மீற்றர் ஓட்ட வீராங்கனை நிமாலி லியனாராச்சி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். 25 வயதாகும் நிமாலி சூரியவெவ எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். விளையாட்டு மேம்பாட்டுக்கான வசதிகள் குறைவான ஒரு பிரதேசத்தில் இருந்து அற்புதம் நிகழ்த்தி உள்ளார் நிமாலி. அவர் பேசும்போது, நான் அகலக்கால் வைக்காமல் வெண்கலத்தையே இலக்காகக் கொண்டேன்.

இந்திய, சீனா வீராங்கனைகள் தமது ஓட்ட நேரத்தை என்னைவிடக் குறை வாகக் கொண்டிருந்தார்கள். அதுவே அப்படி என்னை யோசிக்கவைத்தது. இருந்தும் கடைசி 100 மீற்றரில் நான் வெள்ளியை இழக்கிறேன் என்பதை உணர்ந்துகொண்டேன் என்கிறார்.


நிமாலி மேலும் பேசும்போது, அதிகளவான போட்டிகளில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்படுத்தி தரவேண்டும். அப்படியாயின் என்னால் 2 நிமிடத்துக்குள் 800 மீற்றரைக் கடக்கும்வரையில் என் திறமையை வளர்த்துக் கொள்ளமுடியும். இவர் இன்னும் சில பிரச்சினைகளையும் எதிர்கொள்கிறார்.

விமானப் படையில் கடமையாற்றும் இவர் அந்த மாதாந்த சம்பளத்தைக்கொண்டே குடும்பத்தைப் போஷிக்க வேண்டியவராக இருக்கிறார். 250 கிலோமீற்றர்கள் தூரத்தில் இருந்து முக்கியமான பயிற்சி நடவடிக்கைகளுக்காக தலைநகரத் துக்குத்தான் வரவேண்டியிருக்கிறது.

அப்படி வரும்போது கொழும்பில் தங்கி இருந்து பயிற்சிகள் செய்ய வசதியான இருப்பிடம் இல்லை. மேலும் இருப்பிட வசதி என்பதே மிகுந்த செலவை எடுத்துக்காட்டுவதாகவும் அமைகிறது. அவரது ஓட்டத்துக்கான பாதணிகள் மூன்று, நான்கு தடவைகள் ஓடியதுடன் பழுதடைந்துவிட்டன.

ஏசியன் கிரோண் பிரி தடகளப்போட்டிகள் அண்மிக்கும் வேளையில் அவருக்கு புதிய பாதணிகள் இல்லை. இப்படியாக இந்த நட்சத்திரத்தின் துன்பங்களைப் பட்டியல் இட்டுக்கொண்டே போகலாம். இவரது இந்தத் தேவைகள் எல்லாம் பூர்த்தி செய்யப்படும் நிலையில் இவராக எந்தவொரு சர்வதேச மட்டத்திலும் போட்டியிடும் தகைமைக்குரியவராக மாற்றமுடியும் என்கிறார் இவரது பயிற்றுனர்.

நிமாலிக்கும் அந்த தைரியமும் நம்பிக்கையும் உண்டு. நல்லதொரு வீணை நிமாலி. அவரை நலங்கெட புழுதியில் விட்டுவிடாமல் அரங்கம் அமைத்து அதில் அமர்த்த நல்ல உள்ளங்கள் உதவிசெய்யட்டும்.



# அல்லோலகல்லோலம்

**இலஞ்ச** ஊழல்கள், கையூட்டுக்கள், நிர்வாக முறைகேடுகள் என்று உலக உதைபந்தாட்ட சம்மேளனமான FIFA அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த வரிசையில் இதன் நீண்டகாலத் தலைவர் செப்பிளொட்டர் தலைவராகத் தெரிவாகிய சில நாட் களிலேயே தலைமைப் பதவிய்ய இராஜினாமாச் செய்யும் அளவிற்கு உக்கிரமான நிலைமை காணப்பட்டது. அதுமட்டுமன்றி FIFA வின் பல உயர்நிலை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைதிகள் தொடரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2018 ரஷ்யாவின் உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்தவும்; 2022இல் கட்டாரில் உலகக் கிண்ணப் போட்டி களை நடத்தவும் முடிவுசெய்யப்பட்டு இருந்தது. இப்போது இந்தத் தெரிவு களில் முறைகேடு, லஞ்சலாவண்யம் இருந்ததா என்று ஆய்வுகள் தொடங்கி விட்டன. ஆய்வுகள் முடிவடையும்வரை இந்த இரண்டு தெரிவுகளும் சந்தேகம் தான் என்றநிலையும் ஏற்பட்டுள்ளது. இது இவ்வாறிருக்க டியாகோ மரடோனா புதிய நிர்வாகம் அமையும் போது தான் உபதலைவராகும் சந்தர்ப்பம் கிடைத்தால் FIFA கூட்டித் துப்புரவாக்குவேன் என்று கூறியுள்ளார்.

மற்றும் பிரேசில் தேசத்தின் முன்னாள் ஜாம்பவான் சீக்கோ தான் FIFA தலைமைப் பதவியைப் பெற விரும்புவதாகவும், தான் நேசித்த உதைபந்தாட்டத்துறை இப்படி அவமானப்பட்டுள்ளமை தனக்கு மனவேதனையாக இருக்கிறதென்றும் கூறியுள்ளார்.


எதிர்வரும் நாட்களில் இது தொடர்பில் இன்னும் பல விடயங்கள் வெளிவரலாம். இன்னும் பலரின் விருப்பங்களும், ஆசைகளும்கூட வெளிவரலாம் என்றாலும் இன்றைய தினத்தில் FIFA எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் சர்வதேசத்தை உலுக்கிவிட்டிருக்கிறது.



# சரியான போட்டி

**இலங்கைக்** கிரிக்கெட் ரசிகர் களுக்கு இது வசந்தகாலம். ஏனெனில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 53 நாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்காக இலங்கை வந்துள்ளது. பாகிஸ்தான் அணி, இலங்கை அணியுடன் மூன்று டெஸ்ட் போட்டிகள், ஐந்து ஒரு நாள் போட்டிகள், இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகள் என்று நிறையவே கிரிக்கெட் விளையாடப் போகிறார்கள். நாங்கள் ஒரு நோக்கத்துடனேயே இங்கு வந்துள்ளோம்.

ஒருநாள் சம்பியன்ஸ் லீக் போட்டி களுக்குத் தகுதி பெற்றாகவேண்டும். மேலும் எல்லாவகைக் கிரிக்கெட்டிலும் நல்ல முடிவுகளைப் பெறவேண்டும் என்கிறார் அணியில் பயிற்றுனர் வக்கார் யூனுஸ். தற்போது ஒருநாள் தரவரிசையில் ஒன்பதாவது இடத்தில் இருக்கும் பாகிஸ்தான் இலங்கையைத் தோற் கடித்தால் மட்டுமே சம்பியன்ஸ் லீக் போட்டிகளுக்குத் தகுதி பெறமுடியும். இது பாகிஸ்தான் அணியின் முக்கிய



கரிசனையாக இருக்கப்போகிறது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகள் இரண்டுமே ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் இருப்பவை. மேலும் பாகிஸ்தான் அணியில் மிஸ்பா உல்ஹக் மற்றும் சாஹிட் அப்ரிடி இல்லை. அதேபோல் இலங்கை அணியில் குமார் சங்கக்காரா மஹேல ஜெய வர்த்தனா இல்லை. அதோடு இரண்டு அணிகளுமே இளம் வீரர்கள் நிறையக்கொண்ட அணிகள்

ஆகவே இந்தச் சுற்றுப்போட்டி இரண்டு அணிக்கும் தம்மை நிலைநிறுத்தி வளர்த்துக்கொள்ளும் சுற்றுப் போட்டியாகவே இருக்கப் போகிறது. இலங்கை அணியைப் பொறுத்தவரை ஒரேயொரு ஆச்சரியம். எட்டு வருடங்களுக்குப் பின் ஜெகான் முபாரக் அணியில் இடம் பிடித்துள்ளமைதான். அதேவேளை உப்புல் தரங்க, பிரசன்ன ஜயவர்த் தன இருவரும் அணியில் இடம் பிடிக்கமுடியாமல் போனமை ஆச்சரியம்தான். அறிவிக்கப் பட்டுள்ள இலங்கை டெஸ்ட் அணி:

ஏஞ்சலோ மெத்தியூஸ்
லாகிரு திரிமான்ன
திமுத் கருணாரட்ண
ஜெகான் முபாரக்
குமார் சங்கக்காரா
தினேஸ் சந்திமால்
குஷால் பெரேரா
டில்ருவான் பெரேரா
ரங்கண ஹேரத்
தம்மிக பிரசாத்
துஷ்மந்த சமீர
கித்ருவான் வித்தானகே
கௌஷால் சில்வா
தரிந்து கௌஷால்
நுவன் பிரதீப்
சுரங்க லக்மால்

# வர்ணம் அதிகரிக்கும்



- ஜோசப் கிருஷ்ணா -

**இருபதுக்கு** இருபது கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் கரிபியன் பிறிமியர் லீக் போட்டி களும் பிரபல்யம் வாய்ந்தவை. அதன் பிரபல்யம் இன்னும் அதிகரிக்கும்வகையில் இப்போட்டிகளில் பங்குகொள்ளும் அணிகளுள் ஒன்றான டிரினிடாட் அன்ட் டுபாகோ அணியை பொலிவூட் நட்சத்திரம் ஷாருக்கான் வாங்கி உள்ளார்.

முன்னதாகவே பார்படோஸ் டிரைடன்ட்ஸ் அணியும் ஜமெய்க்கா தலவாஸ் அணி யும் ஹொலிவூட் நட்சத்திரங்கள் மார்க்வெல்பெக், ஜெராட் பட்லர் ஆகியவர்களின் உரிமை யாக இருக்கின்றன. அந்தவகையில் இன்னொரு சினிமா நட்சத்திரமும் கரிபியனில் கால்பதிக்கிறார். மேலும் ஐ.பி.எல் உரிமையாளர்களில் முதன்முதலாக இந்தியாவுக்கு அப்பால் அணி ஒன்றின் உரிமைபெறும் முதலாவது நபராக ஷாருக்கான் இருக்கிறார்.

ஷாருக்கானின் அணியின் ஆலோசகராக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் கடமையாற்றிய ஜக்கஸ் கலிஸ் இருப்பார்.

அதேவேளை ஷாருக்கானின் அணியில் டரன் பிரரவோ, டுவைன் பிராவோ, சமுவெல் பத்ரி, ஜொஹான் போத்தா போன்ற நட்சத்திரங்களும் இருப்பார்கள். T AND T யின் உரிமையாளர் ஆனதில் நிரம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. மேலும் நாங்கள் சர்வதேசரீதியாக பரந்து செல்ல ஆசைப்படுகிறோம்.

கே.கே.ஆர் இல் பெற்ற அனுபவங் களை எல்லாம் இந்த அணியில் நடைமுறைப்படுத்தி வெற்றிக்காக உழைப்போம் என்று கூறியுள்ளார். மேலும் ஐ.பி.எல் அணிகளில் கே.கே.ஆர் அணிசிறந்த தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட அணியாகக் கருதப்படுகின்றது. அந்த அனுபவங்கள்தான் T AND T யின் உரிமத்தைப் பெறவும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது என்றும் கூறப்படுகின்றது.



# லேடிஸ் ஸ்பெஷல்



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

## பெண்கள் பற்றி சுவாமி விவேகானந்தர்



தேவை ஏற்பட்டால் ஒவ்வொரு பெண்ணும் சுயமாக சம்பாதிக்க வேண்டும் என்பதை விவேகானந்தர் வலியுறுத்துகிறார்.

அதற்கு அடிப்படையாக நல்ல கல்வி கொடுக்கப்படவேண்டும். நல்ல கல்வி அறிவை வளர்க்கும். அந்த அறிவைக்கொண்டு தானும் வளர்ந்து, தன்னைச் சார்ந்தவர்களையும் வாழ வைப்பார்கள் பெண்கள் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்தார் விவேகானந்தர்.


"ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள்" என்பது பெண்களைப் பற்றி பொதுவாகக் கூறப்படும் கருத்து. ஆனால், இன்றைய பெண்கள் அந்த நிலையையும் மீறி தன்னையும் வெற்றிபெறச் செய்துகொண்டு, தன்னைச் சார்ந்திருப்பவர்களையும் வெற்றியடையச் செய்கிறாள் என்பதுதான் உண்மை. நமது நாட்டுப் பெண்கள் மேலைநாட்டுப் பெண்கள் போன்ற அறிவு பெறவேண்டும். ஆனால் அதற்காக அவர்கள் தூய வாழ்வை இழக்கவேண்டும் என்றால் அந்த அறிவு தேவையில்லை என்பதையும் சுவாமி விவேகானந்தர் வலியுறுத்துகிறார்.

மேலைநாட்டவர்கள் தங்கள் பெண்களை மதிப்பதால் அவர்கள் சுகமாக, கற்றறிந்தவர்களாக, ஆற்றல்மிக்கவர்களாகத் திகழ்கிறார்கள். நாம் பெண்களை இழிந்தவர்கள், தாழ்ந்தவர்கள், வெறுக்கத்தக்கவர்கள், தூய்மையற்றவர்கள் என்றெல்லாம் வசைபாடுகிறோம்.

இதனால் நாம் மிருகங்களாக, அடிமைகளாக, முயற்சியற்றவர்களாக, ஏழைகளாக இருக்கிறோம். சக்தி இல்லாமல் உலகிற்கு முன்னேற்றம் கிடையாது.

இந்தியாவை முன்னேற்ற 500 ஆண்கள் முயன்றால், அதற்கு 50 வருடங்கள் ஆகலாம். அதையே 500 பெண்கள் முயன்றால் ஒருசில வாரங்களிலேயே சாதித்துவிடலாம். என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகிறார்.

மீண்டும் ஒருமுறை சுவாமி விவேகானந்தர் சொன்னதை நினைவுகூர்வோம். அதை மட்டும் ஒவ்வொரு பெண்களும் நினைவு வைத்துக் கொண்டால்போதும். நல்லதொரு விடியல் பெண்களுக்கு வெகுதொலைவில் இல்லை. பெண்கள் கைகளுக்கு எட்டும் தொலைவில்தான் உள்ளது.



## திருமணமாகப் போகும் மகளுக்கு தந்தையின் அறிவுரை

வழக்கமாக மணப்பெண்ணிற்கு அம்மா மட்டும்தானே அறிவுரை கூறுவார்கள் என்று நினைக்காதீர்கள். தாயைவிட தந்தையே பெண்ணுக்கு எதிர்காலம் குறித்து அறிவுரைகளை கூறுவார்கள்.

உன் கணவரிடம், "என் அப்பா நேரம் தவறமாட்டார்", "என் அப்பா அதிகாலையில் உடற்பயிற்சி செய்வார்" என்று அப்பா புராணம் பாடாதே கண்ணம்மா. உன் அப்பாவும் ஒரு காலத்தில் காலை 8 மணிவரை தூங்கிய சோம்பேறிதான் என்பதை நினைவில்கொள்.

உன் பிடிவாதங்களை எல்லாம் கோபத்துடன் கையாளாமல் அப்பா பொறுத்துக்கொண்டது போல், உன் கணவரும் சகித்துக்கொள்வார் என்று எதிர்பார்க்காதே. என் வயதிற்கே உரிய பொறுமை மற்றும் உன்மீதான கண்மூடித்தனமான பாசமும் என் கோபங்களை கண் மறைத்திருக்கலாம். அவரும் உன் பிடிவாதங்களுக்கு பின்னிருக்கும் குழந்தைதனத்தை புரிந்துகொள்ள அவகாசம் கொடு. முக்கியமாக உன் பிடிவாதங்களை தளர்த்தி, அப்பாவிற்கு பெருமை சேர்க்கப்பார்.

சிறு சிறு வாக்குவாதங்கள், கருத்து வேறுபாடு உங்கள் இருவருக்குள்ளும் வரத்தான் செய்யும். அச்சமயங்களில் எல்லாம், "நான் என் அப்பா வீட்டிற்கு போகிறேன்", "எனக்கு என் அப்பா இருக்கிறார்" என்ற வசனங்களை பேசி உன் மேல் அவருக்கு கசப்பு வர வைத்துவிடாதே. உன் கணவர்தான் இனி உன் உலகம் என்பதை அவருக்கு புரிய்வை. நீ அவருக்கு கொடுக்கும் முக்கியத்துவமும், மரியாதையும் அவர் மனதில் உன்னை சிம்மாசனம்போட்டு உட்கார வைக்கும்.

சுருக்கமாக கூறவேண்டுமானால்... அப்பா புராணம்பாடாதே. அப்பாவோடு ஒப்பிடாதே. "அப்பா செல்லம்" என்ற பட்டம் பயன்தராது. அப்பாக்கு கொடுத்த க்ரீடத்தை அவருக்கும் கொடு. 22 வருடங்கள் உன் கரம்பிடித்து நான் கற்றுக்கொடுத்த நற்பண்புகளை, இனிமேல் உன் கணவரின் கரம்கோர்த்து வெற்றியும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு வாழ்க்கை வாழ்ந்துக் காட்டுவதில் நிருபித்துக் காட்டு.

## சிக்கன் நூடுல்ஸ்



கோழி - ஒன்று, நூடுல்ஸ்- 500 கிராம், கரட் - 2, லீக்ஸ் - ஒன்று, வெங்காயம் - 3, பச்சைமிளகாய் - 4, முட்டை - 4, மிளகாய்த்தூள் - 2 மேக்கரண்டி, உப்பு- தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**

ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி கொதித்ததும் அதில் கோழியை முழுதாக உப்பு சேர்த்து வேகவைக்கவும். கோழி வெந்ததும் எடுத்து ஆறவிடவும்.

பிறகு தோல், எலும்பை நீக்கிவிட்டு தசையை மட்டும் எடுத்து உதிர்த்துக் கொள்ளவும். உதிர்த்த கோழியுடன் உப்பு, மிளகாய்த்தூள் சேர்த்து பிரட்டி அரை மணிநேரம் வைக்கவும். கரட்டை துருவிக்கொள்ளவும். லீக்ஸ்ஸை பொடியாக நறுக்கிக்கொள்ளவும். வெங்காயத்தை மெல்லிய நீளத் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாயை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

ஒரு வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி உப்பு, மிளகாய்த்தூள் சேர்த்து பிரட்டி வைத்துள்ள கோழியைப் போட்டு சிவக்க பொரித்து எடுத்துக்கொள்ளவும். பின்னர் சிறிதளவு எண்ணெய் ஊற்றி கரட் மற்றும் லீக்ஸினை உப்பு சேர்த்து வதக்கி எடுத்துக் கொள்ளவும்.

நூடுல்ஸை தயாராக வேக வைத்து எடுத்துக்கொள்ளவும். பின்பு சிறிதளவு எண்ணெய் ஊற்றி வெங்காயத்தை வதக்கவும். வெங்காயம் வதங்கிவரும்போது பச்சை மிளகாய், முட்டையை அடித்து ஊற்றி, உப்பு, மிளகாய்த்தூள் சேர்த்து வதக்கிக்கொள்ளவும். வேகவைத்து தயாராக வைத்துள்ள நூடுல்ஸின் மேல் பொரித்த கோழி, வதக்கிய கரட், வறுத்த முட்டை வெங்காயக் கலவையைப்போட்டு நன்றாக பிரட்டிக் கலந்துகொள்ளவும்.

சுவையான சிக்கன் நூடுல்ஸ் தயார். சூடாகப் பரிமாறவும்.

## முகப்பருவில் இருந்துவரும் இரத்தக்கசிவை தடுக்கும் வழிகள்



பருக்கள் முகத்தில் வந்தால், அது அழகை கெடுப்பதோடு அரிப்பையும், இரத்தக்கசிவையும் ஏற்படுத்தி, எரிச்சலைத் தரும். பருக்களில் இருந்து இரத்தக்கசிவு ஏற்பட்டால், அதற்கு காரணம் சருமத்துளைகளில் கடுமையாக நோய்த்தொற்றுகள் ஏற்பட்டுள்ளது என்று அர்த்தம். ஆகவே கைகளால் பருக்களை தொடுவதை முதலில் நிறுத்துங்கள். பருக்களில் இருந்து இரத்த கசிவு வருவதை தடுக்க சில வழிமுறைகள் உள்ளன. அவை என்னவென்று பார்க்கலாம்.

- தினமும் முகத்தை பலமுறை குளிர்ந்த நீரால் கழுவவேண்டும். முக்கியமாக அப்படி கழுவும்போது, எந்த ஒரு கெமிக்கல் கலந்த பொருட்களான சோப்பு, கிளின்சர், பேஸ் வோஷ் போன்றவற்றைப் பயன்படுத்தவேண்டாம். ஏனெனில் அவை பருக்களின் நிலையை இன்னும் மோசமாக்கிவிடும்.
- பருக்களில் இருந்து இரத்தக்கசிவு ஏற்படுவதைத் தடுக்க சிறந்த வழி, அவற்றை தொடாமல் இருப்பதுதான். ஏனெனில் கைகளால் பருக்களைத் தொடும்போது, கைகளில் உள்ள பக்ரீரியாக்கள் பருக்களில் நுழைந்து, நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடும்.
- விற்றமின் பி மாத்திரைகளை எடுப்பதன் மூலமும் பருக்களில் இரத்தக்கசிவு ஏற்படுவதைத் தடுக்கலாம். மேலும் விற்றமின் பீ மாத்திரைகள் பருக்களை விரைவில் குணப்படுத்தவும் செய்யும்.
- பருக்களில் அதிகளவு இரத்தக்கசிவு இருந்தால், ஐஸ்கட்டிகளைக் கொண்டு ஒத்தடம் கொடுங்கள். இதனால் உடனடி நிவாரணம் கிடைப்பதோடு, இரத்தக்கசிவும் உடனே நின்றுவிடும்.

**250/= பரிசு — வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :-475

கேள்வி: தேவையேற்பட்டால் ஒவ்வொரு பெண்ணும் சுயமாக சம்பாதிக்க வேண்டுமென்று வலியுறுத்தியவர்??

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 29. 06. 2015

பரிசுப் போட்டி இல :- 473 இற்கான விடை :- குழந்தையின் அசைவு குறைந்துவிடும்.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :- ந.ஜனோதீபன், மட்டக்காய்ச்சி, உடுவில் தெற்கு, சுன்னாகம்.


விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 475
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

475

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................



## அனந்தியை ஆனந்ததாண்டவம் ஆடவைத்த கனிமொழி

மொக்கன் கேட்கிறான்

**அனந்தி** பொடிச்சியை கனிமொழி அக்காச்சியும் கை விட்டுட்டாவாம். எழிலனை சரணடையச் சொல்லி கனிமொழி சொன்னதாக அனந்திப்பொடிச்சி பேப்பரில ஒரு பேட்டி குடுத்திருந்தா. இதை அறிஞ்ச கனிமொழி அக்காச்சியோ எழிலனைக் கண்டதார், கேட்டதார் எண்ட கணக்கில அறிக்கை விட்டிருக்கிறார். கனிமொழி அக்காச்சி கருணாநிதியின்ட மோள் எல்லோ. கருணாநிதிக்கு புலிகள் செய்த வேலையை எண்டைக்குத்தான் அவரும் அவற்ற குடும்பமும் மறப்பினம். கருணாநிதி எங்களுக்குத் துரோகம் செய்துபோட்டார் எண்டு எங்கட சனங்கள் எல்லாம் சொல்லிச் சொல்லி இண்டைக்கும் கவலைப்படுகுதுகள்.

இண்டைக்குத்தான் மொக்கன் ஒரு விஷயத்தை வெளிப்படுத்தப்போறான். இண்டைக்கு கிட்டத்தட்ட 25 வருஷத்துக்கு முந்தின கதை இது. கருணாநிதி எலக்ஷனில நிண்டு ஆட்சியைப் பிடிச்சுப்போட்டார். அந்த நேரத்தில புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், ரெலோ எண்டு எல்லாரும் அங்கதான் நிண்டவை. இதுக்ள்ள புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா மற்றும் அவற்ற தோழர்கள் எல்லாரையும் சாக்கொல்லுறதுக்குத் திட்டம் போடுகினம் எண்டு றோ உளவுப் பிரிவு மத்திய அரசாங்கத்துக்கு அறிவிச்சுது. மத்திய அரசாங்கம் கருணாநிதிக்கு அறிவிச்சது. இது நடந்தால் இந்தியாவுக்கு பெரும் பின்னடைவு எண்டும் கருணாநிதிக்குச் சொல்லிவிட்டினம்.

அப்ப கருணாநிதி உடனடியா புலிகளைக் கூப்பிட்டு விஷயத்தை சொல்லிப்போட்டார். நீங்கள் அவங்களை சுடப்போறிங்களாம். அப்பிடிச் செய்வியளோ? அதுக்குப் புலிகள் நாங்களும் அப்பிடி செய்வமோ? இது எங்களுக்கு எதிராகச் செய்யப்படுற சதி. எங்கள இஞ்ச இருந்து கலைக்கப்பாக்கினம் நாங்கள் அப்பிடி ஒரு காலமும் செய்யமாட்டோம் எண்டு கருணாநிதிக்கு வாக்குறுதி குடுத்துச்சினம். கருணாநிதியும் நம்பீட்டார். ஆனால் நடந்தது என்ன?

கொஞ்ச காலத்துக்குள்ளேயே நாபா உட்பட 16 பேரை சுட்டுவீழ்த்திவிட்டினம். இந்திய அரசாங்கம் கலங்கிப்போச்சுது. கருணாநிதிக்கு ஒரே அதிர்ச்சி ஆத்திரம். இது நடந்த கோபத்தில இந்திய அரசாங்கம் கருணாநிதியின்ர ஆட்சியை கலைச்சுவிட்டுது. கோடிக் கணக்கில செலவழிச்சு வெண்ட ஆட்சி பறிபோச்சு. அதையெல்லாம் வைச்சுத்தான் கருணாநிதி முள்ளிவாய்க்கால்ல பழியைத் தீர்த்துவிட்டார். இந்தப் பழிவாங்கலில அப்பாவிச் சனமும் அழிஞ்சுபோச்சு. புலிகளோட சேந்து சனமும் ஆப்பிட்டது. எங்கட இனத்தின்ர விதி எண்டுதான் சொல்லவேணும். புலிகளை அரிச்சந்திரன்ர தம்பிமார் எண்டு தப்பா நினச்ச கருணாநிதிக்கு அண்டைக்கு விழுந்த இடிதான் முள்ளிவாய்க்கால்ல முழுச்சனத்துக்கும் இடியாய் விழுந்தது.

அப்ப இந்தப் பாவம் எல்லாம் ஆற்ற தலையில போகும் எண்டு புலிகளை ஏந்தித் தூக்கி வைச்ச எங்கட தலைவர்மாரை மொக்கன் கேட்கிறான்? இது ஒண்டும் அறியாத சனம்தான் கருணாநிதி ஒரு கள்ளன். நாடகமாடி எங்கள அழிச்சுப் போட்டான் எண்டு இண்டைக்கும் திட்டிக் கொண்டிருக்குதுகள். ஆனால் ஆரத்திட்டவேணும் எண்டது இனித்தான் எல்லாருக்கும் விளங்கும். இது கூட்டமைப்புகாரருக்குள்ள சுரேஸ் தம்பிக்கு நல்லா விளங்கும். அவர் அண்டைக்கே முடிஞ்சிருக்க வேண்டியவர், அண்டைக்கு அவற்ற தலை தப்பினது தம்பிரான் புண்ணியம். ஆனால் அவரும் இந்த உண்மையை வெளியில விடாமல் புலிகளுக்கு சப்பைக்கட்டு கட்டினவர்.

விக்கி ஐயா பெரிய வீரவான் மாதிரி சனத்துக்குத் தன்னை காட்டத் தொடங்கி விட்டார். இராணுவம் முற்றா வெளியேற வேணுமாம் எண்டு ஊர் எல்லாம் சொல்லித் திரியிறார். இராணுவம் எண்டது ஒரு அரசாங்கத்தின் அமைப்பு. அதை வெளியேறச் சொன்னால் அரசாங்கத்தை வெளியேறச் சொல்ற மாதிரித்தான். கூட்டமைப்புக்காரர் அரசாங்கத்தோட ஒத்துமை. இவர் என்னெண்டால் வெளியேறச் சொல்லுறார். ஆரை ஆர் ஏமாத்தினம் இந்த விஷயத்தில. தம்பி டக்கிளஸ் சொல்லிறது மெத்தச் சரி. அளவுக்கு மிஞ்சி இராணுவத்தினர் இஞ்ச இருக்கக்கூடாது. அவை கண்டபடி சமூக விஷயங்கள்ள தலைபோடக்கூடாது .எண்டு டக்கிளஸ் தம்பி அரசாங்கத்திட்ட அடிக்கடி சொல்லுறார். அது சரி எண்டுதான் நாங்கள் எல்லாரும் சொல்லிறம். மொக்கனுக்குப் பழைய ஞாபகம் நினைவுக்கு வருது.

நாங்கள் பொடியங்களா இருந்த காலத்தில புதுப்படம் வந்தால் யாழ்ப்பாணம் போய்ப் பாக்கிறதில பெரிய கொண்டாட்டம். மொக்கனும் அப்படிப் போறவன்தான். யாழ்ப்பாணத்தில இருந்து காரைநகருக்கு போற கடைசி பஸ்ஸை தவறவிட்டால் நடையில போகவேண்டியது தான். அந்த நேரம்தான் நேவிக்காரங்கள் யாழ்ப்பாணத்தில இருந்து காரைநகருக்குப் போறவங்கள். போறவழியில இப்பிடி நடந்துபோறதக் கண்டால் அவங்கட றக்கை மறிச்சு ஆக்கள ஏத்திக்கொண்டு போய் இறக்கிவிடுவாங்கள். இது அதிகமாக நடக்கிறது. அண்டைக்கு அப்பிடி ஒற்றுமையா இருந்தவங்கள் பிறகு பிறகு சிங்களத் தலைவர்மாரும் சரி எங்கட தலைவர்மாரும் சரி எங்களைப் பிரிச்சுப் போட்டினம்.

இனி மைத்திரின்ர காலத்தில மீண்டும் அந்தக் காலம் வருமோ எண்டு மொக்கன் ஆசைப்படுறான். ஆனால் அது நடக்காது எண்டு சொல்லிறதுக்கு இல்ல. காலம் எல்லாம் மாறிவரும். அப்பிடி வாறதுக்கு நாங்கள்தான் ஒரு வழி செய்யவேணும். வெத்துக் கோஷம் போட்டு வீரவசனங்கள் பேசி சனங்கள உசுப்பேத்தி எலெக்ஷன்ல வாக்குகளை அள்ளிக் கொண்டு போற எங்கட தலைவர் மாருக்கு இந்த முறை நாங்கள் ஒரு பாடம் படிப்பிக்கத்தான் வேணும்.

ஊரில அறிஞ்ச தெரிஞ்ச நாலு பேரும் அப்படித்தான் சொல்லினம். அப்பு, ஆத்தை சொல்லிற பழமொழிகளில ஒண்ட உங்களுக்குச் சொல்லிறன். அண்ணன் எப்ப சாவான் திண்ணை எப்ப மிஞ்சும் எண்டு கூட்டமைப்புக் கூத்துக்காரர் நிக்கினம். ஒருவருக்கு ஒருவர் சீட் குடுக்காமல் கழட்டிப்போட்டு எங்கட வோட்டுக்கு வருவினம். விக்கி ஐயாவும் அப்பிடி வெளிக்கிட்டு வருவார் போல கிடக்குது. வரட்டும் வரட்டும் எண்டுதான் சனமும் பார்த்துக்கொண்டு இருக்குது. புரட்டாசியில புதிய பாலிமென்ராம். மைத்திரியும் சொல்லிப் போட்டாராம். ஆனால் மொக்கன் ஒண்டு சொல்லுறான் இவ்வளவு காலமும் கூட்டமைப்புக் காரருக்கு கிடைச்ச வாக்குகள் இந்த முறை அரைவாசியும் கிடைக்குதோ எண்டது ஐமிச்சம்.


புலிகளின்ர வீழ்ச்சியை முள்ளிவாய்க்கால்ல ஊரும் உலகமும் கண்டது. புரட்டாசியில கூட்டமைப்புக்காரற்ற வீழ்ச்சியை ஊரும் உலகமும் கண்குளிரக் காணப்போகுது. வரப்போற எலெக்ஸன உலகம் உன்னிபாய் பாக்குது எண்டு எங்கட சம்பந்தர் ஐயா சொல்லிக்கொண்டிருக்கிறார். அந்த உன்னிப்பா பார்க்கிற உலகமும் இந்த உண்மையை கண்டறியத்தான் போகுது. இதை எந்த கூட்டமைப்புக்காரரும் மறுக்கமுடியுமோ எண்டு மொக்கன் கேட்கிறான். மொக்கியும் கேட்கிறாள். பாட்டொண்டு காதில கேட்குது.

“கூட்டத்தில கூடி நின்று கூவிப்பிதற்றல் அன்றி நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே நாளில் மறப்பாரடி” திருச்சி லோகநாதன்ர கணீர எண்ட குரல்ல காதில தேனாய் பாயுது.

**மொக்கன் இப்பவும் கேட்கிறான், இனியும் கேட்பான்.**

**மா**நாட்டில் கலந்துகொள்ள 1931ம் ஆண்டு லண்டன் வந்திருந்த காந்தியை நேரில் சந்தித்து உரையாடினார் சார்லி சப்ளின், செப்டம்பர் 22 அன்று டாக்டர் கத்தியால் வீட்டில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

இந்தச் சந்திப்பு எப்படி நடைபெற்றது என்பது குறித்துப் பல்வேறு விதமான தகவல்கள், மாற்றுக்கருத்துகள், கற்பனைகள் இன்றும் உலவி கொண்டேயிருக்கின்றன. எரிக் பிளாம் எழுதிய சாப்ளின் பற்றிய புத்தகத்தினை வாசித்தபோது அதில் இச்சம்பவம் பற்றிச் சுவாரஸ்யமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.



## சார்லி சப்ளின் காந்தியை ஏன் சந்தித்தார்?

தனது சிட்டி லைட்ஸ் படத்தின் துவக்க நிகழ்விற்காக லண்டன் வந்திருந்த சப்ளின் தானே விரும்பி காந்தியை சந்திக்க நேரம் ஒதுக்கி தரும்படி கேட்டிருந்தார். ஒரு நடிகரோடு தான் பேசுவதற்கு என்ன இருக்கிறது என அவரது வேண்டுதலை காந்தி நிராகரித்துவிட்டார்,

சப்ளின் ஈஸ்ட் .எண்ட் எனும் அடித்தட்டு மக்கள் வசிக்கும் பகுதியில் வளர்ந்தவர். ஏழை எளிய மக்களின் விருப்பத்திற்குரியவர். நம் காலத்தின் மிக முக்கியமான கலைஞன் என்று சரோஜினி நாயுடு எடுத்துச் சொன்ன பிறகே காந்தி இந்தச் சந்திப்பிற்கு ஒத்துக்கொண்டார். காந்தி சட்டம் பயில லண்டன் வந்தபோது அதே ஈஸ்ட் எண்ட் பகுதியில்தான் குடியிருந்தார். ஆகவே சந்திப்பிற்கு அது ஒரு முக்கிய காரணமாக இருந்திருக்கிறது.

சப்ளின் ஏன் காந்தியை சந்திக்க ஆர்வம்கொண்டார், லண்டன் வந்திருந்த சப்ளின் முன்னதாகப் பெர்னார்ட் ஷா, ராம்சேமெக்னால்ட், ஹெச்.ஜி.வெல்ஸ், சேர்ச்சில் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்களைச் சந்தித்து அன்றைய சமூக அரசியல் நிலவரங்களைப் பற்றி உரையாடியிருக்கிறார். அதைத் தொடர்ந்தே காந்தியை சந்திக்க விரும்பினார் சப்ளின்.

லண்டனின் பெக்டன் ரோடில் வசித்துவரும் இந்திய மருத்துவரான டாக்டர் கத்தியாலின் வீட்டில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. தனது நண்பர்களுடன் காந்தி டாக்டரை சந்திக்கவந்திருந்தார். அன்று மாலை ஆறரை மணிக்கு சப்ளின் காந்தியை சந்திக்க் நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. காந்தி, சப்ளின் என இரண்டு முக்கிய பிரமுகர்கள் வருகிறார்கள் எனக் கேள்விப்பட்டு மக்கள் சாலை முழுவதும் பெரும் திரளாகத் திரண்டிருந்தார்கள். சப்ளின் காரில் வந்தபோது பலத்த கரகோஷத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. மரங்களின் மீது ஏறிக்கொண்டு கத்தியால் வீட்டினுள் என்ன நடக்கிறது என்பதைக் காண மக்கள் முண்டியத்தார்கள்.

காந்திக்கு சப்ளினின் திரைப்படங்கள் பற்றி எதுவும் தெரியாது என்பதால் அவர் பற்றிய அறிமுகத்தை உதவியாளர்கள் தயாரித்துத் தந்திருக்கிறார்கள், சப்ளினுக்குக் காந்தி இங்கிலாந்தே பயப்படும் சேர்ச்சிலை மிரட்டு மிரட்டென மிரட்டுகிறாரே என ஆச்சரியம். முதல்மாடியில் இருந்த சிறிய அறையில் அந்தச் சந்திப்பு நடைபெற்றிருக்கிறது.

சப்ளின் இந்தச் சந்திப்பில் காந்தியிடம் அவர் ஏன் இயந்திரங்களை எதிர்க்கிறார். இயந்திரமயமாவது காலத்தின் தேவைதானே. இயந்திரங்கள் மனித உழைப்பின் அடுத்தகட்ட வளர்ச்சியில்லையா, அதை ஏன் தவிர்க்கவேண்டும் எனக் கூறுகிறீர்கள். மனித அறிவின் வளர்ச்சியில், விஞ்ஞானத்தின் துணையோடு உருவாக்கப்பட்டவைதானே இயந்திரங்கள். இவற்றை ஏற்றுக்கொள்வதில் என்ன தயக்கம் எனக் கேட்டிருக்கிறார்.

அவரது விமர்சனத்தை மௌனமாகக் கேட்டுக்கொண்ட காந்தி தனக்கு இயந்திரங்களின் மேல் ஒரு கோபமும் இல்லை. மனித உழைப்பு முடக்கப்பட்டுவிடும். மனிதர்கள் இயந்திரங்களுக்கு அடிமையாகிவிடுவதை மட்டுமே நான் எதிர்க்கிறேன். இந்தியாவில் உள்ள கனரக இயந்திரங்களில் பெரும்பான்மை காலனிய ஆட்சியின் காரணமாக உருவாக்கப்பட்டவை. ஆகவே அங்கே இயந்திரங்களும் காலனியத்தின் அடையாளங்கள்தான், அதற்கு மாற்றாகவே ராட்டையில் நூல் நூற்கவும், மனித உழைப்பில் உருவான பொருளாதார வளர்ச்சியையும் முன்வைக்கிறேன் என்று காந்தி பதில் சொன்னார்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது காந்தி தனது ஒரு டொலர் கடிகாரத்தைக் கையில் எடுத்து மணி ஏழு ஆகிவிட்டது. அது தங்களின் பிரார்த்தனை நேரம், விருப்பமிருந்தால் அதில் கலந்து கொள்ளுங்கள் எனச் சப்ளினை அழைத்திருக்கிறார். அந்தச் சிறிய அறையில் இருந்த ஒரு சோபாவில் சப்ளினை உட்கார சொல்லிவிட்டு காந்தியும் அவரது நண்பர்களும் தரையில் அமர்ந்து பிரார்த்தனை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

காந்தி எளிமையாகத் தரையில் அமர்ந்து பிரார்த்தனை செய்வதை வியப்போடு பார்த்த சப்ளின், சோபாவில் அமர்ந்து இருப்பது குற்றவுணர்ச்சியை ஏற்படுத்தியது என்று கூறியிருக்கிறார். அந்தச் சந்திப்பின் முடிவில் காந்தி சரோஜினி நாயுடு சப்ளின் ஆகியோர் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். இந்தச் சந்திப்பினை பற்றிப் பி.பி.சி ரேடியோ அன்றிரவு விரிவாக அறிவித்தது. பின்னாளில் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாக உருமாறியது.

காந்தியின் எண்ணங்களை உள்வாங்கிக்கொண்டே சப்ளின் பின்னாளில் தனது மார்டன் டைம்ஸ் படத்தில் இயந்திரம் ஒன்றினுள் தான் மாட்டிக்கொள்வது போன்ற காட்சியை வைத்தார் என்று கூறுகிறார் எரிக் பிளாம்.

# நயகரா முன்னால்...

“வாழ்விலே ஒரு முறை” என அசோகமித்திரன் கதை ஒன்றுக்குத் தலைப்பு வைத்திருப்பார். நயகரா அருவியின் முன்னால் நின்றபோது அந்த தலைப்புதான் நினைவிற்கு வந்துபோனது.

நயகராவின் முன்னால் நின்றபோது பேச்சற்றுப்போய் கண்களின் போதாமையை உணர்ந்தவனைப் போல பிரமித்து நின்றிருந்தேன். வாழ்வில் ஒரு முறை நயகராவைப் பார்ப்பது பேறு. பலமுறை காணக் கிடைத்தவர்கள் பெரும் அதிர்ஷ்டசாலிகள். இயற்கை எவ்வளவு விந்தையானது என்பதற்கு நயகராவே சாட்சி. ரொரண்டோவிற்கு வந்து இறங்கிய நாளே கனடா செல்வம் இந்த வார இறுதியில் நயகராவிற்குப் போய்வரலாம் என்று சொல்லியிருந்தார்.

நயகராவைப் பற்றி பாடப்புத்தகங்களில் வாசித்திருந்தபோதும், திரைப்படங்களில் பார்த்திருந்தபோதும், அதனை நேர்நின்று காணும்போது அடையும் மனவெழுச்சியை சொல்லில் வெளிப்படுத்துவது எளிதானதில்லை. மர்லின் மன்றோ நயகரா என்றொரு படம் நடித்திருக்கிறார். கதை நயகராவிற்கு வரும் காதல் ஜோடி பற்றியது. நயகரா அருவியை மர்லின் மன்றோ தனது அறையில் இருந்தபடியே பார்த்துக் கொண்டேயிருப்பார். அதில் அருவியைப் பற்றி how big they are and how small I am என்றொரு வசனம் இடம் பெறும், அந்த வார்த்தைகள் எவ்வளவு பொருத்தமானவை என்பதை நயகராவின் முன்னால் நின்றபோது முழுமையாக உணர்ந்தேன்.

கனடாவிற்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்குமான எல்லையில் ஓடும் சுமார் 56 கி.மீ. நீளமுள்ள நயகரா ஆற்றின்பாதி தொலைவில் அமைந்துள்ளது அருவி. இது இரண்டு பெரிய அருவிகளைக் கொண்டது. கனடா பகுதியில் ஹார்ஸ் ஷு அருவி என ஆங்கிலத்தில் வழங்கப்படும் குதிரை லாட அருவியாகவும், பப்பல்லோ பகுதியில் அமெரிக்க அருவியாகவும் விழுகின்றது. குதிரை லாட அருவி 792 மீற்றர் அகலம் கொண்டது. உயரம் 53 மீற்றர் நயகரா அருவியானது மிகவும் அகலமானது. அமெரிக்கன் அருவி 55 மீற்றர் உயரமும், 305 மீற்றர் அகலமும் கொண்டது. நயகரா பேரருவியில் ஆறு மில்லியன் கன அடிக்கு அதிகமான நீரானது ஒவ்வொரு நிமிடமும் பாய்ந்து செல்கிறது. நயகரா நீர்வீழ்ச்சியைக் காண ஆண்டுதோறும் 10 மில்லியன் மக்கள் வந்துபோகிறார்கள். இப்பேரருவி சுமார் 12,000 ஆண்டுகளுக்கும் முன்னர் தோன்றியது என்றும், முன்பு இப்பொழுதிருக்கும் இடத்தில் இருந்து 11 கிலோ மீற்றர். தொலைவில் உள்ள லூயிஸ்டன் என்னும் இடத்தில் இருந்ததாகவும் சொல்கிறார்கள்.

அமெரிக்காவின் வடகிழக்கிலே உள்ள ஐம்பெரும் நன்னீர் ஏரிகளில் உள்ள மூன்று ஏரி நீரும் சிறிய ஏரியாகிய ஈரி என்னும் ஏரியின் வழியாகப் பாய்ந்தோடுகிறது. இந்த ஈரி ஏரியில் இருந்து நீரானது அதைவிட கீழான நிலப்பகுதியில் அமைந்துள்ள ஒன்டாரியோ ஏரியில் விழுகின்றது, இப்படிப் பாயும் ஆறுதான் நயாகரா.

குதிரை லாட அருவி அருகே செல்லும் படகு பயணத்தின் பெயர் மெய்ட் ஓ·ப் த மிஸ்ட். இதன்மூலம் விசேஷமான நீர்க்கவச உடை அணிந்து கொண்டு குதிரை லாட அருவி மிக அருகே செல்லமுடியும்.

அமெரிக்கப் பகுதியிலிருந்தும் கனேடியப் பகுதியிலிருந்தும் இதற்கான படகுகள் செல்கின்றன. நயகராவில் அமெரிக்காவையும் கனடாவையும் வானவில் பாலம் இணைக்கிறது. இது நயகரா அருவி அருகில் உள்ளது. நயாகரா என்று அருவிக்குப் பெயர் வந்தத்தற்கு அது மோகாக் என்ற பழங்குடியினரின் சொல் என்றும் நயக்கரராராகே என்ற இனத்தின் பெயர் எனவும் பல்வேறுவிதமாகக் கூறுகிறார்கள். எப்படியாக இருந்தாலும் இதன் பெயர் பழங்குடியினர்கள் வைத்த ஒன்றே.

நயகரா நீர்வீழ்ச்சி மிக முக்கிய சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. அங்கே காசினோ எனும் சூதாட்ட விடுதி துவங்கி, பல்வேறு உணவகங்கள், கேளிக்கை விளையாட்டுகள், பொழுது போக்கு பூங்காக்கள், தங்குமிடங்கள் உள்ளன. அருவியைப் பார்த்தபடி உள்ள அறைகளுக்கு ஏக கிராக்கி. அதுவும் அருவியின் அருகாமையில் உள்ள உணவுவிடுதியில் இரவு வெளிச்சத்தில் அருவியைப் பார்த்தபடியே உணவு அருந்த பெரும் போட்டி நிலவுகிறது. நயகரா அருவி விழும் ஒன்டாரியா பகுதி சிறுநகராக உள்ளது. அந்த ஊர் முழுவதும் அருவியில் தெறித்துவிழும் நீர், சாரலுடன் கூடிய புகையாக மாறி நம்மைச் சிலிர்க்க வைக்கிறது. அழகாக வடிவமைக்கப்பட்ட பாதைகள், பூங்காக்கள், அருகில் நின்று பார்ப்பதற்கு ஏதுவாக அமைக்கப்பட்ட தடுப்புச் சுவர்கள். எவ்வளவு எட்டிப் பார்த்தாலும் அடியாழம் காணமுடியாத அருவியின் பாய்ச்சல்.



“குதிரை லாட அருவி 792 மீற்றர் அகலம் கொண்டது. உயரம் 53 மீற்றர் நயகரா அருவியானது மிகவும் அகலமானது அமெரிக்கன் அருவி 55 மீற்றர் உயரமும், 305 மீற்றர் அகலமும் கொண்டது. நயகரா பேரருவியில் ஆறு மில்லியன்கன அடிக்கு அதிகமான நீரானது ஒவ்வொரு நிமிடமும் பாய்ந்து செல்கிறது. நயகரா நீர்வீழ்ச்சியைக்காண ஆண்டு தோறும் 10 மில்லியன் மக்கள் வந்து போகிறார்கள். இப்பேரருவி சுமார் 12,000 ஆண்டுகளுக்கும் முன்னர் தோன்றியது என்றும், முன்பு இப்பொழு திருக்கும் இடத்தில் இருந்து 11 கிலோ மீற்றர். தொலைவில் உள்ள லூயிஸ்டன் என்னும் இடத்தில் இருந்ததாகவும் சொல்கிறார்கள்.”

நான் சென்றிருந்த நாளுக்கு இரண்டு நாட்கள் முன்பாக நிக் வாலாண்டா என்ற ஒருவர் நயகரா அருவியின் குறுக்கே கம்பியில் நடந்து காட்டி சாதனைசெய்தார். அதைப் பார்க்க இலட்சக்கண்க்கான மக்கள் திரண்டிருந்தார்கள். அந்த நிகழ்ச்சியை நான் தொலைக்காட்சியில் நேரடியாகப் பார்த்தேன்.

நயகராவின் குறுக்கே ஒற்றை மனிதன் தனியே நடந்து போகிறான், ஒரு பக்கம் சுழன்று அடிக்கும் காற்று. இன்னொரு பக்கம் பனிமூட்டம். அவன் கண்களில் பயமில்லை. ஒவ்வொரு அடியும் மெதுவாக எடுத்துவைக்கிறான். பார்வையாளர்கள் முகம் பயத்தில் உறைந்துபோயிருக்கிறது. ஒரு அடி தவறாக எடுத்துவைத்தால் நீர்வீழ்ச்சிக்குப் பலியாகிவிடுவான். அவன் கம்பியில் நடந்து புகைமூட்டமாக உள்ள அருவியின் நடுப்பகுதியில் போய் நின்று ஒரு நிமிசம் கீழே குனிந்து பார்க்கிறான். என்ன ஒரு அற்புதமான தருணமது.

நயகராவை நெருங்கி நின்று பார்க்க தடுப்புச் சுவர் அமைத்திருக்கிறார்கள், அந்த தடுப்புச் சுவரில் நின்றபடியே அருவியைப் பார்க்கிறேன். கண்கள் தனது பலவீனத்தை உணர்கின்றன. உடல் எழுச்சி கொள்கிறது. காதுகள் அருவியின் பேரோசையை நிரப்பிக் கொள்கின்றன. இதயம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது.

நயகராவின் தண்ணீர் என் முன்னால் பொங்கி வழிந்தோடுகிறது. பார்க்கப்பார்க்க அருவி பிரமிப்பை அதிகப்படுத்திக்கொண்டே வந்தது. பார்வையாளர்கள் எல்லோரும் அப்படித்தான் உறைந்து போயிருந்தார்கள். அரை மணிநேரம் தனியே நின்று கொண்டே இருந்தேன். பின்பு நண்பர்கள் புகைப்படம் எடுத்துக்கொள்ள ஆசைப் பட்டார்கள், புகைப்படத்தில் மனிதர்கள் பெரியதாகி அருவி பின்புலத்தில் வெள்ளை புகைபோலாகத் தெரிந்தது. மனிதர்கள் எவ்வளவு சுயநலமானவர்கள் என்று அந்த நிமிசம் தோன்றியது.

நாங்கள் அருவியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது சிறுமழை பெய்யத் துவங்கியது. அந்த சாரலில் நனைவது சுகமாக இருந்தது. பார்த்துக் கொண்டிருக்கும்போதே சாரல் நின்று போய் வெயிலடிக்கத் துவங்கியது. சாரலும் வெயிலும் ஒன்றுசேர வானவில் ஒன்று தோன்றி அருவியின் குறுக்கே அமெரிக்கா, கனடா என தேச பேதமின்றி இரண்டின்மீது சரிந்துவிழுந்து கொண்டிருந்தது. வானவில்லைக் கண்டவுடன் மக்கள் ஆரவாரம் செய்தார்கள். மாறிமாறிப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். பறவைகளின் கூட்டம் ஒன்று கனடாவில் இருந்து அமெரிக்கப் பகுதியை நோக்கி அருவி மட்டத்தில் தாழப்பறந்து போனது, படகுகள் அருவியை நோக்கி சென்றவண்ணமிருந்தன.

நாங்கள் அருகாமை கோப்பி ஷொப்பில் போய் அமர்ந்தபடியே கோப்பி குடிக்கத் துவங்கினோம், செல்வம் பலமுறை நயகரா வந்துபோயிருக்கிறார். ஒவ்வொரு விருந்தினரும் நயகராவைப் பற்றி என்ன சொன்னார்கள் என்று பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளத்துவங்கினார். நான் தனியே நடந்து போய் வருகிறேன் என்று நீண்ட சாலையில் தனியாக நடக்கத் துவங்கினேன். பரிச்சயமற்ற முகங்கள், தொலைவிற்குச் சென்று தனியாக நின்றபடியே அருவியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரே அருவிதான். ஆனால் ஒவ்வொரு கோணத்திலும் ஒரு அழகாகத் தோன்றுகிறது. அருவியைக் காணக்கிடைத்த அந்த சந்தர்ப்பத்திற்காக, அதை சாத்தியமாக்கிய நண்பர்களுக்கு மனதிற்குள் நன்றி தெரிவித்தபடியே நின்றுகொண்டிருந்தேன்.

பிறகு ஒரு உணவகத்தை தேடிப் போய் சாப்பிட்டுவிட்டு இரவு வண்ண விளக்குகள் வெளிச்சத்தில் நயகராவைக் காண்பதற்காகக் காத்துக்கிடந்தோம். சேர்க்கஸ் சேர்ச்லைட்டுகள் போல நீண்டு பாயும் வண்ண விளக்குகளின் வெளிச்சம் அருவியை நோக்கிப் பாய ஆரம்பித்தது.

இது மனிதர்கள் உருவாக்கிய மாயம். இயற்கை தனது மாயத்தை எப்போதும் நிகழ்த்திக் கொண்டேதானிருக்கிறது. வண்ணவிளக்குகளும் அருவியும் ஒன்று கலந்து அந்த இடமே மாயாலோகம் போல மாறிக்கொண்டிருந்தது. மனிதர்கள் வெளிச்சத்தை அள்ளிக் குடிக்க விரும்புகிறவர்கள் போல கைகளை ஏந்தியபடியே ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். இசையும் நடனமும் துவங்கியது. பகலில் பார்த்த ஊரின் இயல்பு மாறி கொண்டாட்டமும் ஆரவாரமுமாக இரவு பொங்கியது. நயகரா ஒரு திறந்தவெளியில் அரங்கேறும் கனவு. நயகராவை விடிய விடிய மக்கள் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். பின்னரவில் நாங்கள் நயகராவை விட்டுக் கிளம்பும்போது திரும்பி ஒரு முறை பார்த்துக்கொண்டேன். எவ்வளவு அற்புதமான தருணமிது. சாலையில் நீண்டதூரம் பயணம் செய்து வந்த போதும் மனதில் இருந்த அருவி மறையவேயில்லை. அறைக்கு வந்து உறங்கியபோதும் அருவி எனக்குள் பொங்கி வழிந்துகொண்டே தானிருந்தது.

அடுத்த நாள் ஒன்டாரியோ மியூசியத்திற்குப் போயிருந்தபோது அங்கே ஒரு அரிய ஓவியத்தைக் கண்டேன். அது நயகரா அருவி பனியாக உறைந்த நாளைப் பற்றிய ஓவியமது. அருவி அப்படியே உறைந்து பனிப்பாளமாக நின்று கொண்டிருக்கிறது, அதை சிலர் அருகில் நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். உலக வரலாற்றில் மறக்கமுடியாத நாள் அது. 1848ம் ஆண்டு மார்ச் 29இல் நயகரா அருவி பனிப்படலமாக உறைந்திருக்கிறது. நயாகரா ஆறு ஓடி வரும் பகுதியில் கடும் குளிர் வாட்டி எடுக்க, கூடவே பனிப்புயலும் சேர்ந்து கொள்ள கொஞ்சம் கொஞ்சமாக உறைய ஆரம்பித்த அருவி, ஒரு கட்டத்தில் முற்றிலும் பனிப்பாறைகளாக உறைந்து இறுகிப்போனது.

அதைக் கண்டு உலகமே அதிசயித்தது. ஆனால், முழுதாக ஒரு நாள் கடந்தும் பனிப்பாறை இறுகியபடியே இருக்க, “இது உலக அழிவின் ஆரம்பம்” என்று வதந்தி பரவி, மக்கள் தேவாலயங்களில் கூடி நின்று இறைவனை வேண்டத் தொடங்கினார்கள். 30 மணி நேரத்துக்குப் பிறகு பனிப் புயலின் சீற்றம் குறைய, நயாகரா உருகி மெதுமெதுவாக இயல்பாகப் பாயத் தொடங்கியிருக்கிறது.

ஓவியத்தில் உறைந்த நயகராவைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அருவி அப்படியே பனிப்பாறையாக உறைந்து நிற்கிறது. அருகில் கறுப்புத் தொப்பி அணிந்த சில மனிதர்கள். அந்த ஓவியம் வரலாற்றின் மிக அரிய நாள் ஒன்றின் ஆவணக்காட்சியாக இருந்தது. கனடா ஒரு தண்ணீர் தேசம். அங்கே உலகின் மிகப்பெரிய ஏரிகள் இருக்கின்றன. தண்ணீர்தான் கனடாவை வாழவைக்கிறது. கனடாவாசிகளின் இயல்பு தண்ணீரைப் போலவே இருக்கிறது, அவர்களுக்கு இனபேதமில்லை, மதபேதமில்லை. இருப்பதைப் பகிர்ந்துகொள்ளும் அன்பும், நேசமும் கொண்டிருக்கிறது கனடா.


நயகராவில் நின்றபோது எனது பையில் இருந்து ஒரு நாணயத்தை எடுத்து அருவியை நோக்கி வீசினேன். என் கரம் தொட முடியாத அருவியை நாணயம் தொட்டு உணரட்டும். அருவியின் உள்ளே மனிதக்கரங்கள் தீண்ட முடியாமல் அந்த நாணயம் பயன்பாடு என்ற உலகில் இருந்து தன்னைத் துண்டித்துக்கொள்ளட்டும். எனது வருகை அந்த நாணயத்தின் பெயரால் உறுதி செய்யப்படட்டும். அருவியைப் போல வாழ்க்கை எனக்கு தீரா சந்தோஷத்தை வாரி வழங்கட்டும் என நினைத்துக் கொண்டேன்.


பிரமிப்பிலிருந்து சந்தோஷத்திற்கும், சந்தோஷத்தில் இருந்து தனிமையை உணர்வதற்கும், தனிமையை உணர்வதில் இருந்து நான் தனியில்லை, இந்தப் பெரும் பிரபஞ்சத்தின் சிறுதுளி என அடையாளம் காண்பதற்கும் அருவி எனக்கு வழிகாட்டியது.

# குடல்வால் அழற்சி

**குடல் வால் அழற்சி என்றால் என்ன?**

குடல்வால் அழற்சி நோய் என்பது குடல்வாலில் ஏற்படும் வீக்கம். குடல் வால் என்பது பெருங்குடலின் முற்பகுதியில் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு சிறிய குழாய் போன்ற அமைப்பாகும். அது உங்கள் குழந்தையின் வயிற்றின் வலது அடிப்பாகத்தில் அமைந்திருக்கிறது. அதற்கு உடலில் அறியப்பட்ட செயற்பாடுகள் ஏதுமில்லை.




**குடல் வால் அழற்சிக்கான அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்**

குடல்வால் அடைக்கப்பட்டு வீங்கும்போது குடல்வால் அழற்சி உண்டாகிறது.

குடல்வால் அழற்சி பின்வரும் அறிகுறிகளால் காண்பிக்கப்படும்:

தொப்புழைச் சுற்றி அல்லது வயிற்றின் வலது கைப்பக்க அடிப்பாகத்தில், வலி அந்தப் பகுதியை இலேசாக அழுத்தும்போது, ஆழமாக சுவாசிக்கும்போது, மற்றும் அசையும்போது வலி அதிகரிக்கும்

**பசியின்மை, குமட்டுதல், வாந்தி, காய்ச்சல்**

குடல்வால் வெடித்தால், உங்கள் பிள்ளை, அடிவயிறு முழுவதிலும் தொடர்ச்சியான, கடும் வலியை உணருவான்.

**காரணங்கள்**

குடல்வால் அடைக்கப்படும்போது குடல் வால் அழற்சி ஏற்படுகிறது. குடல்வாலில் தொற்றுநோயும் ஏற்படலாம். அடைப்பு அல்லது தொற்றுநோய் குடல்வாலை வீங்கச் செய்யலாம், அப்போது வலியை உண்டாகும். குடல்வால் வெடிப்பதற்கான ஆபத்தும் அங்கிருக்கிறது.

**ஆபத்தான காரணிகள்**

பிள்ளைகள் மற்றும் பெரியவர்கள் எந்த வயதினராக இருந்தாலும் குடல்வால் அழற்சிப் பாதிப்பு ஏற்படலாம். 2 வயதுக்குட்பட்ட பிள்ளைகளில் இது அரிதாகச் சம்பவிக்கும். குடல் வால் அழற்சி, வளரும் இளமைப் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை மிகவும் பொதுவாகப் பாதிக்கும்.

**சிக்கல்கள்**

வீக்கமடைந்த அல்லது தொற்றுநோய் ஏற்பட்ட குடல்வால்களுக்குச் சிகிச்சையளிக்கப்படாவிட்டால், குடல்வால் வெடிக்கலாம். இது வயிற்றறையின் உட்புற உறையில் மரணத்தை விளைவிக்கக்கூடிய தொற்று நோயை ஏற்படுத்தலாம்.

**நீங்கள் மருத்துவ உதவியை எப்போது நாடவேண்டும்**

உங்கள் பிள்ளைக்கு கடுமையான அடிவயிற்றுவலி அல்லது விபரிக்கமுடியாத தொடர்ச்சியான காய்ச்சல் அல்லது உறுத்தல்கள் இருந்தால், அவனை மருத்துவரிடம் எடுத்துச் செல்லவேண்டும். குடல்வால் ஏற்கனவே வெடித்துவிட்டது என நீங்கள் சந்தேகித்தால், உங்கள் பிள்ளையை உங்களுக்கு மிக அருகிலிருக்கும் அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லவும்.

குடல்வால் அழற்சியுள்ள உங்கள் பிள்ளைக்கு மருத்துவர் எப்படி உதவி செய்யலாம்

உங்கள் பிள்ளையின் மருத்துவர் உங்கள் பிள்ளையைப் பரிசோதிப்பார். குடல்வால் அழற்சி இருப்பதாகச் சந்தேகப்பட்டால், உங்கள் பிள்ளை மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவான். நோயை உறுதிப்படுத்துவதற்காக, மருத்துவர் அல்லது தாதி, ஒரு நரம்பூடாக மருந்து செலுத்தும் ஊசி (ஐஏ), இரத்தம் மற்றும் சிறுநீர்ப் பரிசோதனைகள் மற்றும் அல்ட்ராசவுண்ட் அல்லது சிடி ஸ்கான் செய்யும்படி கேட்பார். அதன்பின்னர் குடல்வாலை வெளியே எடுப்பதற்காக உங்கள் பிள்ளை அறுவைச் சிகிச்சைக்குட்படுவான். இந்த அறுவைச் சிகிச்சை குடல்வாலெடுப்பு என அழைக்கப்படும். இது ஒரு சாதாரண, எளிய செயற்பாடு.

# பல் சொத்தையைத் தடுக்கும் வழி

காலை, இரவு என இரண்டு வேளை பல் துலக்கவேண்டும். மேல் தாடைப் பற்களைக் கீழ்நோக்கிச் சுழற்றியும், கீழ்த் தாடைப் பற்களை மேல் நோக்கிச் சுழற்றியும் துலக்கவேண்டும். கடிக்கும் பகுதியை முன் பின்னாகத் துலக்கவேண்டும். நாக்கையும் சுத்தப்படுத்தவேண்டும்.

புளோரைட் கலந்த அனைத்து வகைப் பற்பசைகளுமே உகந்தவைதான். பல்லில் தேய்மானம் இருந்து, பல்லில் கூச்சம் ஏற்பட்டால், அப்போது மட்டும் டிசென்சடைசிங் பற்பசையைப் பயன்படுத்தலாம்.

பட்டாணி அளவிலான பற்பசை போதுமானது.

கரி, உப்பு, மண், செங்கல்பொடி, சாம்பல், நெல் உமி போன்றவற்றால் பல் துலக்கக் கூடாது.

பல் துலக்கியைப் பொறுத்த வரையில், மிருதுவான அல்லது நடுத்தர வகை பல்துலக்கியைப் பயன்படுத்துவது பற்களின் பாதுகாப்புக்கு நல்லது.

ஆரோக்கியமான நிலைப்பற்களுக்குப் பால்பற்கள்தான் அஸ்திவாரம். ஆகவே, கை விரலில் பொருத்திக் கொள்ளும் மிருதுவான விரல் பல்துலக்கியைப் பயன்படுத்தி, ஐந்து வயதுவரையிலும் குழந்தைகளுக்குப் பெற்றோரே பல் துலக்கிவிட வேண்டும்.

குழந்தைக்குப் போத்தலில் பால் கொடுத்தவுடன், ஈறுப் பகுதியைத் தண்ணீரால் நன்றாகத் துடைத்துவிட வேண்டும்.

விற்றமின் - சி, விற்றமின் - டி, கல்சியம், பொஸ்பரஸ் சத்துகள் மிகுந்த மீன் எண்ணெய், திராட்சை, ஒரேஞ்சு, தக்காளி, எலுமிச்சை, நெல்லிக்காய், பச்சையிலைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள் முதலியவற்றையும், புரதச்சத்து மிகுந்த பால், முட்டை, இறைச்சி, பயறு, பருப்பு முதலியவற்றையும் தினசரி உணவில் சேர்த்துக்கொண்டால், பல் ஈறுகளும் எனாமலும் நல்ல வளர்ச்சிபெறும்.

பற்களில் ஒட்டிக்கொள்ளக் கூடிய இனிப்பு மா, சொக்லேட், ஐஸ்கிரீம் போன்றவற்றைச் சாப்பிட்டால் உடனே வாயைக் கொப்பளிக்கவேண்டும்.


கோப்பி, தேநீர் உள்ளிட்ட அதிக சூடான உணவு வகைகளையும், ஐஸ்கிரீம் உள்ளிட்ட அதிகக் குளிர்ச்சியுள்ள உணவு வகைகளையும், குளிர்பானங்களையும் அடிக்கடி சாப்பிடக்கூடாது.

குண்டூசி, குச்சி போன்றவற்றால் பல் ஈறுகளைக் குத்தி அழுக்கு எடுக்கக்கூடாது.

தினமும் பால் அருந்துங்கள். அதிலுள்ள கல்சியம் பல்லுக்குப் பாதுகாப்பு தரும்.



# பசி வந்தால் பத்தும் மறந்திடும்!



வ.குணபாலசிங்கம், நல்லூர்

**பெரியவரே...** ஒரு மாசத்துக்கு தேவையான மாத்திரை டொனிக் எல்லாம் இதில் இருக்கு... இந்த துண்டில் எழுதியிருக்கேன் இந்தாங்க. காலை... மத்தியானம்... ராத்திரியும்... மூன்றுவேளை சாப்பாட்டுக்குப் பிறகு போட்டுக் கொள்ளுங்கள்!

துண்டைக் கிழித்து தேவனிடம் கொடுத்தார்... டாக்டர். பெரியவர் அருளப்பு தேவனின் அப்பா சாப்பாட்டுக்குப் பிறகா டாக்டர் என்று எலும்புதட்டிய கன்னத்தைத் தடவிக்கொண்டே சந்தேகம் கேட்டார். ஆமாம். பார்மசியில் வாங்குகிற மாத்திரையும் நான் தருகிற மாத்திரைகளும் எல்லாமே சாப்பாட்டுக்கு அப்புறம்தான்.. ஆமாம்... ஆமாம்... பொறுமை இழக்காமல் பதில் சொன்னார் டாக்டர்...!

ஆனால் தேவன் சூடாகிவிட்டான் “அறிவிருக்கா உங்களுக்கு... இல்லை... காது கீது செவிடாகிப் போச்சா எத்தனை வாட்டி ஒரு சாதாரண விசயத்தை சந்தேகம் கேட்பீங்க என்று தந்தையைக் கோபமுடன் பார்த்தான்... தேவன். நோ.. நோ.. கோபப்படாதீங்க மிஸ்டர் தேவன்... வயசானவங்க.. அப்படித்தான் எதையும் ஒரு தடவைக்கு இரண்டு, மூன்று தடவையாய்க் கேட்டுத் தெரிஞ்சுக் குவாங்கள்...! அதோடு என்ன டாக்டர்.

பெரியவரே... நீங்க... கொஞ்சம் வெளியில்போய் இருங்களேன்? என்று நாசூக்காய் அருளப்புவை அப்புறப் படுத்தினார் அவர். தேவன் முகம் சுருங்கினான். என்ன டாக்டர் அப்பாவுக்கு ஏதாவது சீரியஸா என்னென்று ஏதும் மறைக்காமல்... சொல்லுங்க...

நோ... நோ... அதெல்லாம் ஒன்றுமே... இல்லை. சொல்லப் போனால்... உங்கள் அப்பாவுக்குப் உடம்பில எந்த நோயும் இல்லை. பிறசர்தான் கொஞ்சம் கூடுதலாக இருக்கு. இந்த மாத்திரைகள் போட உங்கள் மாதிரியே நல்ல தெம்பாய் இருப்பார்.. என்று சிரித்தவர்... கேட்டார் பெரியவர் இப்ப எங்கே இருக்கிறார்? உங்களோடயா இல்லை தனியாக இருக்கிறாரா?

சொந்த ஊர் ஊர்காவற்றுறையில் தான் இருக்கிறார். உங்க அம்மா... இருக்காங்களா? “மூணு வருசமாச்சு... காலமாயிட்டாங்க. அவர் மட்டும் எனது சீதன வீட்டில் என்னுடன் இருக்க நான் பலமுறை கேட்டும் மறுத்துவிட்டார். அப்பா எனது மகன் டேவிட்டுக்கு அந்த பெரிய வீட்டையும் காணியையும் எழுதியும் வைத்துவிட்டார். ஒண்டியாகத்தான் இருக்கிறார். பலவருடமாக ஈராக் நாட்டில் பணிபுரிந்தவர். இருபது வருசத்துக்கு மேல் இருக்கும். இரண்டு வருசம் ஒரு முறை வந்து போவார். அந்தப் பிரச்சினையான காலத்திலும் கடல்மார்க்கமாக காக்கோ போட்டு பெட்டி பெட்டியாக சகல சாமான்களையும் கொண்டுவருவார்...? அவர் கொண்டுவந்த சாமான்களே இப்பவும் எவ்வளவோ பல இலட்சம் பெறும்.

“சாப்பாடு... மாசா மாசம் நான் அனுப்புற பணம்தான்.. எவ்வளவு? 1500 ரூபாய் டாக்டரிடம் புன்முறுவல் பேனாவை மேசையில் தட்டிக்கொண்டே நொடிப்பொழுது யோசித்தார். இந்தத் தொகை அவருக்குப் பத்துமா பத்தாதா என்ற கேள்விக்கு நான் வரவில்லை. அதுபோதும்னே வச்சிடாலாம். வேளா வேளைக்கு அவர் சரியாகச் சாப்பிடுவார்னு நீங்க நினைக்கிறீங்களா?

“ஏன் சேர்”

உங்க அப்பாவுக்கு உடம்புக்கு ஒண்ணும் இல்லை. அவருக்கு இப்ப பசிதான் வியாதி. வேளாவேளைக்குச் சாப்பிடாமல் வயிற்றைக் காயப்போட்டு ரொம்ப பலவீனமாயிட்டார். சாப்பாட்டுக்குப் பிறகா மாத்திரைன்னு திரும்பத் திரும்பக் கேட்டாரே... காரணம் அது தான். சாப்பிடுறதே இல்லை என்கிற போது சாப்பாட்டுக்கு அப்புறம் என்ற பேச்சுக்கே இடம் இல்லையே... அவருக்கு சமைக்க முடியலையா அல்லது நீங்கள் அனுப்புற பணம் போதல்லையா... எது காரணம் என்று எனக்கு சரியாக தெரியவில்லை...

ஆனா வயசான காலத்திலே அவரை நீங்களே வச்சு பராமரிக்கலாமே... மகனோட சேர்த்திருக்கிற சந்தோசம். வயிறாரச் சாப்பிடற தெம்பு எல்லாம் அவருக்கு கிடைக்குமே. பெத்த தகப்பனுக்கு நீங்க இந்த ஆதரவு செய்யக்கூடாதா? உங்கள் சந்தேசத்துக்காக அந்த கொடுமையான காலங்களில் அயல்நாட்டில் இவ்வளது வருடமும் தனியாக சமைத்து சாப்பிட்டு இங்கும் வந்தும் தனிமை தனிமை அதே நிலைமை. இருந்த சொத்து பத்தெல்லாம் உங்க மகனுக்கு எழுதியும் வைத்துவிட்டார் எனச் சொல்றீங்க. அந்த நல்ல மனசுக்கு நீங்கள் நன்றி காட்டுவதுதானே நியாயம்!

“அது வந்து... நீங்கள் சொல்லுறது... சரி... தான்... டாக்டர்” உங்க சொந்த விசயங்களில் அனுமதி இல்லாமல் தலையிடுறேன்னு தப்பா நினைக்காதீங்க... உங்களுக்கு நான் குடும்ப டாக்டர் என்ற உரிமையிலேதான் இத்தனையும் சொன்னேன்... கொஞ்சம்... பலமுறை யோசியுங்களேன்... “ஓகோ டாக்டர் தேவன் வெளியே வந்தான்.

அவனுக்குள்ளே ஒரே ஓயாத அலை....

மகனே உடம்பெல்லாம் நோகுது என்றபடி இன்று காலையில்தான் வந்தார் அருளப்பு. மேரிவாங்க... மாமா என்ற ஒப்புக்குக்கூட ஒரு வார்த்தை பேச வில்லை... வேண்டாவெறுப்பாக சாப்பிட்ட வேகத்தைப் பார்த்து 70 எம்.எம் அகலத்திரையானது அவளது கண்கள்... என்னங்க உங்கப்பா உடம்புக்கு முடியல்லைன்னுட்டு எட்டு தோசைக்கு மேல் அடுக்குகிறாரே என்று வயிறு எரிந்தாள். அது மட்டுமல்ல இவருக்கு வடித்துப் போட என்னால் முடியாது. டாக்டரிடம் காட்டுவதானால் காட்டிட்டு அப்படியே அனுப்பிவச்சிடுங்க என்று அபாயச் சங்கும் ஊதி இருந்தாள்... ஏம்மா... தாத்தா இன்னிக்கு போயிடுவாராம்மா பரிதாபமாகக் கேட்டான் மகன் டேவிட். ஆமாண்டா ஏம்மா உனக்கு எந்தக் காரணமும் வேண்டாம் பேசாமல் பையை எடுத்துட்டு ஸ்கூலுக்கு கிளம்பு. அடிக்காத குறையாய் மகனை விரட்டினாள் மேரி.

பிள்ளைக்கே அந்தக் கதி என்றால் கணவனுக்கு மனைவியின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசப் பயந்தவன் எதுக்கும்.. ஆகட்டும்... என்று கோயில் மாடுமாதிரி தலையாட்டி பழகிவிட்டான்...

இஞ்சேருங்கோ.. இங்கே ஒருக்கா வந்திட்டுப் போங்கோ.. என்ன விசயம் புகைஞ்சுகொண்டே இருக்கிறாய் இண்டைக்கு காலை சட்டநாதர் கோவிலில் என்னோடு படித்த லீலாவதி... யாருது லீலாவதி அதுதாங்க கேசவனின் தம்பி சிவநேசன் டொக்டரின் மனைவி அவ என்னுடன் கனநேரம் கதைச்சவ.. அப்போ அவ சொன்ன விசயம் உங்க அப்பாவுக்கு நல்ல வசதி பணமும் ஒரு சதம் செலவிழிக்கத் தேவையில்லை. உங்க அப்பாவை இரண்டு நாட்கள் வந்து பெரியாஸ் பத்திரி வோட்டில் வந்து இருக்கட்டாம்.

தனது கணவர்... மாதா... மாதம் கிளினிக் போட்டு சகல வருத்தத்துக்கும் மருந்து... மாத்திரை... எல்லாம் எழுதிதருவாராம். இரத்தப் பரிசோதனை யூறின் சகலதும் இலவசமாக செக் பண்ணி செய்யலாமாம். உங்களை ஒருமுறை வந்து தனது வீட்டில் கணவருடன் கதைச்சுப்போட்டு செய்யட்டாம். சாயந்தரம் ஒருக்கா நீங்கள் போய் டொக்டரிடம் எல்லாம் விபரமாக கேட்டுவிட்டு செய்யுங்கோ? மேரி அடுக்கிக் கொண்டே போனாள். ஆகட்டும் அம்மையே.. தங்களின் சொற்படியே நடக்கிறேன்.. அப்பவே போகிறேன்.

எதிரும் புதிருமாய்... சீறும் தனியார் பேரூந்துகளின் புழுதிப்படலம் மனதிலே குழப்பம்... மௌனமாய் நடந்தான் தேவன்...

இந்தா... தேவன் கிளினிக் கொப்பி டொக்டர் மருந்து எழுதித் தந்த காட்... இதோ அந்த இரண்டா வது கவுண்டரில் ஒரே சனமாக இருக்கு... மருந்தை எடுத்து.. கொடுத்திடப்பா.. நான்.. இப்படியே... பஸ்.. ஏறிடறேன்!

மருமகளின் குணம் அவருக்கு மட்டும் தெரியாதா என்ன? அதனால் தான் எல்லாத்துக்கும் அவரே முந்திக்கொண்டு... அவசரப்பட்டார் பார்சல்.. பார்சலாக மருந்துகள்... வாங்கிக்கொண்டு வந்தான் தேவன்... மாலை மதியம் எப்படி பாவிக்கணும் என்று எழுதியிருக்கு... அப்பனும் பிள்ளையும் பஸ் நிற்கும் இடத்துக்கு வந்தார்கள்.

காரைநகர் பஸ் புறப்படத் தயாராய் நின்றது. மகனே... கொஞ்சம் பொறு அந்தக் கடைக்குப் போயிட்டு வருகிறேன்... அப்பா, அப்பா... போன வேகத்தில் கையில் ஒரு பார்சலுடன் வந்தார். இதில் பெரிய கீரை வடை இருக்கு. மேரிக்கும் டேவிட்டுக்கும் கொடு! வரட்டுமாப்பா விடைகேட்டார் அருளப்பு. தேவன் என்ன நினைத் தானோ தெரியவில்லை. இருங்க அப்பா அடுத்த பஸ்ஸில் போகலாம் என்ற அவரது கையைப் பற்றிக் கொண்டான்!

பெரியவர் திகைத்தார் கையை விடப்பா பஸ் புறப்படப்போகுதுப்பா. மறு பஸ்சுக்கு பல மணிநேரம் நிற்கணும். போனால் போகட்டும் வாங்க வீட்டுக்கு போகலாம்... வீட்டுக்கா ஆமாம். வேண்டாம் மகனே! உன் குடும்ப நிலைமை எனக்குத் தெரியும்... என்னாலே உங்க ரெண்டு பேருக்குள்ளே மனக்கசப்பு வரவேண்டாம்.

இது உங்களுக்காக இல்லையப்பா.. எனக்காக... எங்களுக்காக... என் குடும்பத்துக்காக நீ என்னடா சொல்லறே ஆமாப்பா.. இன்னிக்கு உங்களுக்கு பசிக்கிறமாதிரி உடம்பு வலிக்கிற மாதிரி நாளைக்கு எனக்கும் பசிக்கும் எனக்கும் ஏன்... உங்கள் மருமகளுக்கும் வயசாயிடுச்சுன்னா அவளுக்கும் என் பிள்ளை சோறு போடவேண்டாமா... உங்களுக்கு இன்னைக்கு நான் உபசரணை செய்தால்தானே அதைப் பார்த்திட்டு நாளைக்கு.. தானும் இப்படி அப்பா... அம்மாவுக்கு... ஆதரவு காட்டணும்னு நினைப்பான்... என் மகன். அதுக்காகத் தான் அப்பா... உங்களை வீட்டுக்கு கூப்பிடுறேன் மேரிக்கும் இதை விளங்கப்படுத்திச் சொல்லுவேன்... வாங்க.

இடுப்பு... பிடிப்பு மூட்டுவலி அத்தனையும் கணப்பொழுதில் மறைந்துபோனது போல் இருந்தது. அருளப்பு.

பெற்ற மகனைப் பெருமையுடன் பார்த்தார். அவர் கண்ணாடியைத் துடைத்தபடி நிமிர்ந்து நடந்தார். ●

# நூல் விமர்சனம்

## இளவல் ஆ.முல்லைதிவ்யன் எழுதிய

## "அக்காவுக்கு எழுதிய கடிதம்!"

கைக்கடக்க அளவில் (1X10) முன்றல் அட்டைப் படத்துடன், நூல் விபரம், உள்ளத்திலிருந்து..., முன்னுரை என்பன இடம்பெற்றுள்ள 06, பக்கங்களைவிட்டு 80, பக்கங்களில் கவி வரிகள் வெளிவந்துள்ளன.

இல:01 இடப்பட்டு ஆரம்பமான, முதல் கவிதை தலைப்பே இல்லாமல் வெறும் புள்ளிகள் '.........' இடப்பட்ட




ஆறுவரிக் குட்டிக் கவிதையில் தொடங்கி மொத்தம் 49, தலைப்புக் களில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

முன்னுரை வழங்கியுள்ள வலம்புரி பத்திரிகை முகாமையாளரும், இளம் கவிஞருமான மாவை நா.கஜேந்திரன், "முல்லை திவ்யன் தன்னை அடையாளப்படுத்த முயற்சித்தான். அந்த முயற்சியில் முழுதுமாய் வென்றுவிட்டான் என்கிறார்.

"வளர்ந்து வரும் இளம் கவிஞர் க்களில் ஆரோக்கியமான வளர்ச்சியை யும், சமூக நலன் சார்ந்த ஆதங்கங் களையும் இவருடைய கவிதைகளில் உணரமுடிகிறது, என்றுள்ளார் பின்னட்டையில் அறிமுகம் செய்யும் திருமதி பொன்மலர் சுமன்.

இனி இவரது வரிகளில் என்னைக் கவிர்ந்த, பிடித்த பக்கங்களைப் பார்க்கலாம். அநேகமான புதுக் கவிஞர்கள் கவிதை என்பதன் பொருளை நெருங்காதவர்களாகவே காணப்படுகின்றனர். முல்லை திவ்யனும் என்னுடைய பார்வையில் அப்படித்தான்.

49 கவிதைகளிலும் மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட வரிகளே என்னையும் கவர்ந்தன. 'பரிபூரணனின் மேல் பழி' (பக்: 14,15,16)

"ஓரினம் என்றோம்
ஒன்றாகி நின்றோமோ
இல்லை!"

இப்படித் தொடங்கி சாதி, குலம், குடும்பம், நாடு, அயலவர், அயல் நாடு, வெள்ளையர், மொங்கோலியர், ஆரியமொழி, அன்புமொழி, செல்வளம் என்னும் முன் சொற்களில் ஆரம்பமாகும் 12 துளிகளும் கேள்விகளைத் தொடுத்து 'இல்லை' ஈற்றில் முடிக்கப்பட்டுள்ளன.

அவ்வீற்று 'இல்லை' நீக்கிப் பார்த்தால் சுதந்திரமாக வாசகனை முடிவெடுக்கும் பாங்கை வழங்கின் அழகாக அமைந்திருக்கும். கவிதை செப்பனிடலில் இது ஒரு நுட்பம்.

'வன்னிமை' (பக்கம் 17,18,19)

கடற்கரை காக்கத்
தில்லையும் புன்னையும்
வைத்தவரே.....
வன்னியில் மனித உழைப்பைப்

பற்றிப் பேசுகிறது. தண்ணீரூற்று, மறிச்சுக்கட்டி, நட்டாங்கண்டல், முரசமோட்டை மேற்படி ஊர்களைக் கூறி முல்லை, முசுட்டையும் கொல்லையிட்ட கதைகளைப் புகன்றுள்ளது.

'தனிமையில் ஓர் டயறி...' (பக்:44,45)

கஞ்சிக்கு அரிசி தந்த
வயல் வெளியின்
இன்றைய நிலை கண்டு
அழுகிறேன்.

இதேபோன்று தென்னை, பனை மரங்கள், மழைத்துளிகள், மண், கடற்கரை மணல், பாலை, இலந்தை மரங்கள், குயில், அணில், கொய்யா மரம், உருமாறிக்கிடக்கும் தெருக் களை நினைவுகூர்ந்து வைக்கும் முல்லைதிவ்யன் பிளாக்கணம் நெஞ்சைவருடுகிறது.

'வரப்போகிறானே மகன்' (பக்: 48,49)

கறிச்சட்டியிலிருந்து
பிரட்டியெடுத்த
சோற்றுக்கவளத்தை
ஊட்டி வளர்த்த
நாட்கள்...

கிராம வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறது வரிகள். இதுவும், அந்நாட்களே! இன்று கிராமங்களும் நகரங்களாகிவிட்டன.

'இங்கே' (பக்: 51,52)

கண்மூடிக்கிடக்கிறது
வயல்வெளி
குண்டடிபட்டுக் கிடக்கிறது
பலாமரம்!
அவ்விதம் மனம் வெதும்பும் கவிஞர்,
கூவையும்
கோட்டானுந்தான்
எஞ்சி வாழ்கின்றனவோ?

என்னும் வரிகளூடாக இடம் பெயர்ந்து சென்று திரும்புகையில் வாழ்விடங்கள் சயனித்துக் கிடந்ததைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

'போரினால் மரணித்த ஆத்மாவின் குரல்' (பக்:53,54), 'எங்கோ...' (பக்:56, 57) இன்னும் சில தலைப்புக்களில் இடம்பெயர்வால் இழந்துவிட்டனவை நினைந்து நெருடலுக்கு உள்ளாவதாக அமைந்துள்ளன.

அதேவேளை 'தமிழ்' என்னும் நாமம் முல்லைதிவ்யனை ரோஜா இதழாய் வருடுவதைச் சில வரிகளில் அனுபவிக்கவும் முடிந்தது. அநேக வரிகளில் படிமங்கள் அறவே கிடையாது. சிரமப்பட்டு உழைத்துச் செய்யும் கவிதைகள் நூறாண்டு காலங்கள் நிலைத்து நிற்கும்.

முயன்றால் முடியாததில்லை, முயற்சித்து உச்சத்தை தொட முல்லை திவ்யன் வாழ்த்துகள்.

தேவி பரமலிங்கம்.

---

# தொழில்நுட்பம்

## டுவிட்டரின் புதிய நிர்வாகி ஜோக் டோர்ஸ்சி

சமூக வலைத்தளங்களில் ஒன்றான டுவிட்டரின் தலைமை நிர்வாகியான டிக் கோஸ்ட்லோ பதவி விலகுகிறார்.

எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாததால், முதலீட்டாளர்களின் நெருக்கடி காரண-மாகவே கோஸ்ட்லோ பதவி விலகுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை 1ஆம் திகதி முதல், புதிய தலைமை நிர்வாகியாக, ஜோக் டோர்ஸ்சி பொறுப்பேற்கவுள்ளார்.

## அலாரம் வைத்தவரை எழுப்பும் கருவி கண்டுபிடிப்பு



இந்த புதுமையான அலாரக் கருவியின் பெயர் வேக். குறிப்பிட்ட பிரகாசமான ஒளியையும், சத்தத்தை யும் பயன்படுத்தி அலாரம் வைத்தவர் களை மட்டும் தனிப்பட்ட முறையில் இது எழுப்பும்.

உறங்குபவர்களின் தலைக்கு மேல் சுவற்றில் மாட்டிக்கொள்ளும் படி, அமைக்கப்பட்ட இது ஒவ்வொரு வரின் தனிப்பட்ட சன்ரைஸ்-சையும் உருவாக்கும்.

இது அல்ட்ரா சோனிக் அலை களை பயன்படுத்தி குறிப்பிட நபரை பின் தொடர்ந்து, ஏனையோரை தொந்தரவு செய்யாமல் அவரை மட்டும் எழுப்பும்.

இதன் அல்ட்ரா சோனிக் அலைகள் அலாரம் வைத்தவர்களின், செட் செய்யப் பட்ட உடல்வெப்பத்தை வைத்து உருண்டாலும் புரண்டாலும் பின் தொடரும்.

ரீசார்ஜாபில் பெட்டரிமூலம் இந்த கருவி இயங்கும். படுக்கையில் எந்த பக்கம் படுப்போம், எப்போது எழ விரும்பு கிறோம் என்பதை ஸ்மார்ட் போன் அப்பிளிக்கேஷன் மூலம் செட் செய்தால் போதும். மற்றபடி இதன் அலார சத்தமாக ரிங்டோன், பிடித்த பாடல்கள் என எதை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்.

## உணவுகளிலுள்ள கலோரியை கண்டுபிடிக்க வேண்டுமா?




கூகுள் நிறுவனத்தினால், மொபைல் சாதனங்களின் உதவியுடன் எடுக்கப்படும் புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு உணவுகளிலுள்ள கலோரிகளின் அளவை துல்லியமாக சொல்லக்கூடிய அப்பிளிக்கேன் ஒன்று அறிமுகப்படுத்தபடவுள்ளது.

Al எனப்படும் இந்த அப்பிளிக் கேஷன் முதலில் உணவின் வகையினை அறிந்து கொள்வதுடன் அதற்கு அடுத்தபடியாக உணவு வைக்கப்பட்டுள்ள பாத்திரத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு கலோரிகளின் அளவை கண்டறிகின்றது.

இதற்கு HD தரத்திலுள்ள புகைப்படங்கள் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். மேலும் உணவுகளின் கலோரிகளைக் கண்டறியும் ஏனைய அப்பிளிக்கேஷன்களை விடவும் இந்த அப்பிளிக்கேஷன் துல்லியம் வாய்ந்ததாகவும், வினைத்திறன் உடைய தாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தலை மாற்று அறுவை சிகிச்சை



இத்தாலியை சேர்ந்த செர்ஜியோ கனாவெரோ என்ற மருத்துவர் மனிதர்களின் தலை மாற்று அறுவை சிகிச்சைக்கான தொழில் நுட்பத்தை கண்டறிந்துள்ளதாக அறிவிப்பு வெளியிட்டார்.

அதில் தண்டு வடத்தையும் இணைக்க முடியும் எனக் கூறிய அவர் இரண்டு ஆண்டுகளில் இந்த சிகிச்சை சாத்தியப்படும் என அறிவித்தார்.

ஒருவரது தலையை மற்றொரு உடலில் பொருத்துவதே தலை மாற்று அறுவை சிகிச்சை ஆகும்.

இதனை அறிந்த 30 வயதான வலேரி ஸ்பிரிடோனோ தலை மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்வந்துள்ளார். தண்டு வடம் தசைகளை செயலிழக்க செய்யும் அரிய வகை நோயால் பாதிக்கப் பட்டுள்ள அவர் இந்த அறுவை சிகிச்சைக்கு முன்வந்துள்ளார்.

இந்நிலையில் தலை மாற்று அறுவை சிகிச்சையில் ஆபத்திருந்தாலும், 90 சத விகிதம் வெற்றியடையும் என மருத்துவர் கனாவெரோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த அறுவைச்சிகிச்சை வெற்றி அடைந்தால், மருத்துவ உலகில் மைல் கல்லாக அமையும் எனக் குறிப்பிடப் படுகிறது.

# உதிர்ந்த முடி



"காட்டித்தா உனக்கு
தேவையானதை கூட்டியே
தருகிறேன் என்றான்
வெள்ளைக் கொக்கு!

நாடு பிடிக்க வந்த
ஆங்கிலேயத் தளபதி!
உள்ஞரில் அவனைக்
காக்காய் பிடிக்கவும்
ஆளிருந்தார்கள்!

அவனது மொழியில்
தமக்குள்ள புலமையை
புளுகிப் புளுகியே
கூனி நின்றது கூட்டம் ஒன்று!

"ஆளப் பிறந்தவர்கள் நீங்கள்
ஆளப்பட வேண்டியவர்கள்
நாங்கள்!" கோழைகள்
கூவினார்கள்!

"அந்நியன் புகுவதோ
அடிமையாய் வாழ்வதோ?
தாயிற் சிறந்த பூமியை
நாயிற் கேடாய் மிதிப்பதை
சேய்கள் நாங்கள்
பொறுப்பதோ?"
என்று சினந்தனர் மறவர்கள்.

கௌரவத் தளபதிக்கு வணக்கம்
கர்வம் பிடித்த கூட்டம்
கர்ஜிக்கிறது!

ஆங்கிலேயப் படையின்
ஆங்காரம் புரியாமல்
நம்நாட்டு சிறியோர் வம்புக்கு
கிளம்புகின்றனர்!

எங்களிடம் அதிகாரத்தை
கொடுங்கள் ஐயா தங்களுக்கு
வேலையின்றி தலை
சீவித் தருகிறோம்!

அடிமைக் குணத்தார் சேவகம்
செய்ய அடிபணிந்து
விண்ணப்பித்தனர்!
வெள்ளைத் தள்பதியின்
பூனைக் கண்கள்
கள்ளமாய் சிரித்தன!

மதுக்கோப்பைக்குள்
ஐஸ்கட்டிகள் மிதந்தன!
சூப்பிச் சூப்பி குடிப்பதைக் காண
கைகூப்பிய அடிமைகளுக்கும்
நாவில் ஈரம் சுரந்தது!

"வெள்ளிக் காசுக்கு விலை
போகாதவர்களே கிடையாதா?
மதுபோதையிலும் யோசித்தான்!
தேவனையே வெள்ளிக்காசுக்கு
விலைபேசிய உலகத்தில்,
விடுதலை வீரர்களை விலை
கூறவா தயங்குவர்?"
எண்ணி வருந்தினான்!

"அருமைமிகு தேசமே!
உன் புத்திரர் சிலர்
எருமையிலும் கேடாய்
உணர்ச்சியற்று பிறந்துள்ளனர்!
இதனால் எங்களுக்கு இலாபம்
உனக்குத்தான் நஷ்டம்
வெள்ளைத் தளபதி
மனதுக்குள் கூறினான்!

இங்கிலாந்திலிருந்து கப்பலில்
வந்தனர் கட்டழகிகள்!
காட்டிக் கொடுப்போருக்கு
கண்ணுக்கினிய கட்டழகிகள்!



இறக்குமதி செய்யப்பட்டோர்
உலுத்தர்களின் மதியை
இறக்குமாறு செய்தனர்!

வெள்ளைத் தோலை
விரல்களால் வருடி தம்மை
மறந்தவர் விளையாடித்
தீர்த்தனர். கப்பலில் வந்த
புட்டிகளும், குட்டிகளும்
சுதேசிகளின் மூளையைச்
சலவை செய்தன!

இதுவன்றோ ஆட்சி!
இதுவன்றோ மாட்சி!
வெள்ளைக் கொக்குகளை
வாயாரப் புகழ்ந்தனர்.
தனியொரு படையாக
பணிவாக இயங்குக!
கிளர்ச்சி செய்வோரின்
கொட்டத்தை அடக்குக!"

வெள்ளைத் தளபதி
விடுத்தான் கட்டளை!
காட்டிக் கொடுப்போருக்கு
நாட்டில் வேட்டையாட
நல்லதொரு சந்தர்ப்பம்!

பிரித்தாள்வதும் உடன்
பிறந்தாரையே உள்ளேயே
மோதவிடுவதும், வலைவீசி
ஆள்பிடிப்பதும்
எலும்புத்துண்டுகளால்
அடிமைகளை வளர்ப்பதும்
வெள்ளையனுக்கு
கைவந்த கலை!

எதிரியின் ஜாலம் புரியாமல்
உதிரிகள் ஆடினார்கள்!
சொந்த மக்களின்
சுதந்திர எழுச்சியை
மந்தமாக்கி நசுக்கினார்கள்!
தன்மான உணர்ச்சியை
தணிக்க முன்னின்றார்கள்!
இறுதியில் மறவர்கள்
தோல்வியைத் தழுவினர்!

எஞ்சியோர் மறுபடி
போராடப் பதுங்கினர்!

தற்காலிக வெற்றி
அந்நியப் படைக்கு!
செய்தியை அறிந்த
ஆங்கிலேயத் தளபதிக்கு
விழிகள் கலங்கின!

அவனது கைகளில் புரண்ட
காதலி கேட்டாள் இது என்ன
அன்பே ஆனந்தக் கண்ணீரா?
வெள்ளைத் தளபதி
தலையசைத்து மறுத்தான்

'ஆதங்கக் கண்ணீர்'
என்று உரைத்தான்
வீரர்கள் பிறந்த மண்ணில்
வீணர்கள் தன்மானம்
இழக்காது
வெஞ்சமர் புரிந்தவர்கள்!

"அவர்கள் வீழ்ந்தாலும்
வாழ்பவர்கள்! இவர்களோ
வாழ்ந்தாலும் வீழ்ந்தவர்கள்"

"அவர்கள் முடி இழந்தால்
உயிர்வாழா கவரிமான்கள்!
இவர்களோ உதிர்ந்த
முடிகளாகவே வாழ்பவர்கள்!"

தளபதியின் விளக்கம்
அவளுக்கு
சிலிர்ப்பாகவிருந்தது.

உதிர்ந்த முடி
உதிர்ந்த முடி
என்று அவள்
உதடுகள் கூறிப் பார்த்தன
திருவள்ளுவரும்
இழிந்த மனிதருக்கு
உதிர்ந்த மயிரைத்தான்
உவமையாகக் கூறுகிறார்.

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

*அதிகாரம்: 97 - பாடல்: 964*

---




**✪ சிந்தியா 20ஆவது சட்ட திருத்தம் சிறுபான்மையின மக்களுக்கு நன்மை பயக்குமா?**

எம்.நீதன், யாழ்ப்பாணம்.

அனைத்து சிறுபான்மை கட்சிகளுமே புதிய தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை எதிர்க்கின்றன. இறுதியாக அமைச்சரவை பரிந்துரை செய்திருக்கும். திருத்த யோசனையானது, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழர்களது மட்டுமல்லாமல் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளை மறுப்பதாகவும், ஏற்கெனவே இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை குறைப்புச் செய்வதாகவும் இருக்கின்ற தாம். அப்படி என்றால் புதிய தேர்தல் திருத்தச் சட்டப் பரிந்துரை சிறுபான்மை யினக்கு பாதகமானதுதானே.

**✪ எவரும் பிரதமராகலாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால கூறுகிறாரே?**

என்.அஸ்வர், கதிர்காமம்.

அதாவது தேர்தல் ஒன்று நடைபெற்று புதிய அரசாங்கம் வருகின்றபோது அதிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முக்கியத்துவம் வழங்கி ரணில் விக்ரமசிங்கவையே பிரதமராக்குவதாக எந்தவித ஒப்பந்தமும் அவர்களுடன் செய்து கொள்ளவில்லை என்று கூறியிருக்கும் ஜனாதிபதி, தேர்தலில் பெரும்பான்மையாக வெற்றி பெறும் கட்சியினர், அல்லது கூட்டுச்சேரும் கட்சி யினர் தமக்குள் யாரை பிரதமராக நியமிக் கின்றார்களோ அவர்களே பிரதமராக இருக்கலாம் என்று கூறியுள்ளார். அவர் இப்படி கூறியதே முன்னாள் ஜனாதிபதியை சில கட்சிகள் சேர்ந்து பிரதமராக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை உணர்த்துவதற்காகத்தான் என்றும் சிலர் கூறுகின்றார்கள்.

**✪ லண்டனில் கூட்டமைப்பு இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியதாமே சிந்தியா?**

கா.நடராஜா, தம்பலகாமம்.


கூட்டமைப்பு இரகசியப் பேச்சுக்கள் எதையும் நடத்தவில்லை. கூட்டமைப் பின் தலைவர் சம்மந்தனின் வழிகாட்டலில் சுமந்திரன் தமிழ்த் தேசிய இனத்தின் நாளைய விடியலுக்காக நடத்திய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இரகசியப் பேச்சு வார்த்தை அது. எனக்கு ஒரு விடயம்தான் புரியவில்லை. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு நிறைவேற்றவேண்டிய உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதங்களை எவ்வாறு நீக்குவது மற்றும் அப்பகுதிகளில் புலம் பெயர் அமைப்புக்களின் உதவிகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது போன்ற விடயங்களையும் ஆராய்ந்ததாக சுமந்திரனே குறிப்பிட்டிருக்கின்றார். இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக கூட்டமைப் பிலுள்ள ஏனைய கட்சிகளுக்கே தெளிவு படுத்தாமல் இரகசியமாக நடத்தியிருக் கின்றார். அதில்தான் என்ன இலாபம் இருந்திருக்கின்றது என்பதில் சக கட்சிகள் குழம்பிப்போய் இருக்கின்றன.

இந்த இரகசிய பேச்சுவார்த்தைகளை சாதாரண தமிழ் மக்களால் புரிந்துகொள்ள முடியாது. தன்மானமுள்ள தமிழ் மக்களால் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும்.

**✪ வரும் நாடாளுமன்றத் தேர்தல் கூட்டமைப்புக்கு எவ்வாறு அமையப் போகிறது?**

எம்.ஜாவிதா, மன்னார்.

அப்போது அரசாங்கம் ஏமாற்றியிருக்கும், மைத்திரிபாலவும், மகிந்தவும் ஒரே குட்டை யில் ஊறிய மட்டைகள் என்ற வார்த்தை தமிழ் மக்களுக்கு ஈர்ப்புக்குரியதாக இருக்கும், சர்வதேச சமூகம் தற்போது கூட்டமைப்புக்குள்ளே ஒற்றுமையைப் பற்றி பேசாது இருந்துவிட்டு தேர்தல் வேளையில் கூட்டமைப்பையும் ஒற்றுமைப்படும்படியும், தமிழ் மக்களை ஒற்றுமையாக வாக்களிக்கு மாறும் கூறி தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்கின்றார்கள் என்பதை உன்னிப்பாக உற்றுப்பார்த்துக் கொண்டிருப்ப தாக கூட்டமைப்பு கூறுவதை தன்மானமுள்ள தமிழர்கள் அப்படியே நம்பி கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள். இதெல்லாம் மாறாது என்ற நிலையில் உங்களுக்கு ஏன் அநாவசியமான கவலை?



**✪ பவ்வியமாக நடந்துகொண்டு குழிபறிக்கிறார்களே சிலர். இவர் களுக்கு பாடம் புகட்ட என்ன செய்ய வேண்டும்?**

ப.பிந்துஜா, கொடிகாமம்.

அது தெரிந்தால் பலர் தப்பித்துக் கொள்வார்களே. அவர்களை வெட்கித் தலைகுனியச் செய்தால் அதுவே அவர்களுக்கு மரண அடியாக அமையும். அவர்கள் அளவுக்கு நீங்களும் இறங்கி அவர்களுக்கு பாடம் புகட்ட முயற்சிக்காதீர்கள். அவர்கள் பாவத்தை சேமித்துக் கொண்டிருக்கும் பாவிகள். நீங்கள் உங்கள் மேன்மையை கைவிடாதவரை பாவிகளின் குழிபறிப்புக்களால் பெரிய பாதிப்பு உங்களுக்கு வரப்போவதில்லை.

**✪ டெஸ்ட் கிரிக்கெட்டின் ராஜா நான்தான் என்கிறாரே கிறிஸ் கெய்ல்?**

த.பிரஜீன், நுவரெலியா.

அவரே கூறாமல் வேறு யாராவது கூறியிருந்தால் அது கெயிலுக்கு கௌரவமாக இருந்திருக்கும்.

**✪ காக்கா முட்டை படம் எப்படியிருக்கின்றது சிந்தியா?**

வ.சயந்தன், யாழ்ப்பாணம்.

ஒருவேளை உணவுக்கே கஸ்டப் படும் சிறுவர்கள் இருவர் பீட்ஸா உணவை உண்பதற்கு ஆசைப்படுகின்றார்கள். தமது ஆசையை நிறைவேற்றிக் கொள் வதற்காக அவர்கள் தம்மளவில் எப்படி யெல்லாம் முயற்சிக்கின்றார்கள் என்பதைச் சுற்றியதாகவே படம் போகின்றது. ஐஸ்வர் யாவின் யதார்த்தமான தோற்றமும் நடிப்பும், அரிதாரத்தையும், மேக்கப்புக் களையும் நம்பி திரையில் உலாவரும் நடிகைகளுக்கு சிந்தனைக்குரியது. இயல்பான சினிமாக்களை எடுத்து விருதுகளை வாங்கியுள்ள இயக்குநர் மணிகண்டன் காக்கா முட்டை படத்தையும் இயல்பாக கதாபாத்திரங்களை நடிக்கச் செய்துள்ளார். ஜீ.வி.பிரகாஷின் இசைக்கு புதுமெருகுகூட்டியிருப்பதை காக்கா முட்டையில் ரசிக்கலாம்.

காக்கா முட்டை திரையிடப்பட்டு இரண்டு நாட்களிலேயே இந்தியாவில் 2.4 கோடி ரூபாய்களை வசூலித்துக் கொடுத்துள்ளதால் விநியோகஸ்தர்களும் மகிழ்ச்சியில் இருக்கின்றார்கள். படம் வெற்றிபெறுவதற்கு பெரிய நடிகர்கள் அல்லது பேய்க்கதை என்று சினிமா போகின்றபோது காக்கா முட்டை போன்ற படங்கள் வரவேற்பைப் பெறுகின்றது. மகிழ்ச்சிக்குரியதுதானே.

# காற்றலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ. ஜனாதிபதி மைத்திரிபாலவை நல்லவர், வல்லவர் பெண்டு எடுக்கிறதில கெட்டிக்காரர் எண்டெல்லாம் கூறியவர்கள் இப்போது சீழயை மாற்றிப் போடுகினமுங்கோ.**

ஜே.வி.பிக்காரர் என்ன சொல்லினம் தெரியுமோ, மைத்திரிக்கும் மகிந்தவைப் போல் அதிகார ஆசை பிடிச்சுட்டு தாமுங்கோ. அதாலைதான் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி நாடாளுமன்றத்தைக் கலைக்காமல், எதிர்க்கட்சியில இருக்கிற முன்னாள் அமைச்சர்களுக்கு இப்போதும் அமைச்சுக்கள் கொடுத்து தற்போதைய குழப்பமான நிலைமையை தொடரச்செய்யிறார் எண்டு சொல்லியிருக்கின முங்கோ.

ஹெல உறுமயக்காரர் என்ன சொல்லினம் தெரியுமோ, ஆட்சிபுரியும் ஐக்கிய தேசியக் கட்சியினர் முன் வைத்திருக்கும் புதிய தேர்தல் திருத்தச் சட்டமூலமானது சிறுபான்மை மக்களுக்கு பாதகமானதாம்.

கூட்டமைப்புக்காரர் என்ன சொல்லினம் தெரியுமோ, நல்லாட்சியிலையும் தமிழ் மக்களுக்கு எந்த பயனும் இல்லையாமுங்கோ. புதிய தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை அரசு நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்க முடியாதாமுங்கோ.

அமைச்சர் ரிசாட் தலைமையிலான கட்சிக்காரர் புதிய அரசோடு தேனிலவு கசந்துபோய் இருக்கினமாமுங்கோ. அவை இப்ப கூறுகின்ற கதைகளைப் பார்த்தால் மைத்திரிபாலவை விடவும் மகிந்த பரவாயில்லை என்றவாறாக இருக்கின்றது என்று பார்வையாளர்கள் சொல்லினமாமுங்கோ.

அதுமட்டுமில்லையுங்கோ புதிய அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இப்போது நூறு நாட்கள் திட்டத்தை ஆரம்பிக்கினமாமுங்கோ. நாடாளுமன்றத்தை கலைக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை எண்டதாலை, ஐக்கிய தேசியக் கட்சியை மேலும் மேலும் பலவீனப்படுத்தும் வேலையை எதிர்கள் ஆரம்பித்துள்ளார்களாமுங்கோ.

நாடாளுமன்றத்தை உடனடியாக கலைக்காதுவிட்டால் இந்த நல்லாட்சி அரசாங்கத்தை மேலும் கொண்டு நடத்துவது ரொம்பச் சிக்கலாகி விடுமாமுங்கோ. காலியான கஜானாவை வைத்துக்கொண்டு சில அரச பணியாளர்களுக்கு சம்பளத்தைக் கொடுப்பதே கஷ்டமாக இருக்குதாமுங்கோ.

உந்தப் பாதிப்பில பாதுகாப்போடு தொடர்புபட்ட சில பிரிவுகள்தான் பாதிப்புக்களை எதிர்கொண்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் சொல்லினமுங்கோ.

இந்த அரசாங்கம் சிறுபான்மைக் கட்சிகளின் முன்மொழிவுகளை முழுமையாக உள்வாங்காமல் புதிய தேர்தல் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடுமாக இருந்தால் அதை வெற்றிபெற வைப்பது சிரமம் எண்ட நிலைமையும் ஜனாதிபதிக்கு புதிய தலையிடியாக மாறியிருக்குதாமுங்கோ.

புதியதாக ஜனாதிபதிக்கு ஆலோசனை சொல்வதற்கு நியமிக்கப் பட்டுள்ள முன்னாள் பிரதமர்கள் இருவரும் எந்தளவுக்கு ஜனாதிபதிக்கு முற்போக்கான ஆலோசனைகளை சொல்லப்போகினமோ எண்டதையும் விமர்சகர்கள் யோசிக்கினமுங்கோ.

அவர்களில ஜெயரத்தின கொஞ்சமாவது தமிழ் மக்களோடு பழகியவர், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை புரிந்துகொண்டிருந்தவர். மற்றவர் ரத்தினசிறியோ, கடும்போக்குவாதி. அவர் முன்னைய ஆட்சிக்காலத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது கடுமையான தீர்மானங்களை எடுத்தவர் என்ற விமர்சனம் தமிழ் மக்களிடையே இருக்கின்றது.

இந்த நிலையில் இவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எவ்விதமான ஆலோசனைகளை ஜனாதிபதிக்கு வழங்கப்போகின்றார்கள் என்பதும், ஜனாதிபதியின் எதிர்கால தீர்மானங்களில் இவர்களின் ஆலோசனைகள் எவ்வாறான பிரதிபலிப்பைக் கொண்டிருக்கப்போகின்றது என்பதை காலம்தான் தெளிவுபடுத்தப்போகின்றது.

புதிய தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பாக பிரதமரோடு கலந்துரையாடப் போவதாக நல்லாட்சியின் முக்கிய பங்காளியான மனோகணேசன் கட்சியும் கொந்தளித்துப்போயுள்ளது.

இந்த நிலையில் புதிய அரசாங்கம் தொடர்பாக மக்கள் மத்தியில் ஏற்படுத் தப்பட்ட பிரசாரங்கள் இப்போது பலவீனமடையத் தொடங்கிவிட்டுள்ளது. இருபதாவது திருத்தச் சட்டம் என்ற விவகாரமானது ஜனாதிபதியாலும், ஐக்கிய தேசியக் கட்சியினராலும் நிதானமாக முன்னெடுக்கப்படாவிட்டால் மகிந்தவுக்கு எதிராக வீசிய பூமராங் திரும்பி வீசியவர்களையே தாக்குகின்ற அபாயம் ஏற்படலாம்.


ஏனென்றால் கல்வி அமைச்சர் அண்மையில் கூறிய கருத்தானது நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களை அவமதிப்பதாக அமைந்ததோடு, ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளது. அதாவது புதிய தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் சிறுபான்மை மக்களின் ஆதரவு இல்லாமலே பெரும்பான்மை மக்களான சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சியை அமைக்கமுடியும் என்று கூறியிருந்தார்.

அவ்வாறெனின் புதிய தேர்தல் முறைமையில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் குறைந்துவிடும் என்பதும், மத்தியில் பேரம்பேசும் அரசியலை முன்னெடுக்க முடியாத இனங்களாகவே சிறுபான்மை மக்கள் இருக்கநேரிடும் என்பதும் உறுதியாகிவிடும் என்ற ஆபத்து புதிய அரசியல் திருத்தத்தில் உள்ளது.

இந்த நிலையில் இந்த அரசாங்கமும் சிறுபான்மை மக்களை கணக்கில் எடுக்காமல், அரசியல் ரீதியாக முடக்கிப் போடவே முயற்சிக்கின்றதா? ஆயுதம் இல்லாமல், படுகொலைகள் இல்லாமல், குண்டுகள் வெடிக்காமல் சிறுபான்மை மக்களுக்கு எதிரான சதியா இருபதாவது தேர்தல் திருத்தச் சட்டம் என்ற சந்தேகம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே எழத் தொடங்கியுள்ளது. என்னங்கோ பானையிலிருந்து நாம் அடுப்பில் விழுந்துவிட்டோமா? சொல்லுங்கோவன்.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

## வரலாறு படைத்த வல்லுநர்கள் — மரண பயத்தை ஒழித்த மருத்துவர்



ஜெர்மனியத் தயாரிப்பான க்ரியோசோட் என்னும் திரவ நிலையிலுள்ள அதை அவருக்குக் கொடுத்தார். மார்ச் மாதம் தன் மருத்துவமனையில் அதைத் தன் நோயாளி ஒருவருக்குப் பயன்படுத்தினார் லிஸ்டர்.

அன்றிரவே அவர் இடிந்துபோய் வீடு வந்ததைக் கண்டாள் அவர் மனைவி அக்னஸ். ஆராய்ச்சி தோல்வி என்பதை அவர் தோற்றத்திலிருந்தே புரிந்துகொண்டாள். நோயாளி இறந்துவிட்டார். 'புதிய முறை' என்று சமாதானப் படுத்திக்கொண்டார்.

"நானும் தவறுகள் செய்திருக்கலாம்!" 'வெற்றி கிடைக்கும். தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்' என்று ஊக்கமூட்டினாள் மனைவி. ஐந்து மாதங்களுக்குப் பிறகு ஓகஸ்ட் 12ஆம் திகதி, மீண்டும் அந்த விஷமுறிவுப் பொருளைப் பயன்படுத்தத் தீர்மானித்தார். கிளாஸ்கோவைச் சேர்ந்த பதினொரு வயதுடைய ஒரு குறும்புக்காரச் பையனை அவருடைய வார்ட்டுக்குக் கொண்டு வந்தார்கள். வண்டிச் சக்கரம் ஏறி அந்தப் பையனின் இடது கால் எலும்பு முறிந்திருந்தது. விரைவில் அக்காயத்தில் விஷம் பரவும் என்பதை அறிந்தார் லிஸ்டர்.

(முற்றும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

**(18.06.2015 தொடக்கம் 24.06.2015 வரை)**

### மேடம்

பயணங்களின்போது வாகனங்களில் எச்சரிக்கையுடன் சென்றுவருதல் உகந்ததாகும். தந்தை-மகன் உறவில் சுமூகமான சூழல் உருவாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகுந்த கவனமுடன் பேசிப்பழகுதல் நல்லது. நீண்டகாலமாக வரவேண்டிய பணம் கை வந்து சேரும் காலமாகும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் சற்று குறைய வாய்ப்பு உள்ளது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எண்ணுவீர்கள். உடம்பில் வாயு வாதம் போன்ற தொல்லைகள் வந்துநீங்கும். வீடுகளைத் திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

### இடபம்

கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். பழைய கடன்கள் அடைத்துப் புதிய கடன்வாங்குவீர்கள். உற்றார், உறவினர்களின் வரவுகளால் மன மகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். வங்கிகள்மூலம் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். உடம்பில் எலும்பு மற்றும் நரம்பு சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகும். மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களை பெறுவார்கள். விளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் கவனமுடன் இருக்கவும். குடும்பத்தில் தடைப்பட்டு இருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடிய காலமாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மிதுனம்

தொலைதூரப் பயணங்கள்மூலம் எதிர்பார்த்து இருந்தவர்களை சந்தித்து அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். குழந்தைகளுக்காகத் திடீர் மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பணப்புழக்கம் சுமாராகக் காணப்படும். உற்றார், உறவினர்களால் ஆதாயம் இல்லை. நாட்பட்ட வரவேண்டிய பணம் கைக்கு வந்துசேரும். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. புதிய நண்பர்களின் வீண் பிரச்சினைகள் ஏற்படலாம். தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனநிம்மதி குறையலாம். பொது நலத் தொண்டுகளில் ஈடுபட்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள்.

### கடகம்

குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ள காலமாகும். குடும்பத்தில் காரணமற்ற மனக்குழப்பங்களும் மற்றும் கடன் தொல்லைகளும் ஏற்படலாம். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் வந்துசேரும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த தொல்லைகள் குறைந்து காணப்படும். பழுதுபட்ட வீடு மற்றும் வாகனங்களை புதுப்பிப்பதன்மூலம் பொருட்செலவுகள் வந்துசேரும். உடம்பில் நரம்பு மற்றும் எலும்புகள் போன்ற உபாதைகள் வந்துபோகும். மற்றவர்களை நம்பிப் பணம், பொருட்கள் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம்.

### சிங்கம்

தேவையற்ற மனச்சஞ்சலம் தவிர்த்தல் நல்லதாகும். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் கை வந்துசேரும். மற்றவர்களின் காரியங்களில் அநாவசியமாகத் தலையிட்டு மனநிம்மதியை இழக்காதீர்கள். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் ஒன்றுசேர வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காகப் புதிய கடன்களை வாங்க முயற்சிப்பீர்கள். உடல்நிலையில் காய்ச்சல் மற்றும் உஷ்ண சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகலாம். கண்களில் கவனமுடன் இருக்கவும்.

### கன்னி

குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்கள் நிறைவேறும். புதிய ஆடை, அணிகலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்க முயற்சிப்பீர்கள். நாட்பட்ட பழுதுபட்ட ஆலயங்களைத் திருத்திக் கட்டும் முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். பூர்வீகச் சொத்து விசயமான பிரச்சினைகள்தீர இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். ஆதரவற்ற ஏழைகளுக்கு உதவுவதின்மூலம் மனநிம்மதியும் பொதுமக்களின் பாராட்டுக்களையும் பெறுவீர்கள். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

### துலாம்

வெகுநாட்களாகத் தடைப்பட்டுவந்த திருமண காரியங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ள காலமாகும். நாட்பட்ட வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்ப கைக்கு வந்துசேரும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத ஆதாயங்கள் உண்டாகும். நண்பர்களின் சுபகாரிய விசயங்களுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். கணவன், மனைவியின் உறவுகள் சுமாராகக் காணப்படும். செய்யாத குற்றங்களுக்காகப் பழிச்சொல் ஏற்பட இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் சற்றுக் குறையும்.

### விருச்சிகம்

பெண்களால் தென்கிழக்குத் திசையில் இருந்து எதிர்பாராத தனவரத்து உண்டாகும். வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப கிடைக்கும். உற்றார், உறவினர்களால் ஆதாயம் இல்லை. காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லதாகும். உத்தியோகத்தில் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் ஏற்படலாம். நண்பர்களால் எதிர்பாராத பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். உடம்பில் வாயு மற்றும் வாத சம்பந்தமான பிணிகள் வந்துபோகலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### தனுசு

நாட்பட்ட தீராத நோய்க்குப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடிச் செல்லுவீர்கள். வெகுகாலமாக விட்டுப்போன குலதெய்வ வழிபாடு செய்வதற்கும், தாய்நாடு சென்று திரும்புவதற்கும் வாய்ப்பு உள்ளது. குலதெய்வ வழிபாடு செய்துவருவீர்கள். கணவன், மனைவி உறவுகளில் சற்று எச்சரிக்கையுடன் முன்கோபத்தை தவிர்த்து இருப்பது நல்லதாகும். வரவேண்டிய கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் ஆதாயம் உண்டு. காதலர்களுக்கு நல்ல செய்தி வந்துசேரும்.

### மகரம்

புதிய ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதன் மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவரப் போட்ட எண்ணங்கள் நிறைவேறும் காலமாகும். உத்தியோகத்துறையினர்கள் மேலதிகாரிகளிடம் மிகுந்த கவனமுடன் பணியாற்றுதல் நல்லது. உத்தியோகத்தில் வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகள் கிடைக்கக்கூடிய காலமாகும்.

### கும்பம்

சூதாட்டம் போன்ற விசயங்களில் பணம், பொருள் கிடைக்கும் என்று எண்ணி ஏமாற்றம் அடையவேண்டாம். வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல செய்திகள் கிடைக்கும். தந்தைக்கு ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் சற்றுக் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் தடைப்பட்ட திருமண காரியங்களில் நண்பர்களின் உதவியால் நடைபெறலாம். தேவையற்ற மனச்சஞ்சலம் தவிர்த்து ஆலயங்களுக்குச் சென்றுவருவது நல்லது. பிள்ளைகளால் பொருட்செலவுகளும் மனநிம்மதியும் குறைய இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை.

### மீனம்

காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். பொது நலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயரும், மனநிம்மதியும் அடைவீர்கள். கணவன், மனைவி உறவுகளில் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்துவிலகும். உற்றார், உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். சுபகாரிய சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. பழுதுபட்ட வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதன்மூலமாக பொருட்செலவுகள் உண்டாகும். சொத்து வழக்கு விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும் காலமாகும். நோய் காரணமாக பொருட்செலவுகள் உண்டாகலாம். இது சந்தோசமான வாரமாகும்.

**Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)**

## பதினாறும் பெற்று... இது கொஞ்சம் கூடிற்று





பிரிட்டன் நாட்டில் கடந்த வாரம் 18ஆவது குழந்தையை பெற்றெடுத்த தாய், தனது குடும்பத்தை அந்நாட்டின் மிகப்பெரிய குடும்பமாக உருவெடுக்கத் வைத்துள்ளார்.

ஹேஸ்லி ஆல்பியா பியு என பெயரிடப்பட்டுள்ள அந்த பெண் குழந்தையின் புகைப்படத்தை, குழந்தையின் தாய் சுவ் ரோட்போர்ட் (வயது 39), தந்தை நோயல் (43) ஆகியோர் ஒன்லைனில் பதிவேற்றம் செய்து மகிழ்ந்துள்ளனர்.

கடந்த ஆண்டில் தனக்கு பிறந்த குழந்தை இறந்துவிட்டதால் பயத்தில் இருந்த சுவ், ஹேஸ்லி எவ்வித சிக்கலும் இன்றி பிறந்ததால் நிம்மதியடைந்துள்ளார். பதினான்கு வயதில் தனது முதல் குழந்தையான கிரிஸ்சை பெற்றெடுத்த சுவ், தற்போது 18ஆவது குழந்தையை பெற்றெடுத்ததால் அவரது குடும்பத்தினர் அனைவரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

கிரிஸ்சுக்கு தற்போது 25 வயது ஆகும் நிலையில், இத்தம்பதிக்கு 19 வயதில் க்ளோ, 17 வயதில் ஜேக், 15 வயதில் டேனியல், 14 வயதில் லூக், 13 வயதில் மில்லி, 12 வயதில் கேட்டி, 11 வயதில் ஜேம்ஸ், 9 வயதில் எல்லி, 8 வயதில் எய்மி, 7 வயதில் ஜோஷ், 6 வயதில் மேக்ஸ், 4 வயதில் டில்லி, 3 வயதில் ஒஸ்கார், 2 வயதில் கேஸ்பர் ஆகிய குழந்தைகளும் உள்ளனர். தங்களது 18ஆவது குழந்தையோடு, குழந்தை பெற்றுக்கொள்வதை நிறுத்தப்போவதாக கடந்த ஆண்டு கூறிய சுவ், தற்போது அடுத்த குழந்தையையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருப்பதாக கூறியுள்ளார்.

## கடின உழைப்பின் பயன்



ஒருவர் மிகவும் கஷ்டப்பட்டு சில வருடங்களில் கட்டிய வீட்டின் ஒவ்வொரு செங்கலிலும், அதை கட்டிய நபர் உயிர்வாழ்வதாகக் கூறுவார்கள். அமெரிக்காவின் மின்னசோட்டா மாநிலத்தில் உள்ள லொறி ஸ்வெட்பெர்க் என்ற பெண்ணோ, 35 வருடங்களாக ஒவ்வொரு கல்லாக இழைத்து இழைத்து ஒரு இயற்கை வீட்டை உருவாக்கியுள்ளார்.

இந்த வீடுகட்டுவதற்காக செயற்கையான எந்தப் பொருளையும் உபயோகிக்காமல் கருங்கற்கள், மொசைக்கற்களின் துண்டுகள் என்று இயற்கையாகக் கிடைக்கக் கூடிய பொருட்களை சேகரித்து க்ளோ கன் எனப்படும் பசை ஒட்டும் இயந்திரத்தின் உதவியுடன் அந்த துண்டுகளை ஒவ்வொன்றாக ஒட்டி இந்த வீட்டை உருவாக்கியுள்ளார். இதற்கு அவருக்கு 35 வருடம் தேவைப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வளவு சிரமப்பட்டு கட்டிய வீட்டில் வசிக்கப் போவதில்லை. ஓய்வுக் காலத்தை கலிபோர்னியாவில் கழிக்க இருப்பதால் இந்த வீட்டை 149,000 இடாலருக்கு (ரூ.95 இலட்சம்) விற்க உள்ளார்.

## இஞ்சி இடுப்பழகி

வெனிசுலா நாட்டைச் சேர்ந்த மாடல் அழகியான அலிரா அவெண்டானோ(25) பிடியிடையாள் ஆக மாற விரும்பி கடந்த ஆறாண்டுகளுக்கும் மேலாக ஒரு நாளின் 23 மணி நேரம் அதற்கான விசேஷ கச்சையை பயன்படுத்தி, தனது முயற்சியில் வெற்றியும் பெற்றுள்ளார். குளிக்கும்போது மட்டும் இந்த கச்சையை சுமார் ஒரு மணிநேரத்துக்கு அகற்றி வைக்கும் இவர், இடைவிடாத தொடர் முயற்சியின் விளைவாக முன்னழகை பிரமாண்டப்படுத்தி இடையின் அளவை 20 அங்குலங்களாக குறைத்து, பார்ப்போரை பரவசத்தில் ஆழ்த்துகின்றார்.

தொடர்ந்து இதைப்போன்ற கச்சையை பயன்படுத்துவது, உயிருக்கேகூட ஆபத்தாக முடிந்துவிடும் எனக் குறிப்பிடும் பிரபல டாக்டர்கள், நல்லவேளையாக இவருக்கு இதுவரை ஒன்றும் நேரவில்லையே என நிம்மதி பெருமூச்சும் விடுகின்றனர்.

டாக்டர்கள் நிம்மதி பெருமூச்சுவிட்டாலும், தனது இஞ்சி இடுப்பை ஆட்டி, தலுக்கி, குலுக்கி இவர் வீதி உலாபோகும் வேளையில் பொடிசுகள் முதல் பெரிசுகள்வரை ஆயிரக்கணக்கான ஆண்கள் ஏக்கப் பெருமூச்சும்




டாக்டர்கள் நிம்மதி பெருமூச்சுவிட்டாலும், தனது இஞ்சி இடுப்பை ஆட்டி, தலுக்கி, குலுக்கி இவர் வீதி உலாபோகும் வேளையில் பொடிசுகள் முதல் பெரிசுகள்வரை ஆயிரக்கணக்கான ஆண்கள் ஏக்கப் பெருமூச்சும் விடுகின்றனர்.

# இஞ்சி இடுப்பழகி



கருங்கற்கள், மொசைக்கற்களின் துண்டுகள் என்று இயற்கை... கூடிய பொருட்களை சேகரித்து க்ளோ கன் எனப்படும் பசை ஒட்டும் இயந்திரத்தின் உதவியுடன் அந்த துண்டுகளை ஒவ்வொன்றாக ஒட்டி இந்த வீட்டை உருவாக்கியுள்ளார். இதற்கு அவருக்கு 35 வருடம் தேவைப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வளவு சிரமப்பட்டு கட்டிய வீட்டில் வசிக்கப் போவதில்லை. ஓய்வுக் காலத்தை கலிபோர்னியாவில் கழிக்க இருப்பதால் இந்த வீட்டை 149,000 இடாலருக்கு (ரூ.95 இலட்சம்) விற்க உள்ளார்.





# அதிர்ச்சி

சூரத் நகரில் கடந்த 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் ஒரு ஏழை தம்பதிக்கு ஒரு வித்தியாசமான குழந்தை பிறந்தது. அந்த குழந்தையை பார்த்து மருத்துவர்களும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

அதாவது சிவப்பு நிறத்தில், கண்கள் பெரிதாக, அவை தலையின் மேற்பகுதியில் ஒட்டியவாறு வேற்றுக்கிரகவாசியின் குட்டிபோல அந்த குழந்தை காட்சியளித்தது. சிலதினங்களில் இதுதொடர்பான படங்கள் சமூகவலைதளங்களிலும், பத்திரிகை களிலும் பரவியது.

இந்நிலையில் இதற்கான காரணத்தை மருத்துவர்கள் கண்டறிந்தனர். அந்த குழந்தை ஒரு அரியவகை நோயினால் பாதிக்கப்பட்டது தெரியவந்தது.

அந்த குழந்தை Harlequin - type ichthyosis தாக்கப்பட்டிருந்தது. இந்த அரியவகை நோய் தாக்கப்பட்டால் உடலின் தோல்கள் அனைத்தும் பாதிக்கப்படும். இந்த நோய்வந்தால் அந்த குழந்தை உயிர்பிழைப்பது எளிதான காரியம் இல்லை. ஆனால் தற்போது மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக அந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் நியூ எண்டபிரைசஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜூன் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 03 வியாழக்கிழமை (18.06.2015) பக்கங்கள் IV ஓசை – 261

# சமூகவிரோத செயல்களுக்கு பிணை வழங்கப்படமாட்டாது

## நீதிபதி இளஞ்செழியன் பகிரங்க அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமூகவிரோதக் குற்றச் செயல்களுக்காக யாழ்ப்பாணம் பகுதியில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் தொடர்பில் பிணை கோரி செய்யப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு, இலகுவில் பிணை வழங்கப்பட மாட்டாது என்றும், சிலவேளை, அறவே பிணை கிடைக்காது என்றும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் நீதிமன்றில் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

சமூகவிரோதக் குற்றச்செயலுடன் சம்பந்தப்பட்ட வழக்கொன்றில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மீதான விசாரணையொன்றின் போதே, நீதிபதி இளஞ்செழியன் இதனைத் தெரிவித்துள்ளார்.

போதைவஸ்து குற்றங்கள், அபாயகரமான ஆயுதங்களை வைத்திருக்கும் குற்றங்கள், சுடுபடைக் கலன் சட்டத்தின் கீழான குற்றங்கள், வீதி வாள்வெட்டுக்கள், கோஷ்டி மோதல்கள், மற்றும் பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்கள் போன்ற குற்றங்கள் சமூக விரோதக் குற்றச் செயற்பாடுகளாகக் கணிக்கப்பட்டிருக்கின்றன.

சமூகத்தை அச்சுறுத்தி, சமூகத்தை சீரழிக்கின்ற இத்தகைய குற்றச் செயல்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ள பல நபர்கள், யாழ் மாவட்டத்தில் உள்ள நீதவான் நீதிமன்றங்களினால் சட்டப்படி பிணை வழங்க முடியாத நிலையில் விளக்கமறியலில் இருந்து வருகின்றார்கள். அதேபோன்று நீதிமன்றங்களில் பிணை மறுக்கப்பட்டவர்களும் விளக்கமறியலில் இருந்து வருகின்றார்கள். இத்தகைய சந்தேக நபர்களுக்கு பிணை கோரும், பிணை மனுக்கள் யாழ் மேல் நீதிமன்றத்தில், மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன.

இத்தகைய மனு ஒன்றின் மீதான விசாரணையின்போது, பிணை வழங்கும் நடைமுறை குறித்து நீதிபதி விள்க்கமளித்துள்ளார். போதைவஸ்துக் குற்றம், சட்டவிரோதமான ஆயுதங்களை வைத்திருக்கும் குற்றங்கள் போன்ற குற்றச்சாட்டுக்களில் சந்தேக நபர்களுக்கு

IV ஆம் பக்கம் பார்க்க

# கரைச்சி பிரதேச சபை உபதவிசாளரால் கொலை அச்சுறுத்தல்

## தொண்டமான்நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் பொலிஸில் முறைப்பாடு.

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் உப தவிசாளர் வடிவேல் நகுலேஸ்வரன் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தொண்டமான்நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மாரியப்பன் ஸ்ரீகாந் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த திங்கட்கிழமை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு என்னை அடித்து கொலை செய்வதாக கீழ் தரமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு அச்சுறுத்தியதுடன், எனது வீட்டிற்கு அன்றிரவு பத்து மணிக்கு சென்ற கரைச்சி பிரதேச சபையின் உப தவிசாளர் நகுலேஸ்வர்ன் எனது தாயாரிடம் மகனுக்கு எனது கையால்தான் சாவு என கடும் தொனியில் அச்சுறுத்தி சென்றுள்ளார்.

IV ஆம் பக்கம் பார்க்க

# பண விவகாரத்தால் கூட்டமைப்பில் குழப்பம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்புடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பணம் பெற்றனர் என்ற விடயம் குறித்து வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் குற்றச்சாட்டுத் தொடர்பில் அவரிடம் விளக்கம் கேட்டு மாவை எம்.பி. கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புடன் தொர்ட்ர்பு கொண்டு பணம் பெற்றனர் எனக் குற்றஞ்சாட்டும் நாடாளுமன்ற உறுப்

IV ஆம் பக்கம் பார்க்க

# சாவகச்சேரியில் விபத்து முதியவர் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட முதியவரை வாகன்ம் மோதியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இந்தச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரி ஏ-9 வீதியில் வீதியைக் கடக்கமுற்பட்ட முதியவரை தனியார் சாரதி

IV ஆம் பக்கம் பார்க்க

# நோன்பு நாளை ஆரம்பம்

(கொழும்பு)

புனித ரம்ழான் மாதத்திற்கான நோன்பு நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

நேற்று மாலை 6.30 மணிக்கு கொழும்பு பெரியபள்ளி

IV ஆம் பக்கம் பார்க்க

# மதுபோதையில் வாகனம் செலுத்திய சிறிதரன் எம்.பி.யின் சாரதி விளக்கமறியலில்

(கிளிநொச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் சாரதி மது போதையில் வாகனம் செலுத்திய போது கடந்த 4 ஆம் திகதி அன்று இரவு கிளிநொச்சி நகரில் போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலல் வைக்கப்பட்டுள்ளாா.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த வாரம் கிளிநொர்ச்சியில் மது போதையில் வாகனம் செலுத்திய போது கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் சாரதி சிவலிங்கம் கஜீபன் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் கடந்த 5 ஆம் திகதி முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தற்போது சாரதி

IV ஆம் பக்கம் பார்க்க

# குடாநாட்டில் பொதுமக்கள் மீது கூட்டமைப்பினர் தாக்குதல்

## ஈ.பி.டி.பி. கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது நாளாந்தம் சமூக விரோத செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை ஒருபுறம். பொது மக்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் மறுபுறம் என யுத்தம் முடிவுற்றதன் பின்னர் இன்று இச்சமூக விரோத செயற்பாடுகள் அதிகரித்த வண்ணமுள்ளன என ஈழ மக்கள ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள ஊடக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்செய்தியில் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான சமூக விரோத செயற்பாடுகள் தொடர்பில் பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்துவரும் நிலையில், எமது மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டுள்ள ஓர் அரசியல் கட்சி என்ற ரீதியில் நாம் இவ்வாறான சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் மறைமுக சக்திகள் தொடர்பில் அம்பலப்படுத்தி வருகின்றோம். இது தற்போது சட்ட ரீதியாகவும் உறுதிசெய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில், காரைநகர், வலந்தலைப் பகுதியிலுள்ள பொது மகன் ஒருவரின் வீட்டிற்குள் அத்துமீறிப் புகுந்து, அந்நபரைத் தாக்கியுள்ள காரைநகர் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவிசாளர் ஆனைமுகன் மற்றும் அவ

IV ஆம் பக்கம் பார்க்க

# இந்தியா – இலங்கை இடையே விரைவில் பேருந்து சேவை


(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பேருந்து மற்றும் ரயில் போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அகர்தலாவில் இருந்து பங்களாதேஷின் டாக்கா, பூட்டான், இந்தியா, நேபாளம் ஆகிய இடங்களுக்கு இடையில் பேருந்து சேவை உடன்பாடு செய்துகொள்ளப்பட்ட நிகழ்வில் இந்தத் தகவலை, இந்திய மத்திய வீதிப்போக்குவரத்துத்துறை அமைச்சர் நிட்டின் கட்காரி தெரி

IV ஆம் பக்கம் பார்க்க





கிளிநொச்சி மாவட்ட வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் முகாமையாளர் எஸ்.கெங்காதரனின் ஒழுங்குபடுத்தலில் அண்மையில் நடைபெற்ற புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்துகொண்ட பொதுமக்களையும் பிரதேச செயலக அதிகாரிகளையும் காணலாம். (77)

# போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் நவாலி வடக்கு தலுவில் வீதி

(நவாலி)

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நவாலி வடக்கு தலுவில் வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு மோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

சுமார் 40 வருடங்களுக்கு மேல் இவ்வீதி மீள்புனரமைப்பு செய்யப்படவில்லை என நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உரித்தான பிப்பிலி வீதியையும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான சங்கரத்தை வட்டுக்கோட்டை வீதியை இணைக்கும இணைப்பு வீதியாக நவாலி வடக்கு தலுவில் வீதி உள்ளது.

விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரச அதிகாரிகள் என தினமும் 800 முதல் 1200இற்கும் மேற்பட்டோர் இந்த தலுவில் வீதியை முழுமையாக பயன்படுத்துகின்றனர்.

பிரதேச சபைக்கு கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுத்து மக்கள் பங்கேற்பு திட்டத்திலும் முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளது.

எனவே, 2015-2016 ஆகிய காலப் பகுதியிலாவது வலி. தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சி.சி. மகேந்திரன் மக்கள் பயன்படுத்தும் முக்கிய வீதிக்கு முன்னுரிமை வழங்கி உதவ வேண்டும் என நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானமும் மீள் புனரமைப்பு இன்றி பற்றைக் காடாக காட்சி அளிக்கிறது.

இவ்மயானத்தையும் நில அளவை செய்து வலி. தென் மேற்கு பிரதேச சபை நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானம் என பெயர்ப்பலகை இட்டு அறிக் கையிடுமாறு கோரப்பட்ட போதிலும் எதுவும் இடம்பெறவில்லையென ஹேமலதா சனசமூக நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (92)

## பரிசளிப்பு விழா

(ஏழாலை)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதரக துணைத் தூதுவர் நடராஜன் கலந்துகொள்ளவுள்ளார். (66)

# வளி மண்டலவியல் திணைக்கள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

வளி மண்டலவியல் திணைக்களத்தில் அவதானிப்பாளர், தொடர்பாடலாளர் பதவிகளுக்கு பயிலுநர்களாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிகளை இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடாத்தவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பு உட்பட 10 மாவட்டங்களில் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவனைகளும் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.


அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் மற்றும் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 011-2785230, 0112177075 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பலாலியில் தேசிய வீரர் தினம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீரர் தினம் நேற்று பலாலியில் அனுஷ்டிக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், பலாலி இராணுவ முகாமில் உள்ள இராணுவ வீரர் சிலைக்கு மலர் வளையம் வைத்து வடமாகாண ஆளுநர் பள்ளியக்கார மற்றும், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி நந்தன உடவத்த உட்பட கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.



கடந்த 2012 ஆம் ஆண்டு பலாலி இராணுவ முகாமில் அமைக்கப்பட்ட இராணுவ வீரர் சிலையில், இந்த அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் இராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினாாகள்.

இதேவேளை, வடமாகாண ஆளுநர் பள்ளிக்கார வடமாகாண கல்வி மற்றும், சுகாதார, விவசாய அமைச்சுக்களுக்கு புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியதுடன், வடமாகாண அரசாங்க அதிபர்களுக்கும் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கிவைத்தார். (25)

# இஸ்லாமியர்களின் விசேட வணக்கமான நோன்பு நாளை ஆரம்பம்

இஸ்லாமிய மாதமான ரமழான் மாதம் பிறை தென்பட்டது முதல், பத்தாவது மாதம் ஷவ்வால் முதல் பிறை காணும் வரையான ஒரு மாத கால நோன்பே நாளை ஆரம்பமாகின்றது.

முஸ்லிம்கள் பிறை யைக் கணக்கிட்டு இந்த வணக்க வழிபாட்டை மேற் கொள்வதினால் பிறை தென்படுவதில் மாற்றங்கள் ஏற்படும்போது ஆரம்பத்திலும் முடிவிலும் சில மாற்றங்கள் ஏற்படலாம். இது முஸ்லிம்களின் கட்டாய வணக்க வழிபாடாக இருக்கின்றது. இதனைப் பொதுவாக 10 வயது சிறுவர்களிலிருந்து பெரியோர்கள் வரை மேற்கொள்கின்றனர். இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் மிக முக்கியமான ஒன்றாக இது காணப்படுகின்றது. நோன்பின் பிரதான நோக்கம் நாம் இறை அச்சம் - இறை பக்தியை எம்மில் வளர்த்துக் கொள்வதற்கேயாகும். இறை பக்தி மனிதனில் ஏற்படும்போது ஏனைய செயல்கள் மிகவும் நல்ல முறையில் அமையும்.

வாழ்க்கை எனும் பாதையில் பயணிக்கும் மனிதனின் முன்னிலையில் உலக கவர்ச்சி கள், விருப்பு, வெறுப்புகள், பாவங் கள், அநியாயங்கள் போன்றன முட்களாகவும், கற்களாகவும் காணப்படும். அவற்றை கடந்து செல்லும் அவன் மிகக் கவனமாக அவற்றை விட்டும் விலகி நன்மைகளை வாரிக் கொண்டு தனது இலட்சியப் பயணத்தை தொடர வேண்டும். இந்த மனோ பக்குவத்தை நோன்பு ஏற்படுத்துகின்றது.

மேலும் இவ் ரமழான் மாதத்தில் தான் இஸ்லாமியர்களின் புனித வேதமான மனிதர்களுக்கான நேர்வழியும், வழிகாட்டல்களும், சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்தறியக் கூடிய தன்மை கொண்ட 'அல்குர் ஆன்' அருளப்பட்டது. இதனால் இம்மாதம் மிகவும் சிறப்பு பொருந்தியதாகும் நோன்பு என்பதை விளக்கிக் கூறுவதாயின் அதிகாலை முதல் (4.30) - மாலை (6.30) வரை எவ்வித உணவுகளையும், பானங்களையும் (தண்ணீரும்) உட்கொள்ளாமல் அல்லாஹ்வுக்காக மேற்கொள்ளும் ஒரு வணக்க வழிபாடாகும்.

மேலும் நோன்பின் நோக்கங்களில் ஒன்றாக "ஏழைகளின் பசி", "தாக உணர்வுகளை" எல்லோரும் உணர்ந்துகொள்வதற்கு இது வாய்ப்பாக அமைகின்றது. இன்னும் இஸ்லாம் வன்முறையாக இதனை செய்யுமாறு ஏவவில்லை. "கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வயோதிபர்கள், நோயாளிகள், பிராயணிகள்" போன்றோரகளுக்கு சலுகைகள் வழங்கி தவிர்க்க சந்தர்ப்பம் வழங்கியதுடன், அவர்கள் பின்னர் அதனை முடியுமானபோது நோற்க அனுமதி வழங்கியுள்ளமையும் இஸ்லத்தின் மென்மை போக்கைக் காட்டுகின்றது.

இவ்வாறாக இஸ்லத்தின் வருடா வருடம் இஸ்லாமியர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் ரமழான் மாத நோன்பு வழிபாட்டின் மூலம் நாம் பெறும் இறையச்சத்தைக் கொண்டு அதில் பெற்ற பயிற்சி மூலம் ஏனைய 11 மாதங்களும் அவ்வாறே நல்ல முறையில் எமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதனையும் இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

அவ்வாறு, "எவர் ரமழான் மாதத்தில் ஈமானோடு நன்மையை எதிர்பார்த்து நோன்பு நோற்கின்றாரோ அவரது முன்னைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்" (றதீஸ்) மேலும் "ரய்யான்" எனப்படும் சுவனமும் அவருக்கு மறுமையில் காத்திருக்கும்.

இவ்வாறான பல சிறப்பம்சங்களைக் கொண்ட ரமழான் "நோன்பே" நாளை ஆரம்பமாகின்றது. இதனை உலக முஸ்லிம்கள் மிகவும் ஆரவாரமாக வரவேற்பதுடன் அனைவரும் தயாராகவும் உள்ளனர்.

தொகுப்பு:
**நைனா முஹமட் அப்துல்லாஹ்**
யாழ். மாவட்ட சிறுவர் சபை செயலாளர்
(யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவன்)

## கைதடியில் விபத்து

(யாழ்ப்பாணம்)


கைதடியில் கடந்த செவ்வாய்க்கிழமை வீதியைக் கடக்க முற்பட்ட சிறுவன் ஒருவன் மோட்டார் சைக்கிளில் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார்.

கைதடி மேற்கு கைதடியைச் சேர்ந்த விவேகானந்தராசா ஜஸ்மிலன் (வயது - 6) என்ற கலைவாணி வித்தியாலய மாணவனே படுகாயமடைந்துள்ளார். இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்ற கே. யோககாந்தன் (வயது-23) என்ற மந்துவிலைச் சேர்ந்த இளைஞரும் காயமடைந்துள்ளார்.

கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடு நோக்கிச் சென்ற சிறுவனே வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார். இதன்போதே விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# கொட்டகையில் கல்விகற்ற நிலையை முடிவுக்குக் கொண்டு வந்தோம்

## பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



மீள்குடியேற்றத்தின் பின்னர் மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளுக்காக சகல பாடசாலைகளுக்கும் அடிப்படை வசதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதில் நாம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினோம். இதன் மூலம் மாணவர்கள் கொட்டகையில் கல்விகற்ற நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின வடமராட்சி அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு, ஆழியவளை கலைவாணி முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியவில் முன்பள்ளித் தலைவர் வி.பிரசாந்தன் தலைமையில் அருணோதயா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசும்போதே தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மீள்குடியேற்றத்தின் பின்னர் மணற்காடு முதல் கேவில்வரை உள்ள பாடசாலைகள் அனைத்திற்கும் அடிப்படைத் தேவையான சொந்தக் கட்டடங்களை அமைப்பதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றினோம். அன்று கொட்டகையில் கல்விகற்ற நிலையை மாற்றி இன்று அனைத்துப் பாடசாலைகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆழியவளை பிரதேசத்திற்கு கடந்த காலத்தில் மீனவர் சந்தைக்கு மலசலகூடம், கலைவாணி முன்பள்ளிக்கு சுற்றுவேலி, தளபாடம், மேலத்தேய வாத்தியக் கருவிகள் எனப் பல்வேறு தேவைகளுக்கு ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நிதி ஒதுக்கித் தந்திருந்தார்.

ஆழியவளை சி.சி.த.க பாடசாலைக்கும் பாண்ட் வாத்தியக் கருவிகளும் அவரது ஒதுக்கீட்டின்மூலம் கிடைக்கப்பெற்றிருந்தன. அதேபோன்று கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகத்திற்கும் அருணோதயா விளையாட்டுக் கழகத்திற்கும் விளையாட்டு உபகரணங்கள் அவரது நிதி ஒதுக்கீட்டில் பெற்றுத் தரப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு தேவைகளை நாம் இனங்கண்டு நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம். ஆனால் பிரதேசசபையால் இப்பகுதி உளளக வீதிகள் புனரமைக்கப்படாமல் உள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இன்னும் ஒன்றரை மாதத்தில் சபைகளின் ஆட்சிக் காலம் நிறைவடைகின்றது. எனவே இவ்வீதிகள் புனரமைப்பு என்பது சாத்தியமற்ற விடயமாகவுள்ளது. இதற்கு ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள்தான் பதிலளிக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இப்போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச செயலர் கே.கனகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக ஆழியவளை சி.சி.த.க பாடசாலை அதிபர் கே.பாஸ்கரன், கௌரவ விருந்தினர்களாக மருதங்கேணி பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி எஸ்.ஜெயந்தினி, சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி சிவாஸ்கரன் றம்சியா, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பி.சுஜிதா மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலை வைத்தியர் வேலுப்பிள்ளை சிவநேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# குடிநீர் பிரச்சினையில் பொன்னகர் மக்கள்

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேசசபைக்குட்பட்டபொன்னகர் 72 வீட்டுத்திட்ட குடும்பங்கள் குடிதண்ணீருக்கு மிகவும் துன்பமானநிலையை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களுக்கு நீர் வழங்கல் சபையினால் வழங்கப்பட்டுவரும் குடிநீர் போதுமானதாக இல்லை. இதனால் இங்குவாழும் மக்களுக்கான குடிநீரைப் பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வதோடு, குடிநீர் பிரச்சினையினை தொடர்பில் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (77)

# நந்திக்கடல் மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

முல்லைத்தீவு நந்திக்கடல் பரப்பில் தொழிலில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கிவந்த சட்ட விரோத மீன்பிடியாளர்களின் தலையீட்டிற்கு முடிவுகட்டும் விசேட கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட பிரதான அமைப்பாளருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாறூக் , முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் பொறுப்பதிகாரி என பல அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தர்.

நந்திக்கடல் பரப்பில் சட்டரீதியாக தொழிலில் ஈடுபட்டு வரும் சில கிராமங்களைச் சேர்ந்த பல தொழிலாளர்கள் இதில் கலந்துகொண்டு அவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள பொறுப்பதிகாரிகளோடு மீன்பிடி தொழிலாளர்களையும் உள்ளடக்கி சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இவர்கள் எதிர்நோக்கிவந்த பிரச்சினைகளுக்கு முறைப்பாட்டாளர்கள் ஏற்றுக்கொள்ளும் விதமாக சுமுகமான தீர்வை நாடாளுமன்ற உறுப்பினர் பெற்றுக் கொடுத்தார். (160)

# அம்பலப்பெருமாள் குளம் வான்பகுதியில் மின்கம்பங்கள்

முல்லைத்தீவு துணுக்காய் அம்பலப்பெருமாள்குள்ம் வான்பகுதி வழியாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ள்மை எதிர்காலத்தில் மின் வழங்கல்கள் இடம்பெறும்போது நெருக்கடிகள் ஏற்படுமென கிராம மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கிராமத்திற்கு தற்போதுதான் மின்கம்பங்கள் நாட்டப்படுகின்றன. கிராமத்தின் வீதிகள் வழியாக நாட்டவேண்டிய மின்கம்பங்கள் தற்போது இக்கிராமத்தின் போக்குவரத்துப் பாதையாகவுள்ள வான்வழிப் பாதையூடாக நாட்டப்பட்டுள்ளன. மாரிகால மழைவெள்ளம் ஏற்பட்டு இக்குளம் வான்வெள்ளம் பாய்கின்றபோது குளத்தின் வான்பகுதியில் நாட்டப்பட்டுள்ள மின்கம்பங்கள் வான்வெள்ளத்தினால் அரித்துச்செல்லப்படுகின்ற நிலைமை ஏற்படலாம். இது தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மின்கம்பங்களை நாட்டியவர்களிடம் சற்றுத் தொலைவாக மின்கம்பங்களை நாட்டுங்கள் என்று கூறியபோதிலும் வான்பகுதியூடாகவே மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் வான் வெள்ளம் பாய்கின்றபோது மின் கம்பங்கள் சரிந்துவிழக்கூடிய அபாயம் உள்ளது.

துணுக்காயின் பழைய முறிகண்டிக்குளம் நிரம்பி அம்பலப்பெருமாள் குளத்தினை வந்தடைந்து அம்பலப்பெருமாள் குளம் வான்வெள்ளம் பாய்கின்ற பகுதியிலேயே தற்போது அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம் ஆகிய கிராமங்களுக்குரிய மின்வழங்கலுக்கான மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குழப்பம் விளைவித்த 20 இளைஞர்கள் கைது

## எச்சரிக்கையின் பின் விடுதலை


(நெல்லியடி)

நெல்லியடிப் பகுதியில் நேற்று மாலை வீதிகளில் நின்று பொதுமக்கள் மற்றும் மாணவர்களுடன் சேட்டைகளில் ஈடுபட்ட 20 இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், நேற்று மாலை 5.00 மணி முதல் 7.00 மணிவரை வீதிகளில் நின்று குழப்பங்களை விளைவித்த 20 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டனர்.

தொடர்ந்து பொலிஸ் நிலையங்களுக்கு இவர்களின் பெற்றோர் வரவழைக்கப்பட்டு பெற்றோருக்கும், இளைஞர்களுக்கும அறிவுரைகள் வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இனிவரும் காலங்களில் இவ்வாறு கைதுசெய்யப்பட்டால சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்னர். (18)



நேற்று நடைபெற்ற நயினை நாகபூஷணி அம்மன் கொடியேற்றத் திருவிழாவின்போது, கொடி ஏற்றப்படுவதனையும், அன்னை பக்தர்கள் புடைசூழ உள்வீதி வலம் வருவதனையும், கலந்துகொண்ட பக்தர்களையும் காணலாம். (21)

# தியத்தலாவ முகாமில் சீன இராணுவ அதிகாரிகள்



(கொழும்பு)

இராணுவத்தின் தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சீனாவின் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

தியத்தலாவ பயிற்சி முகாமில், சீனாவினால் அமைக்கப்படும் மண்டபத் தொகுதி கட்டுமானத்தின் தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து மீளாய்வு செய்யவே சீன இராணுவ அதிகாரிகள் குழு இங்கு வந்திருக்கிறது.

சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் அதிகாரிகள் தலைமையகத்தின் இராணுவப் பயிற்சி திணைக்கள அரசியல் ஆணையாளர் மேஜர் ஜெனரல் செங் ஜியாங் தலைமையிலான ஆறு பேர் கொண்ட நிபுணர் குழுவே இந்த ஆய்வை மேற்கொள்கிறது.

நேற்று தியத்தலாவ பயிற்சி முகாமுக்கு வந்த இந்தக் குழுவினர், இராணுவப் பயிற்சிப் பிரிவு பணிப்பாளர் மேஜர் ஜெனரல் மனோ பெரேரா, தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாம் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ராஜகுரு ஆகியோருடன் நீண்ட பேச்சுக்களை நடத்தினர்.

## தலைக்கவச தாக்குதல்

(நெல்லியடி)

நெல்லியடி கோவில் சந்திப் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் சமுர்த்தி உத்தியோகஸ்தர் ஒருவர் காயமடைந்து மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை தாமரைக் குளத்தடியைச் சேர்ந்த அருளானந்தம் என்பவர் குறித்த வீதி வழியாக வந்து கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தலைக் கவசத்தினால் தாக்குதல் நடத்திவிட்டு தப்பி ஓடியுள்ளனர். (18)

# சுயதொழில் கடனுதவி



(யாழ்ப்பாணம்)

வறுமைக்கோட்டிற்கு கீழ்ப்பட்ட 31 குடும்பங்களுக்கு சுயதொழிலுக்கான கடனுதவியினை யாழ். வணிகர் கழகம் வழங்கி வைத்தது. யாழ். மானிப்பாய் வீதியில் உள்ள வணிகர் கழக மண்டபத்தில் நேற்று புதன்கிழமை மாலை இந்த கடனுதவி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெய்சேகரம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கடனுதவி வழங்கும் நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செந்தில் நந்தன் கலந்து கொண்டு சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கடனுதவிகளை வழங்கி வைத்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கடனுதவி வழங்கும் நிகழ்வு நேற்று நல்லூர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்மதிற்குட்பட்ட 31 பேருக்கு 10 ஆயிரம் ரூபா பணம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் எழிலரசி மற்றும் நல்லூர் பிரதேச சபை திட்டமிடல், வணிகர் கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (25)

## இந்தியா...

வித்துள்ளார்.

இலங்கைக்கான வீதி அமைப்பை பாக்கு நீரிணையின் ஊடாக பாலம் அமைப்பதன் மூலம் மேற்கொள்ள முடியும். அத்துடன் கடலுக்கடி சுரங்கம் மூலம் மேற்கொள்ளமுடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தனுஸ்கோடிக்கும் இலங்கையின் எல்லைக்கும் இடையில் 23 கிலோமீற்றர் தூரமே உள்ளது.

பாம்பன் நகரில் இருந்து இலங்கையின் தலைமன்னாருக்கு 29 கிலோமீற்றர் தூரமே உள்ளது.

இந்தநிலையில், குறித்த பேருந்து மற்றும் ரயில் சேவைகளுக்கான திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதலுக்காக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நிர்மாண நிதியாக 23 ஆயிரம் கோடி ரூபா தேவையென்று மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கட்காரி தெரிவித்துள்ளார்.

## சாவகச்சேரி..

பயிற்சி நிறுவனத்தின் வாகனம் மோதியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். சரசாலை வடக்கைச் சேர்ந்த ஏ.நல்லதம்பி (வயது - 75) என்பவரே உயிரிழந்தவராவார். சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## நோன்பு..

வாசலில் நடைபெற்ற பிறை பார்க்கும் மாநாட்டில் நாட்டின் எப்பகுதியிலும் பிறை தென் படாத காரணத்தினால் நாளை வெள்ளிக்கிழமை நோன்பை ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

## மது..

வவுனியா சிறைச்சாயில் வைக்கப்பட்டுள்ளார்

மற்றவர்களுக்கு எல்லாம் உபதேசம் செய்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தனது பணியாளர்களை ஒழுக்கமுடையவர் களாக வைத்திருப்பது இல்லை பலராலும் குற்றம் சாட்டப்படுகிறது

## பண...

பினர்களின் விபரங்களை கட்சித் தலைமைக்கு முதலமைச்சர் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மின்னஞ்சல் மூலம் முதலமைச்சருக்கு மாவை எம்.பி கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

## கரைச்சி..

மத்திய அரசின் கிரா மத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற நிதியினை கொண்டு தொண்டமான்நகர் கிராமத்தில் அபிவிருத்தி பணியை மேற்கொள்ளவிருந்த நிலையில் குறித்த அபிவிருத்திப் பணியை தன்னிடம் வழங்குமாறு கோரியிருந்தார். ஆனால் குறித்த பணி பிரதேச செயலகம் அரசாங்க விதிமுறைகளுக்கு அமைவாவே வழங்கும் நிலையில் காணப்பட்ட போதே கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும் உபதவிசாளருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டது அதன் விளைவாகவே தொண்டமான்நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் என்ற நான்தான் இதற்கெல்லாம் காரணம் என்று என்னை அச்சுறுத்தி வருகின்றார். எனத்தெரிவித்த தொண்டமான்நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஸ்ரீகாந்த இதனால் தானும் தனது குடும்பமும் பெரும் அச்சத்துடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார். இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபையின் உபதவிசாளர் வடிவேல் நகுலேஸ்வனிடம் கேட்ட போது. கிராமத்துக்க ஒரு மில்லின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தொண்டமான்கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஸ்ரீகாந்த தன்னுடன் முரண்பட்டதாகவும் பதிலுக்கு தானும் முரண்பட்டதாகவும் குறிப்பிட்டார். (29)

## சமூக...

மேல் நீதிமன்றத்தில் மட்டுமே, பிணை வழங்கப்பட வேண்டும் என்று சட்டம் பரிந்துரைத்திருக்கின்றது. சமூகத்தில் மக்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்பதுடன், சமூகத்தைப் பாதுகாப்பதற்காகவும், நல்லொழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்குவதற்காகவும், சமூகவிரோதக் குற்றங்களைப் புரிகின்ற சந்தேக நபர்களுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி தற்துணிவின் அடிப்படையிலும், விதிவிலக்கான காரணங்களின் அடிப்படையிலும் மட்டுமே பிணை வழங்க முடியும் என்றும் சட்டம் கூறுகின்றது. சமூக விரோதக் குற்றச்செய்ல்கள் அதிகரிப்பதனால் சமூகத்தில் கிளர்ச்சி எழுகின்ற நிலையிலும் பிணை வழங்கப்படக் கூடாது என பிணை வழங்கும் சட்டத்தின் 14 ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு நிலைமை யாழ்ப்பாணத்தில் இப்போது ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டியது நீதிபதிகளின் கடமையாகும்.

எனவே, யாழ்ப்பாணத்தில் சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு இந்த நீதிமன்றில் இலகுவில் பிணை கிடையாது. சில வேளைகளில் பிணை அறவே கிடையாமலும் போகலாம். எவ்வளவு காலமாக இருந்தாலும் சமூகவிரோதக் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களின் வழக்கு பூரணமாக முடிவடையும் வரையில், விளக்கமறியல் உத்தரவில் மறியற்சாலையில் தடுத்து வைத்தே அவர்கள் மீது விசாரணை நடத்தப்படும் எனவும் நீதிபதி இளஞ்செழியன் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை தனக்கு உண்டு என தெரிவித்துள்ள நீதிபதி, சமூக விரோதக் குற்றம் செய்பவர்கள் வெளியில் நடமாடினால், சமூகம் நிம்மதியாக இருக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். சமூகவிரோதக் குற்றச் செயற்பாடுகளுக்காகக் கைது செய்யப்பட்ட நபர்களின் தாய், தந்தையர், நீதிமன்றப் படிகளில் கண்கலங்கிய வண்ணம் இருக்கும் காட்சி வருந்தத்தக்கதாக இருந்தாலும், இவர்களை பிணையில் விட்டால், வெளியில் சமூகத்தில் பலர் கண்ணீர் விடுகின்ற அவலத்தைக் காண வேண்டிய சூழல் இருக்கின்றது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சமூகவிரோதக் குற்றச் சந்தேக நபர்களுக்கு பிணை கிடையாது என்ற எச்சரிக்கையானது,

இனிமேல் குற்றம் செய்யத் துணிபவர்களுக்கு மட்டுமல்ல, சமூக விரோதக் குற்றவாளிகளைப் பாதுகாக்கின்ற தாய், தந்தையருக்கும் மிகவும் முக்கியமானது எனவும் நீதிபதி கூறியுள்ளார். தெரிந்து கொண்டே தப்பு செய்வதென்பது குற்றமாகும். அது தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும்.. தெரியாமல் செய்வது தவறு. அது திருத்தப்பட வேண்டும். குற்றத்திற்கும், தவறுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை சட்டரீதியாகப் பிரித்தறிந்து, பிணை மனுக்கள் மீதான விசாரணை நடத்தப்படும். எனவே, சமூகக் குற்றச் செயல்களுக்கு இந்த நீதிமன்றத்தில் இலகுவில் பிணை கிடையாது. சில வேளை அறவே கிடையாது. சமூக விரோதக் குற்றச் செயல்களுக்கு, பிணை வழங்குவதும், மறுப்பதும் மேல் நீதிமன்ற நீதிபதியின் தற்துணிவு அதிகாரத்திற்கு உட்பட்டது என்று சட்டம் கூறுகின்றது.

எனவே, இலகுவில் பிணை வழங்கப்படமாட்டாது என்ற இந்த அறிவிப்பு தற்சமயம் சிறையில்வாடும் நபர்களுக்கான எச்சரிக்கை மட்டுமல்ல. இனிமேல், சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட முயற்சிக்கின்ற நபர்களுக்கான ஒரு முன்னெச்சரிக்கையுமாகும் என்று சமூக விரோதக் குற்றச் செயல்கள் தொடர்பான பிணை மனுக்களில் மேல் நீதிமன்ற நீதிபதியின் நிலைப்பாடு குறித்து நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

## குடா...

ரது அடியாட்கள் நால்வர் ஊர் காவற்துறைப் பொலிஸாரினால் கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்பதாகவும் மேற்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவிசாளர் ஆனைமுகனுக்கு எதிராக பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் இருப்பதாக காரைநகர் வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் இறுதியாக யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி, அடிதடியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் ஈடுபட்டிருந்த சம்பவத்தை ஆரம்பித்தவர் ஆனைமுகன் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். குடாநாட்டில் போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தல் செயற்பாடுகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு பாரிய பங்குண்டு என்பதை நாம் அம்பலப்படுத்தி வருகின்றோம். அதே நேரம், புங்குடுதீவு பாடசாலை மாணவி பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலை தொடர்பில் சந்தேக நபரான சுவிஸ் குமார் என்பவரைக் காப்பாற்றுவதிலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முக்கியஸ்தரான சட்டத்துறை பீடாதிபதி ஒருவருக்கும் தொடர்பு இருந்ததை ஊடகங்கள் பலவும் அம்பலப்படுத்தியிருந்தன. இதன் வரிசையில் பொது மக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அத்துமீறி பொது மக்களின் வீடுகளுக்குள் நுழையும் செயற்பாடுகளின் பின்னணியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு தொடர்புகள் இருப்பதையே ஆனைமுகன் மற்றும் அவரது அடியாட்களின் கைது உறுதிப்படுத்தியுள்ளது என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூன் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.